

KALKI 22.12.91
ரூ. 3.00
கல்கி
பொன்விழா ஆண்டு
வருஷம் முழுக்க உன்னை நினைச்சுப்பேன்
வாசகர்களுக்கு
500
ஏ.கில் டைரிகள்
பரிசு!

THE GINSENG HEALTH

# உங்களால் முடியும்!



பகிர்ந்து வாழ்வதில் ஏற்பட்ட மகிழ்ச்சி, ஒன்று கூடி இன்பமாகக் கழிந்த நாட்கள் இவையெல்லாம் நினைவிருக்கிறதா? ஆம், அந்நாட்களில் உள்ளம் நாடியதற்கேற்ப உடல் ஒத்துழைத்தது.

அந்நாட்களைத் திரும்பப் பெற வேண்டுமா? உபயோகியுங்கள் **வினோஃபிட்** ஜின்ஸெங்*.

**வினோஃபிட்**-ல் கொரியாவின் ஜின்ஸெங் மற்றும் இன்றியமையாத மூலிகைச் சாறுகள் சேர்ந்துள்ளதால் உடலின் இரத்த ஓட்டம், ஜீரண சக்தி மற்றும் இன்றியமையாத உறுப்புகளின் செயலாற்றம் மேம்படுத்தப்படுகிறது. மேலும், சோர்வு குறைந்து உடலில் சக்தி அதிகரிக்கிறது.

இதைத்தவிர, **வினோஃபிட்** சருமத்தை எழிலடையச் செய்து, நோய்களை எதிர்க்கும் திறனை உடலிற்கு அளித்து மூளையின் செயலாற்றலை அதிகரிக்கிறது.



(பெரிய அச்செழுத்துக்களில் எழுதவும்)

பெயர் : ..............................

முகவரி ..............................

..............................

நகரம் : .................... பின் : ......

**வினோஃபிட்**
ஜின்ஸெங்
வோக்ஹார்ட் வழங்கும் தரமான தயாரிப்பு

## வாழ்வில் துடிப்புணர்வுடன் வாழ.

# வானளாவிய அதிகாரங்களை வழங்கும் 'தடா' சட்டம்!

**ப**யங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் (Terrorist and disruptive activities (Prevention) Act) எனப்படும் 'தடா' சட்டம், 1985-ல் ராஜீவ் காந்தியின் ஆட்சியின் போது அவசர சட்டமாக அறிமுகம் ஆகி இரண்டு வருடம் கழித்து நமது சட்டத்தில் நிரந்தரமாக இடம்பெற்று விட்டது. இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்தும் போது, பஞ்சாப் மாநில நிலைமைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டு, அங்கு வன்முறைகளை ஒடுக்கவே இந்தச் சட்டம் என்று பாராளுமன்றத்தில் காங்கிரஸ் கட்சியினர் கூறினார்கள்.

இந்தச் சட்டத்தில் மிகத் தெளிவாகச் சொல்லப்படும் செய்தி என்னவென்றால் இதனை 'எடுத்தேன் - கவிழ்த்தேன்' என்று யாரும் பயன்படுத்தக் கூடாது என்பதுதான்! ஏற்கெனவே நடைமுறையில் இருக்கும் பல குற்றவியல் தடுப்புச் சட்டங்களைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலையில்தான் 'தடா' சட்டத்தைப் பயன்படுத்த வேண்டும்.

**ப**ல்வேறு சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டு, குற்றம் நிரூபிக்கப்பட்டவர்களின் தண்டனைக் காலம் பற்றி அந்தந்த சட்டங்களிலேயே கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் 'தடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவருக்கு, மற்ற குற்றவியல் சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டவரைக் காட்டிலும் தீவிரமான தண்டனை வழங்கலாம். இந்தச் சட்டப்படி குறைந்த தண்டனைக் காலம் ஐந்து வருடங்கள். ஆயுள் தண்டனையும் உண்டு.

தேசத் துரோக நடவடிக்கைக்கு ஒருவர் துணை போனாலோ, ஆயுதங்கள் பதுக்கி வைத்திருந்தாலோ, அல்லது ஆயுத நடமாட்டத்துக்கு உதவினாலோ, உற்பத்தி செய்தாலோ, 'தடா' பயன்படுத்தப்படலாம். இந்தச் சட்டப்படி கைது செய்யப்பட்டு, தண்டிக்கப்பட்டால், தண்டிக்கப்பட்டவரின், அசையும், அசையா சொத்துக்களைக் கைப்பற்ற அரசுக்கு உரிமை உண்டு. கைது செய்யப்பட்டவரின் ஜாமீன் மனு, இதற்காக நியமிக்கப்பட்ட ஸ்பெஷல் கோர்ட்டால் நிராகரிக்கப்பட்டால், பாதிக்கப்பட்டவர் சுப்ரீம் கோர்ட்டுக்குத்தான் போக வேண்டும்.

அதே போல், கைது செய்யப்பட்டவர் போலீஸ் அதிகாரியிடம் (கண்காணிப்பாளர் மற்றும் அதற்கும் மேலே உள்ளவர்கள்) ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தால், அதைக் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான சாட்சியமாகவே பயன்படுத்தப் போலீஸுக்கு உரிமை உண்டு.

'**த**டா' வழக்கு விசாரணை ரகசியமாக மட்டுமே நடத்தப்படும். குற்றவாளிகளைச் சாட்சிகள் அடையாளம் காட்டுவதற்கு ஆட்களை நேரில் நிறுத்தி வைக்க வேண்டும் என்பது அவசியமல்ல. புகைப்படத்தில் அடையாளம் காட்டினாலே போதும்!

இந்தச் சட்டத்தில் கூறியவற்றை மீறுபவர்கள் உடனடியாகக் கைது செய்யப்படலாம். ஸ்பெஷல் கோர்ட்டுகள் நியமிக்கத் தாமதம் ஏற்பட்டால், தடா கைதிகளை ஒரு வருடம் எங்கேயும் ஆஜர்படுத்தாமல் சிறையில் வைத்திருக்கலாம்.

\- கௌசல்யா

❑ மதுரை மத்திய தொகுதி, மதுரை கிழக்கு, மதுரை மேற்கு, திருப்பரங்குன்றம் ஆகிய நாலு சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்ட மதுரைவாசிகள், நான்கு வெவ்வேறு கட்சி (இ. காங்கிரஸ், அ. தி. மு. க. பொதுவுடைமைக் கட்சி, பார்வர்ட் பிளாக்) வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்து [redacted] ஒரு சாதனையை ஏற்படுத்தியவர்கள்! [redacted]

\- வெள்ளைகால் இரா. கந்தையா

# கள்ளச் சாராய ஒழிப்பு: 'ஜெ' வெற்றி பெறுவாரா?




சில வருடங்களுக்கு முன்னர் நடந்த நிகழ்ச்சி இது. தமிழ்நாட்டின் எல்லையை ஒட்டி உள்ள, ஆந்திராவைச் சேர்ந்த நாயுடு பேட்டையில் இருந்து சென்னைக்கு ஒரு பஸ் வந்து கொண்டிருந்தது. தமிழ்நாட்டில் எலாவூர் என்ற இடத்தின் அருகே, மது விலக்கு அமுல் போலீஸார் 'சாராயம் கடத்திக் கொண்டு வருகிறார்களா' என்று சோதனை செய்ய பஸ்ஸுக்குள் ஏறினார்கள். பிரயாணிகள் வைத்திருந்த பைகள், பெட்டிகள் எல்லாம் சோதனை செய்யப்பட்டன. ஒன்றும் கிடைக்கவில்லை. பஸ்ஸை விட்டு கீழே இறங்கும் சமயத்தில் எதேச்சையாக நோட்டம் விட்ட ஒரு போலீஸ்காரருக்கு, பஸ்ஸில் இருந்த பிரயாணிகளைப் பார்த்த போது, மிக வித்தியாசமாகப் பட்டது. அவர்களுள் பன்னிரண்டு பேர், கர்ப்பிணிப் பெண்களாக இருந்தார்கள்! சந்தேகம் உறுத்தவே ஒரு பெண்மணியை மட்டும் தனியே அழைத்துப் போய் 'விசாரணை' நடத்தினார்கள். எல்லா 'கர்ப்பிணி' பெண்களும் மடியில் சாராயப் பாக்கெட்டுகள் கட்டிக் கொண்டிருந்தது தெரியவந்தது.

''ஆந்திராவில் இருந்து சாராயம் கடத்துவதில் இதுவும் ஒரு வழிமுறை. இதைப் போல் சகல வழிகளிலும் தொடர்ந்து சரக்கு வந்து கொண்டுதான் இருக்கிறது'' என்கிறார் மதுவிலக்குத் துறை அதிகாரி ஒருவர்.

கலைஞர் மதுவிலக்கு பற்றிப் பேசும் போது ஒரு கருத்தை அடிக்கடி சொல்லுவார். அதாவது 'சுற்றி நெருப்பு பற்றி எரியும் போது நடுவில் இருக்கும் கற்பூரத்தை எரியாமல் காப்பாற்றுவது மிகவும் கஷ்டம். அது போல ஆந்திரா, கர்நாடகா, பாண்டிச்சேரியில், மதுவிலக்கு இல்லாமல் இருக்கும் போது தமிழ்நாட்டில் மட்டும் அமுல்படுத்துவது மிகவும் கஷ்டம்'' என்பது அவர் கருத்து.

அதனால்தானோ என்னவோ, குடி பற்றித் தெரியாமல் இருந்த ஒரு தலைமுறைக்குக் குடியை அறிமுகப்படுத்திய பெருமையைக் கலைஞர் தட்டிக் கொண்டு போய் விட்டார். 1971-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ம் தேதி, கள், சாராயக் கடைகளைத் திறந்து விட்டவர் கலைஞர்தான். அதன் பிறகு சாராயக் கடையை மூடுவது திறப்பது என்பது மக்களுடைய ஒழுக்கம், உடல்நலம் சம்பந்தப்பட்ட விஷயமாக இல்லாமல் அரசின் நிதி நிலையோடு சம்பந்தப்பட்ட ஒரு விஷயமாகப் போய் விட்டது. கூடவே அரசியல்வாதிகள், 'பணம்' பண்ணும் விஷயமாகவும் மாறி விட்டது என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஒரு



காவலர் ராமரை மருத்துவமனையில் சந்தித்துப் பாராட்டினார் முதல்வர்.

☛ ஒயின் ஷாப்களே பார்களாகி...



பக்கம் மதுபானக் கடைகள் (Wine shops) தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்க கள், சாராயக் கடைகளை மூடுவதும் திறப் பதுமாக நாடகம் நடந்து கொண்டிருக் கிறது. ஒயின்ஷாப் விஷயத்தில் மிகப் பெரிய மோசடி என்னவென்றால் மது வகைகளை விளம்பரப்படுத்தக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. அதனால் அதே மது பெயரில் சோடா, லெமனேட் பானங் களைத் தயாரித்து விஸ்கி விளம்பரங்கள் போலவே வெளியிடுவதுதான். இதைத் தடுக்க மத்திய மாநில அரசுகளுக்குத் துணி வில்லையே!



☛ இத்தகைய காட்சிகளைத் தெருவில் இன்னமும் பார்க்கிறோம்.

அண்டை மாநிலங்களிலிருந்து சாராயம் கடத்தப்படுவது ஒரு பக் கம் இருக்க, உள்ளூரிலேயே காய்ச் சப்படும் கள்ளச் சாராய உற்பத்தி யைத் தடுப்பது போலீஸாருக்குப் பெரிய போராட்டமாக இருக்கிறது. சென்னையைச் சுற்றி, பொழிச்சலூர், ஆலப்பாக்கம், பழந்தண்டலம், பழ வேற்காடு, கொட்டிவாக்கம் போன்ற இடங்கள் கள்ளச் சாராய உற்பத்திக்கு பெயர் போன இடங்கள். 'அரசே சாராயக் கடை களைத் திறக்க அனுமதி கொடுத் தால்தான் எங்களுக்குக் கள்ளச் சாரா யத்தைப் பிடிப்பது சுலபம்' என்கி றார் ஒரு போலீஸ் அதிகாரி. 'காரணம், லைசென்ஸ் பெற்றுக் கடை எடுப்பவர்கள், தங்கள் ஏரியாவில் கள்ளச் சாராயம் விற்கா மல் பார்த்துக் கொண்டால்தான், போட்ட பணத்தை எடுக்க முடியும்!' அப்புறம் அங்கே போலீஸுக்கு என்ன வேலை!

கள்ளச் சாராயம் காய்ச்சுவது ஒரு தனிக்கலை. அழுகிப் போன பழங்களை எடுத்து வந்து தண்ணீருடன் கலந்து பெரிய, பெரிய பானைகளில் போட்டு, பூமிக்கடி யில் புதைத்து வைப்பார்கள். இதற்கு 'ஊறல்' என்று பெயர். பின்னர், சில நாட்கள் கழித்து ஊறலை வெளியே எடுத்து நன்றாகக் கொதிக்க வைப்பார்கள். அப் போது ஆவியாக வருவதைக் குழாய் மூலம் பிடிப்பார்கள். இதுதான் சாராயம். ஆனால் அதிகமாக 'கிக்' ஏற வேண்டுமென்றால், இதில் ஆர். எஸ். பவுடர் அல்லது மொலா ஸிஸ்ஸிலிருந்து தயாரிக்கப்படும் எரி சாரா யம் போன்றவற்றைக் கலப்பார்கள். சாரா யம் படிப்படியாக உடல் ஆரோக்கியத்தைக் கெடுக்கிறது என்றால் 'கிக்' கிடைக்க இதுபோல் சேர்க்கப்படும் பொருள்கள் உட னடி விபரீத விளைவுகளை ஏற்படுத்தும். பார்வை இழப்பில் தொடங்கி மரணம் வரை எதுவேணுமானாலும் சம்பவிக்க லாம்.

''இந்த விஷயங்களெல்லாம் போலீ ஸாருக்குத் தெரியாததல்ல. அவர்கள் ரெய்டு வருவதற்கு முன்னர் எங்களுக்குச் செய்தி வந்து விடும். நாங்களும், அவர் களுக்கு ஏதாவது கேஸ் கிடைக்கட்டும் என்று ஒன்றிரண்டு ஊறல் பானைகளைக் காட்டிக் கொடுப்போம்'' என்கிறார், 'தொழிலில்' பல்லாண்டுகளாக இருக்கும் ஒருவர்.

ஏற்கெனவே எட்டு லட்சத்துக்கும் அதிகமான சாராய வழக்குகள் கோர்ட்டு களில் நிலுவையில் இருக்கின்றன. ''அரசு சாராய விற்பனையை நிறுத்தி விட்டதால், இப்போது கள்ளச் சாராய வியாபாரிகளுக் குக் கொண்டாட்டம்தான். பணம் அவர்கள் கஜானாவுக்கு அல்லவா போகிறது'' என்கி றார் அரசு அதிகாரி ஒருவர்.

''ரொம்ப கஷ்டமான காரியம் என்றா லும் இந்த அரசு கள்ளச் சாராய விஷயத்தில் மிகவும் ஸீரியஸாக இருக்கிறது. அதனால் தான் ஏதாவது ஏரியாவில் கள்ளச் சாராயம் காய்ச்சுவது, விற்பது தெரிந்தால் சம்பந் தப்பட்ட போலீஸ் அதிகாரிகள் மீது கடுமை யான நடவடிக்கை எடுக்கிறோம். பல கள்ளச் சாராய வியாபாரிகளையும் உற்பத்தி யாளர்களையும் குண்டர்கள் சட்டத்தில்



# "சட்டத்தால் மட்டும் சாதிக்க முடியாது"

கள்ளச் சாராயத்தை ஒழிக்கவும், மதுவிலக்கைத் தீவிரமாக அமுல்படுத்தவும், தமிழகத்தை ஏழு போலீஸ் சரகங்களாகப் பிரித்து ஒவ்வொரு சரகத்திற்கும் பொறுப்பாக, எஸ். பி. அந்தஸ்தில் உள்ள அதிகாரியை நியமித்து இருக்கிறது அரசு. வேலூர் அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர், சேலம், தர்மபுரி ஆகிய நான்கு மாவட்டங்கள் உள்ளிட்ட ஒரு சரகத்துக்கு நியமிக்கப்பட்டிருப்பவர் திருமதி அர்ச்சனா இராம சுந்தரம். அம்பேத்கார் மாவட்ட ஆட்சியாளர் இராம சுந்தரத்தின் துணைவி இவர்.

அர்ச்சனா பிறந்து, வளர்ந்து, படித்தது எல்லாம் டில்லியில்தான். அப்பா மிஸ்ரா, மாஜிஸ்ட்ரேட்டாக இருந்தவர். ரொம்பவும் கட்டுப்பாடான குடும்பம். "என் அப்பா அவ்வளவு சனாதனவாதியாக இருந்தாலும், என்னை ஐ.பி.எஸ். படிக்க வைத்ததன் மூலமும், என் கணவரைக் காதல் கல்யாணம் செய்து கொள்ள அனுமதித்ததன் மூலமும் அவரது முற்போக்கு முகத்தைக் காட்டிவிட்டார். எனக்கு இன்ப அதிர்ச்சி தந்த விஷயங்கள் அவை" என்கிறார் அர்ச்சனா. மதுரையில் உதவி கண்காணிப்பாளராகவும், நீலகிரியில் கண்காணிப்பாளராகவும் பணியாற்றி இருக்கிறார் அர்ச்சனா.

"இருந்தாலும் இப்போது எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த போஸ்ட்டிங் உண்மையிலேயே மனநிறைவு தரத்தக்க போஸ்டிங். காவல் துறை சேவை என்பது ஒரு சமூக சேவை என்ற என் எண்ணத்திற்கு ஏற்ற போஸ்டிங்" என்கிறார் அர்ச்சனா. அவருடன் ஒரு பேட்டி :

நிருபர் : உங்கள் பணியைத் துவங்கி விட்டீர்களா?

அர்ச்சனா : எல்லா ஏற்பாடுகளும் மும்முரமாக நடந்து கொண்டிருக்கின்றன. கள்ளச் சாராயத்தை ஒழிப்பதில் அரசு மிகவும் தீவிரமாக இருக்கிறது. வரும் வருடம், கள்ளச் சாராய உற்பத்தியாளர்களுக்கும், வியாபாரிகளுக்கும் மிகவும் சோதனையான

உள்ளே தள்ளியிருக்கிறோம்" என்கிறார் அந்த அதிகாரி.

ஆனால் போலீஸிலேயே இன்னொரு தரப்பில் விசாரித்த போது, இந்த விஷயத்தில் இன்னமும் ஒரு தயக்கம் இருப்பது புரிந்தது.

"சமீபத்தில் கோயமுத்தூர் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர், பெரிய கள்ளச் சாராயத் தொழிற்சாலையைக் கண்டுபிடித்து அழித்தார். ஆனால் நடந்தது என்ன? அந்த கண்காணிப்பாளர் மாற்றப்பட்டார். அந்த உற்பத்தியாளரும் ஜாமீனில் வெளிவந்து விட்டார். அரசியல்வாதிகளின் பண அரிப்பைத் தீர்ப்பது இதுபோன்ற உற்பத்தியாளர்கள் - வியாபாரிகள் என்பதால், நாங்கள் துணிந்து நடவடிக்கை எடுக்க யோசிக்க வேண்டியிருக்கிறது" என்றார் போலீஸ் அதிகாரி ஒருவர்.

ஒயின் ஷாப்புகள் பல 'பார்'களாகவும் இன்று செயல்படுவது ஊரறிந்த ரகசியம். இந்த விஷயத்தில் நடவடிக்கை எடுக்கவும் காவல் துறை முழுச் சுதந்திரத்துடன் செயல்பட முடிவதில்லை போலும்.

கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கான மதுவிலக்கு போலீஸின் பிரிவுக்குத் தலைமையேற்க அலெக்ஸாண்டர் என்ற திறமையான போலீஸ் அதிகாரியை அரசு நியமித்து இருக்கிறது. ஆனால் அவருக்கு, உதவியாக எந்த அலுவலர்களும் இதுவரை நியமிக்கப்படவில்லை. மாவட்டங்களிலும் இதே நிலைமைதான். கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களே தவிர சார்பு அலுவலர்கள் கிடையாது. வண்டிகள் கிடையாது. தனி அலுவலகம் கிடையாது. காரணம் மிகவும் சிக்கலான நிதி நிலைமைதான்.

இதற்கிடையில் கடுமையான நிதி

வருடம் என்பதில் சந்தேகமில்லை.

நிருபர் : உங்களுடைய செயல்முறை எப்படி இருக்கும்?

அர்ச்சனா : இங்கே நாலு பாக்கெட்டுகள், அங்கே நாலு பாக்கெட்டுகள் என்று பிடிப்பதில் மட்டும் திருப்தி அடையாமல் பிரச்னையின் ஆழத்திற்கே சென்று பார்க்க விரும்புகிறேன். கள்ளச் சாராயம் தயாரிப்புக்குத் தேவையான மூலப் பொருட்களைக் கிடைக்க விடாமல் தடைசெய்து விட்டால் உற்பத்தியை நிறுத்தி விடலாம். என்னுடைய சரகத்தில் அண்டை மாநில எல்லைகளும் வருகின்றன. அங்கே கடத்தலைத் தடுப்பதற்குப் பறக்கும் படைகளையும் அமைத்திருக்கிறோம். சரியான முறையில் துப்புக் கொடுக்க, மாணவர்களையும், பெண்களையும் பயன்படுத்தலாம். நான் பெண்ணாக இருப்பதால், கிராமத்துப் பெண்களிடம் என்னால் சகஜமாக (தமிழ்) பேச முடியும்.

நிருபர் : கள்ளச் சாராயத்தை ஒழித்து விட முடியும் என்று மனப்பூர்வமாக நம்புகிறீர்களா?

அர்ச்சனா : சட்டத்தால் மட்டுமே சாதிக்கக்கூடிய விஷயமல்ல அது. இந்தப் பிரச்னைக்குச் சமூகக் கோணம் இருக்கிறது. இது ஒரு தொடர் போராட்டம். மக்களுடைய, கல்வி, பொருளாதாரம், பண்பாடு, ஒழுக்கம், உடல் நலம் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்னை இது. பல முனைகளில் போராட வேண்டியிருக்கிறது. மக்களிடையே மன மாற்றம்தான் தேவை. என்னைப் பொறுத்த வரையில், மிக அவசியமான போது மட்டுமே சட்டத்தைப் பயன்படுத்த விரும்புகிறேன். மக்கள் மனமாற்றமே பிரச்னைக்கு நிரந்தர தீர்வு. அதை நோக்கியே என் பயணம்.

படம் : ராஜன்

---


நிலையை எதிர்கொள்வதற்கு, பாக்கெட்டுகளில் மீண்டும் சாராயம் விற்கலாமோ என்று அரசு யோசித்து வருகிறதாகச் சொன்னார் 'கோட்டை'யின் மூத்த அதிகாரி ஒருவர்! ''பல மக்கள்நலத் திட்டங்களைச் செயல்படுத்தப் பணம் வேண்டியிருக்கிறது. வோட்டுக்களோடு சம்பந்தப்பட்ட விஷயம் இது. அதனால் கஜானாவிற்குப் பணம் திரட்டுவது அரசின் முதல் வேலை'' என்றார் அவர்.

தமிழக முதல்வரோ கள்ளச் சாராயம் கடத்தியவர்களுடன் போராடிக் காயமுற்ற காவல் துறை ஊழியரை மருத்துவமனையில் சந்தித்துப் பாராட்டியிருக்கிறார். தமது சொந்தப் பணத்திலிருந்து அவருக்குப் பத்தாயிரம் ரூபாய் அளித்திருக்கிறார். முதல் தேர்தல் வாக்குறுதியை முதல்வர் அவ்வளவு சீக்கிரம் மறந்து விட மாட்டார் என்று தோன்றுகிறது.

- ப்ரியன்

---

## மனித கிறிஸ்துமஸ் மரம்



பதினான்கு இளைஞர்கள், 41 இளம் பெண்கள் கிறிஸ்துமஸ் மர வடிவமாய் ஒருங்கிணைந்து நின்றது கண்ணுக்கு விருந்து. 25 அடி உயரமும், அடிவாரத்தில் 30 அடி அகலமும் கொண்ட இந்த 'மனித மரம்' தோத்திரப் பாடல்களைப் பாடியது செவிக்கு விருந்து. கே. வி. மாத்யூவைத் தலைவராகக் கொண்ட எக்யூமெனிகல் ஃபெல்லோஷிப் என்ற அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டது இந்த நிகழ்ச்சி.

ஐந்து டன் சவுக்குக் கழிகளைக் கொண்டு உறுதியான படிகள் அமைத்துத் தந்தவர் பொறியாளர் அலெக்ஸ் ஜேகப். பச்சை விரிப்பையும் பசுஞ் செடிகளையும் பயன்படுத்திப் படிகளைக் கலையுணர்வுடன் அலங்கரித்து, சரிகைத் தோரணங்கள் தொங்க விட்டு, உச்சியில் சிவப்பு நட்சத்திரம் பொருத்தியிருந்தார்கள்.

உச்சியில் நின்று பாடிய அனுபவம் ''ஜஸ்ட் கிரேட்'' என்று கண்கள் அகலக் கூறுகிறார் 19 வயது டயானா கில்பர்ட். பயிற்சியாளர் ''யார் யாருக்கு விருப்பமோ அவர்கள் மேலே போகலாம்'' என்று கூற, ஓடிச் சென்று உச்சி இடத்தைப் பிடித்தவர் இவர்.

''இரண்டு நாட்களுக்குப் பின், எல்லோரைக் காட்டிலும் உயரமான ஜார்ஜ் பயிற்சிக்கு வந்த போது என் இடத்தை அவருக்கு விட்டுக் கொடுக்கும்படிச் சொன்னார்கள்; கண்டிப்பாக மறுத்து விட்டேன்!'' என்று சிரித்தபடி சொல்கிறார் டயானா.

– நிர்மலா சக்ரவர்த்தி

# 'அந்த நாள் ஞாபகம் வந்ததே!'

◆ 'அன்புள்ள அம்மு' கடிதத்துக்கு ஒரு சிறு விளக்கம். ஒரு பொது இடத்தில் 'பெண் பார்க்கும் பழக்கம்' தமிழ்நாட்டில் வழக்கத்தில் இருந்து வருகிறது. ஆம், செட்டி நாட்டில் நாட்டுக்கோட்டைச் செட்டியார் வீட்டு மாப்பிள்ளைகள் நகரச்சிவன் கோவில்களில் பெண்ணைப் பார்க்கிறார்கள். இது போல் பங்குனிப் பொங்கல் சமயத்தில் விருதுநகரில் நடக்கும் பொருட்காட்சி - திருவிழாவில் நாடார் வீட்டுப் பையன்கள் பெண்ணைப் பார்க்கும் வழக்கமும் இருக்கிறது.

காரைக்குடி, ஜி.நிர்மலா அய்யங்கர்.

◆ டி. ஜி. பி. துரையின் மரணத்தில் கூட, சர்ச்சை எழுந்துள்ள இச் சூழ்நிலையில், அவரது ஆத்மா சாந்தியடையும் வண்ணம் அவரது மனிதாபிமானம் பற்றி வெளியிட்ட கல்கியின் பாங்கு போற்றுதற்குரியது!

அரவக்குறிச்சிப்பட்டி, எம். அசோக்ராஜா.

◆ ரிஷபன் அவர்களின் 'இடம்' சிறுகதை மனித உறவுகளைப் பலப்படுத்தும் அருமையான படைப்பு. போராட்டமே வாழ்க்கை. நம்மை நோக்கிச்சீறுகிற அலை அடங்கத்தானே செய்யும். பிரச்னைகளின் தீவிரமும் அப்படித்தான். பிரச்னைகளால் முகம் கவிழ்த்து அழாமல், நெஞ்சு நிமிர்த்தி வலியை ஏற்கிற போது எப்படிப்பட்ட துயரத்திற்கும் வடிகால் உண்டு என்கிற உண்மை தன்னால் புரியும்.

பொன்மலைப்பட்டி, தாயு செந்தில்குமார்.

◆ இந்திய கிரிக்கெட் : திடீர் வெற்றிகளும் படுதோல்விகளும், என்ற தலைப்பில் அட்டைப் படக் கட்டுரை மிக அழகாகத் தொகுத்து எழுதப் பட்டிருந்தது.

மொரட்டுப்பாளையம், கே. கஸ்தூரி.

◆ ருத்ரா படம் பார்த்து விட்டு வெளியே வரும் போது வயிற்று எரிச்சலைத் தணித்துக் கொள்ள ஒரு இளநீர் குடித்தேன். நீர் அந்தப் படத்திற்கு இப்போது விமர்சனமெழுதி இன்னொரு இளநீரைக் குடிக்கச் செய்து விட்டீர்!

வேலூர், பாற்கடல் வேந்தன்.

◆ சர்வதேச ஆயுத மார்க்கெட் பற்றிய விலாவாரியான தகவல்களைப் படித்து அதிர்ந்து போனேன்.

ஆங்காங்கே சிறு சிறு குழுவினர் தீவிரவாதிகள், போராளிகள் என்ற பெயரில் தாங்களும் வாழாமல், மக்களையும் வாழ விடாமல் 'ஆயுதக் கலாசாரத்தை' மட்டும் நம்பிச் சீரழிகிறார்களே என்று எண்ணும் போது மனம் பதைக்கின்றது.

உலகெங்கும் பரவியுள்ள இந்த மனித இன நோயைக் குணப்படுத்த உலக நாடுகள் ஸ்தாபனம் இனித் தனிக் கவனம் செலுத்த வேண்டும். ஆயுதக் கலாசாரம் மறைய பாடுபட வேண்டும்.

சென்னை - 78, வி. எஸ். அனந்தராமன்.

◆ 'ஐம்பது ஆண்டுகளுக்கு முன்' பகுதியில் ''சபாபதி'' திரைப்பட நிழற்படக் குறிப்பைப் படித்த போது எனக்கு அந்த நாள் ஞாபகம் வந்தது. அப்போது நான் நடுத்தரப் பள்ளி மாணவன். அக்காலத் தமிழ் நூலோர் தம் புலமையைப் புலப்படுத்துவதாக எண்ணி எப்படி கடின நடையில் எழுதி மொழி வளராமல், பரவாமல் முடக்கினார்கள் என்று அக் குறிப்பு உட்பொருளாக உணர்த்திய பாங்கு மிக அருமை. இப்போதெல்லாம் அப்படி திரைப்படக் குறிப்பில் கூட அர்த்தமுள்ள நகைச்சுவையோடு - வெகுகாலம் கடந்த பின்னரும் நினைத்து மகிழும் வண்ணம் - எழுதுபவர்கள் யார் இருக்கிறார்கள்? ஆபாசம் என்பது ஊசிமுனை அளவு கூட இல்லாமல் சம்பவங்களையும், உரையாடல்களையும் அமைத்து வெளிவந்த அச் ''சபாபதி'' திரைப்படம் போன்று முழு நீள நகைச்சுவைப் படம்தான் யார் எடுக்கிறார்கள்?

சென்னை - 14, பொ. வஜ்ரவேலு.

◆ 'ஸிக்ஸர்' என்ற தலைப்பில் வெளியான முதற் பரிசுத் துணுக்கில் மூன்று பெரிய தவறுகள் உள்ளன. முதலாவது அப் போட்டியில் கடைசிப் பந்தில் 'ஸிக்ஸர்' அடித்தவர் 'ஜாவேத் மியான் தாத்'. இரண்டாவது, அப் போட்டி ஷார்ஜாவில் நடைபெற்றிருந்தாலும் அது 'ஆஸ்திரேல்-ஏசியா' கோப்பைக்காக நடைபெற்ற இறுதிப் போட்டி. மூன்றாவது, கடைசிப் பந்தில் பாகிஸ்தான் வெற்றி பெற நான்கு ரன்கள்தான் தேவைப் பட்டது.

சென்னை - 64, சூரியபிரகாஷ்.

இந்தத் தவறுகளைச் சுட்டிக்காட்டி எழுதிய நூற்றுக்கணக்கான கல்கி வாசகர்களுக்கு நன்றி. துணுக்கை எழுதிய ஸ்டீபென்சனுடன் தந்தித் தொடர்பு கொண்டதில் அவரும் வருத்தம் தெரிவித்து எழுதியுள்ளார். அவருக்கு அளிக்கப் பட்ட தங்கநகைப் பரிசு ரத்து செய்யப்பட்டு, அவருக்குப் பதில் அடுத்த துணுக்கை எழுதிய பி. கிருஷ்ணமூர்த்திக்கு வழங்கப்படுகிறது.

விலாசம் :
Sector IV/487,
ஆர். கே. புரம்,
புதுடெல்லி - 110 022.

[redacted]

[redacted]




கல்கி
12-1-92 பொங்கல் சிறப்பிதழில்
டான் கலிலியோ
பத்மா ரவிசங்கர்
எழுதும்
மர்மத்
தொடர்கதை
ஆரம்பம்



# ஒரே கேள்வி

மணி ஐந்தடித்தது. ஆபீஸ் பேப்பர்களை மூட்டை கட்டி வைத்தேன். ஒரே களைப்பாக இருந்தது. எதிர் ஓட்டலில் போய்க் காப்பி குடிக்கலாமா? மனம் பரபரத்தது. சே! என்ன யோசனை... ராஜேஷின் முகம் மனத்தில் தோன்றியது. பாவம்... என் மகன் ராஜேஷ். காலையில் ஆபீஸிற்கு வரும்போதே 'அப்பா கட்டாயம் சாக்லேட் வாங்கி வரணும்' என்று சொன்னது நினைவிற்கு வந்தது. பையைத் துழாவினேன். ஐந்து ரூபாய்த் தாளும் சில்லறையும். நாளை வரை இதுதான் நம்மைக் காப்பாற்றணும். நாளை சம்பளத் தேதி. கையில் சம்பளம் வாங்கும் வரை எந்த எதிர்பாராத செலவும் வராமல் இருக்க வேண்டும். கடவுளே! நீதான் துணை. அலுவலகத்தை விட்டு வெளியே வந்து பக்கத்து ஷாப்பில் இரண்டு மலிவு ரக சாக்லேட்டுகளை வாங்கிப் போட்டுக் கொண்டு நடையைக் கட்டினேன்.

மாசக் கடைசித் தேதி நெருங்க நெருங்க மனம் வேதனைப்பட்டு முதல் தேதி சம்பளத்தைக் கண்டதும் ஒரு வாரம் கொஞ்சம் சந்தோஷம். மீண்டும் பழைய நிலைமைதான். இப்படியே கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாய் எவ்வளவு நாட்கள்தான் வாய்க்கும் கைக்குமான பொழைப்பு. ஒரு நாள் விடிவுகாலம் வராதா? இவ்வளவுக்கும் ராஜேஷ் ஒரே குழந்தை.

பலவித குழப்பங்களுடன் பஸ் ஸ்டாண்டை அடைந்தேன். சொல்லி முடியாத கூட்டம்! பஸ் வந்ததும் முண்டியடித்துக் கொண்டு ஏறினேன். படிக்கட்டிலேயே தொத்திக் கொண்டேன். கண்டக்டர் விசில் கொடுத்து பஸ் நகர ஆரம்பித்ததும் உள்ளே நுழைய இடமில்லை. ஒரு கையில் பையை இடுக்கிக் கொண்டு இன்னொரு கையால் பஸ்ஸின் பக்கவாட்டைப் பிடித்த வண்ணம் நின்றேன். கண்டக்டர் டிக்கெட் கொடுத்தவண்ணம் ஜனக்கூட்டத்தில் நீந்தி முன்பக்கம் வர ஆரம்பித்தார். இதற்குள் வருமான வரி ஆபீஸ் ஸ்டாப் வந்து விட்டது. ''ஒவ்வொரு ஸ்டாப்பிங்கிலும் இறங்கி ஏறுங்க சார்'' - கண்டக்டர் சொல்படி இறங்கி ஏறினேன். அடுத்து பீபி குளம் ஸ்டாப். டிக்கெட் வாங்க இரண்டு முறை அந்த ஐந்து ரூபாய் நோட்டைக் கையிலெடுத்து, கொடுக்காமலேயே இருந்தேன். மனம் 'திக் திக்'கென்று அடித்துக் கொண்டது. ஆயிற்று இன்னும் இரண்டே இரண்டு ஸ்டாப்பிங்தான். இப்போ பின் பக்கம் மாறி ஏறிக் கொண்டேன்.

டிக்கெட் வாங்கலையா என்று கேட்டால் அவமானம்தான். சரி இறங்குவதற்குள் யாரிடமாவது கொடுத்து வாங்கிவிடலாம் பையில் கையை விட்டு ரூபாய் எடுத்தேன். அதற்குள் ஒரு கிழவி ரோட்டின் குறுக்கே, வர பஸ் 'சடன் ப்ரேக்' போட்டு நின்றது. டிரைவர் கிழவியைக் கண்டபடி திட்ட, திரும்ப பஸ் கிளம்பியது. நோட்டை உள்ளே போட்டுக் கொண்டேன். 'சே.. கேவலம் எழுபத்தைந்து பைசா டிக்கெட். வாங்காமல் ஏமாற்றப் பார்க்கிறோமே' - உள் மனம் இடித்தது. 'ஆமாம்! உலகத்திலே எவ்வளவோ ஆயிரம், லட்சக்கணக்கில் மோசடி செய்யறாங்க... இது ஒரு ஏமாத்தலா என்ன?' - நானே சமாதானம் செய்து கொள்ள, அரச மரத்தடியில் இறங்கிக் கூட்டத்தில் நுழைந்து விடுவிடென்று நடந்தேன்.

பையில் ஐந்து ரூபாய் பத்திரமாக இருக்கிறதா எனத் தொட்டுப் பார்த்துக் கொண்டே வீட்டினுள் நுழைந்தேன். ஓடி வந்து காலைக் கட்டினான் ராஜேஷ். ''அப்பா என்னப்பா வாங்கிண்டு வந்தே?'' ஆசையுடன் கைகளை நீட்டினான்.


''இந்தாக் கண்ணை மூடிக்கோ!'' என்று இரண்டு சாக்லேட்டுகளைக் கையில் வைத்தேன். ''அட! எனக்கே எனக்கா?'' என்று கண்களில் சந்தோஷம் பொங்கச் சிரித்தான்.

''அப்பா டிக்கெட் எங்கேப்பா?'' பையில் கையை விட்டான். தினமும் பஸ் டிக்கெட்டுகளைச் சேர்த்து வைப்பது அவனுக்கு ஒரு விளையாட்டு. பட்டென்று மண்டையில் யாரோ அடித்தாற்போல் பொறி கலங்கி வாயடைத்து நின்றேன்.

தங்கம் ராமசாமி




தற்போது தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் மட்டுமே கிடைக்கிறது



முரளி மனோகர் ஜோஷி
இந்துக்களின் ஆதரவு ஓட்டுக்கள்
ரதயாத்திரை
காத்து கம்மியா இருக்குமோ?
இதர கட்சிகள்
என்னய்யா காவி கலர் பஸ்ஸா? சிவப்புக் கலர் அடிக்கக் கூடாது?
என்னய்யா, பயந்துக்கிட்டு நிக்கிறே...? போ, போய் அடக்கு!
ஜெயலலிதா
விலைவாசி உயர்வு
விலை நிர்ணயக் கமிட்டி
பிராமணர் எதிர்ப்பு, புலிகளுக்கு பரிவு காட்டற நிலைமையை மாத்திக்க... இல்லே...?
கருணாநிதி

# சிலைக்கு மாலை; உங்கள் நிலைக்கு....?

தமிழக அமைச்சரவை ராஜாஜி சிலைக்கு மாலையிட்டு மரியாதை செலுத்தியுள்ள இந்தத் தருணத்தில், அந்த மகான் சுதந்திரா கட்சியின் தலைவர் என்ற முறையில் 1962ல் நேருஜிக்கு சொன்ன பதில் நம் நினைவுக்கு வருகிறது. '' 'இந்தியா எப்படி இருக்க வேண்டும் என்று ராஜாஜி விரும்புகிறார்? அதைத் தெளிவுபடுத்தினால் நல்லது' என்று நேருஜி கேட்கிறார். இதோ கூறுகிறேன்'' என்று ஆரம்பித்து, சுயராஜ்யா பத்திரிகையில் பட்டியலிட்டார் ஸி. ஆர். அதில் சில பகுதிகள் :

★ அரசாங்கமே எல்லாம் செய்யும் என்ற நிலை மாறி, அரசு குறைந்தபட்ச அதிகாரங்களுடன் அவசியமானவற்றை மட்டும் செய்ய வேண்டும். மக்களின் ஆற்றல் முழுமையாகச் செயல் பட்டு நாட்டை உயர்த்த சுதந்திரமும் ஊக்கமும் அளிக்கப்பட வேண்டும்.

★ தொழில் - வர்த்தகத்தில் பெர்மிட் - லைசென்ஸ் - கோட்டா முறையும் அதனுடன் இணைந்த லஞ்ச ஊழலும், அரசியல்வாதி பெறும் ஆதாயங்களும் ஒழிய வேண்டும். எல்லோருக்கும் சம வாய்ப்பு இருக்க வேண்டும். மக்களின் வரிப் பணத்தை விழுங்கும் அரசுத் துறையின் ஏராள நஷ்டங்கள் தவிர்க்கப்பட்டு, தனியார் துறைக்கே வாய்ப்புக்கள் தரப்பட வேண்டும்.

★ அதிகாரிகள், ஆளும் கட்சித் தலைவர்களின் கட்டுப் பாட்டுக்குள் நடக்காமல் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் சட்டங்களை அமுல்படுத்த அனுமதிக்கப்பட வேண்டும்.

★ அபரிமித நேர்முக, மறைமுக வரிகள் தனியார் துறையில் முதலீடுகளுக்கு இடையூறாக நிற்கின்றன; கறுப்புப் பணம் உருவாகவே உதவுகின்றன; இந் நிலை மாற வேண்டும். பற்றாக் குறை பட்ஜெட்டால் ஏற்படும் பணவீக்கமும் விலைவாசி உயர்வும் மக்களை வதைக்கும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அரசின் டம்பாச்சாரி திட்டங்களுக்கும் ஊதாரிச் செலவினங்களுக்கும் முடிவு கட்ட வேண்டும்.

மாநில அமைச்சர்களாயினும் சரி, மத்திய அமைச்சர்களானாலும் சரி, ராஜாஜி பிறந்த தினத்தில் அவர் சிலைக்கு மாலை மரியாதை செய்து விட்டால் போதாது. அவர் கூறியவற்றை எல்லாம் படித்துப் பார்த்து அதன்படி நடந்து கொள்ள வேண்டும். தேசம் துரிதமாக முன்னேறச் சிறந்த கொள்கைகளை அவர் எல்லோருக்கும் புரிகிற மாதிரி எளிமையாக வகுத்துத் தந்திருக்கிறார்.

அவற்றை முழு மனத்துடன் முழுமையாகப் பின்பற்ற வேண்டும். அரை குறையாகச் செய்து பயனில்லை. மத்திய அரசு தொழில் வர்த்தகத் துறையில் ஓரளவுதான் கட்டுப்பாடுகளைத் தளர்த்தியிருக்கிறது. வரிச் சுமை அப்படியே இருக்கிறது. மாநில அரசும் மதுவிலக்கை ஏனோ தானோ என்றுதான் அமுல்படுத்துகிறது. மத்திய மாநில அரசுகளின் ஊதாரிச் செலவினங்கள் தொடர்கின்றன.

ராஜாஜிக்கு இன்று அமைச்சர்கள் அணிவிக்கும் மாலை, நாளை வாடித்தான் போகும். வாடாத விஷயம் ஒன்றே. அது ராஜாஜியின் எழுத்து; அதில் காணப்படும் அவரது கொள்கைகள்.

ராஜாஜியை எண்ணும்போதே கல்கியின் நினைவு நாளும் பாரதியின் பிறந்த நாளும் இதே டிசம்பரில்தான் என்பது நம் ஞாபகத்துக்கு வருகிறது. ராஜாஜியைத் தமது குருநாதராக மதித்தவர் கல்கி. பாரதியாரைப் போற்றி வணங்கி நினைவு மண்டபம் எழுப்பியவர். அத்தகையவருக்குத் தமது பத்திரிகையை எப்படி நடத்திச் செல்ல வேண்டும் என்பதில் ஓர் உறுதி இல்லாமல் போகுமா? 'தமிழர் நலனுக்கு உகந்ததைச் சொல்ல வேண்டும்; தேசநலனுக்கு உரியதை எழுத வேண்டும் - பாரதி போல' என்பதே அந்தத் தீர்மானம். ஆபாசமும், பொய்யும், சிறுமையும், சின்ன புத்தியும், அவரது பரம எதிரிகள். எவ்வளவு பெரிய மனிதனானாலும் தவறைத் தட்டிக் கேட்பார்; எவ்வளவு எளியவனானாலும் நல்லதைப் போற்றுவார். ஏற்றத் தாழ்வு கருதாது மனதார அனைவரையும் நேசிப்பார்.


ஏசு பிறந்த தினத்தில், புத்தாண்டு பிறக்கப் போகும் தருணத்தில் இவற்றை நினைவில் கொள்வோம்.

''களையிழந்த நாட்டிலே - முன்போலே
களைசிறக்க வந்தனை வா வா வா''

என்று இளைய பாரதத்தை அழைப்போம்.



கல்கி



1991
டிசம்பர் 22
மலர் : 50
இதழ் : 21
பிரஜோத்பத்தி
மார்கழி 7

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.

ஆனந்த ரங்கம் பிள்ளையின் டயரி ஆகட்டும், ஆன் ஃபிராங்க்கின் டயரி ஆகட்டும் - அன்றைய காலகட்டத்தை அவை பிரதிபலித்தன. நாஜிகளின் கொடுமைக்கு அஞ்சி, பதுங்கி வாழ்ந்த ஆன்ஃபிராங்க்கின்



டயரிகளுக்குப் பிளாஸ்டிக் ஜாக்கெட்

# டைரிகள்:

## சரித்திரக் குறிப்பு முதல் சமையல் குறிப்பு வரை!

டயரி, அவரது பதினாலு வயதோடு நின்று விடுகிறது. அதற்கப்புறம் என்ன ஆயிற்று? அவர் பிடிபட்டு, கொலை செய்யப்பட்டாரா? மர்மமான முடிவு கொண்ட டயரி அது. இலக்கியமாகக் கருதப்படு கிறது.

சாம்புவல் ஜான்சனின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய பாஸ்வெல் எனும் பிரபல அறிஞரின் டயரியும் பிரபலமானதுதான்... இப்படி எத்தனையோ...

ஹோ அன்ட் கோ டயரியைத் தவிர, வேறு ஒரு டயரியில் எழுதுவதில்லை என்று பிரதிக்ஞை எடுத்துக் கொண்டு, இரண்டு மூன்று ஆண்டுகள் முன்பு ஹோ அன்ட் கோ டயரி நிறுத்தப்பட்ட பிறகு, டயரி எழுதுவதையே விட்டு விட்ட பிரபலங்களும் உண்டு!

வருட ஆரம்பத்தில் ''என்ன.. தயவே இல்லை! டயரி ஒன்றும் வரவில்லையே உங்களிடமிருந்து?'' என்று கேட்டு வாங்கிக் கொண்டு விட்டு, வருடக் கடைசியில் பார்த்தால் ஒரு வரி கூட அதில் எழுத மனம் வராமல் பொத்திப் பொத்திப் பாதுகாப்பவர்களும் உண்டு!

பாக்கெட் டயரியிலிருந்து, லெதர் பைண்டு செய்யப்பட்ட விலை உயர்ந்த டயரிகள் வரை பல்வேறு வகை இருந்தாலும் அவற்றின் 'மதிப்பு' அலாதியானதுதான்.

பஜன் கிளாஸ்களில் கற்றுக் கொள்ளும் திருப்புகழ் பாடல்களும், ஜெயதேவரின் அஷ்டபதி பாடல்களும் பக்கம் பக்கமாய் எழுதி வைத்திருக்கும் குடும்பத் தலைவிகள் சென்னையிலும் சரி, பம்பாய், தில்லியிலும் சரி - ஏராளம்.

''ஏன்? 'ரெஸிப்பி' கூட டயரியில்தான் எழுதி வைக்கிறோம்... சாக்லேட் பர்ஃபி எப்படிச் செய்வது, குஜராத்தி 'அச்சார்' எப்படித் தயார் பண்ணுவது என்றெல்லாம் டயரிகளில்தான் சௌகரியமாகக் குறித்து வைத்துக் கொள்ள முடிகிறது!'' என்கிறார் மிஸஸ் ரமா கிருஷ்ணமூர்த்தி.

வீட்டுச் செலவுக் கணக்கை அந்தந்தத்



அனேகம் வேலைகளுக்கு இயந்திரங்கள்

பிரதாப் சிங்



தேதியின் கீழ்க் கச்சிதமாக எழுதவும் சலவைக்குப் போட்ட துணி கணக்கு எழுதவும் டைரியே துணை!

இவை ஒருபுறமிருந்தாலும், 'பிஸி' பேர்வழிகளுக்கு, 'எந்தெந்தத் தினத்தில் என்னென்ன காரியம் செய்ய வேணும்? எங்கு போய், யார் யாரைப் பார்க்க வேண்டும்' என்றெல்லாம் குறிப்பு எழுதி வைக்க மிகவும் உபயோகமாயிருப்பது டயரியே. மிகவும் சிக்கலாகத் தென்படும் எந்த ஒரு விஷயத்தையும் எழுதிப் பட்டியலிட்டு, அலசினால் சிம்பிளாகத் தோன்றும்; முடித்து விடலாம் என்று தைரியம் பிறக்கும். இதற்கெல்லாம் உதவுவது டயரி.

சொந்த உபயோகத்துக்காக ஒரே ஒரு நல்ல டயரி வாங்க அலைந்து, பிறகு டயரி தயாரிப்பதையே தமது முழு நேரத் தொழிலாக மேற்கொண்ட தொழிலதிபர், 'ஈகிள்' டயரி நிறுவனத் தலைவர் பிரதாப் சிங். (சிங் என்றால் சாதாரணமாக ஏதோ வட நாட்டுக்காரர் என்று தோன்றும். திருநெல்வேலிக்காரர்களில் ஒரு பகுதியினர் தமது பெயரோடு சிங் என்று சேர்த்துக் கொள்ளுவது ஏன்? ''வடக்கே பகத்சிங் தூக்கி லிடப்பட்ட போது, திருநெல்வேலி பக்கம் எல்லாம் ஆவேசம் மிக்க தேசபக்தர்கள் பலர் சிங் என்ற 'சர்நேம்' வைத்துக் கொள்ளத் தொடங்கினார்கள். அந்தக் குடும்பப் பெயர் பரம்பரையாகப் பல குடும்பங்களில் தொடர்கிறது'' என்றார் பிரதாப் சிங்.)

''சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னால், நண்பர் ஒருவருக்குக் கொடுப்பதற்காக ஒரு நல்ல டயரி வாங்கக் கடை கடையாகத் தேடினேன். தேர்ந்தெடுத்து வாங்கிய டயரியை அந்தப் பெரிய மனிதருக்குக் கொடுத்ததும், அவர் முகத்தில் ஒரு தனியான சந்தோஷம் தெரிந்தது. அவர் எதையுமே விரும்பி ஏற்காத பெரியவர். ஆயினும் டயரியை ஒரு கௌரவமான அன்பளிப்பாக அவர் ஏற்றுக் கொண்டதை, அவர் முகத்திலே பார்க்க முடிந்தது. தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுவதற்கும், சிநேகிதங்களைப் புதுப்பித்துக் கொள்ளுவதற்கும் மிகச் சிறந்த சாதனம் டயரிதான் என்று உணர்ந்து கொண்டேன். என் வாடிக்கையாளர் சிலருக்கும், என் நண்பர்கள் பலருக்கும் வருட ஆரம்பத்தில் கொடுக்க டயரிகள் தயாரிப்பது என்று ஒரு 'மார்க்கெட் சர்வே' பண்ணிய பிறகு தீர்மானித்தேன். சில பேர் விலை கொடுத்து வாங்கிக் கொண்டார்கள். 'இன்னும் சிறப்பாகத் தயாரிக்க முடியுமா பாருங்கள்' என்று ஊக்குவித்தார்கள். டயரி தயாரிப்புத் தொழில் மளமளவென்று வளர்ந்து விட்டது.

டயரியில் என்னென்ன தகவல்கள் கொடுக்க வேண்டும்? எப்படி கவர்ச்சிகரமாகத் தயாரிக்க வேண்டும்? என்றெல்லாம் யோசித்திருக்கிறார் பிரதாப் சிங். பிளாஸ்டிக் அட்டை என்றால் அழுக்குப் படியாது; அழகாகவும் இருக்கும். வெள்ளைத் தாளை விட 'நேச்சுரல் ஷேட்' வண்ணக் காகிதம் இன்னும் எடுப்பாக இருந்தது... இப்போது அதுவே பிரபல

☛ ஆளுயரத்துக்கு டயரி அடுக்குகள்...



## சரித்திர டயரி!

டயரியின் ஆரம்ப வடிவம் கிரேக்க நாட்டில் தோன்றியது. எஃபமெரைடிஸ் (Ephemerides) (eph emeros என்றால் ஒரு தினத்துக்கு நீடிப்பது என்று பொருள்) என்ற பெயரில் தினந்தோறும் கிரகங்களின் இருப்பு நிலையைக் குறித்து வைத்தார்கள் கிரேக்கர்கள். கி. மு. நான்காம் நூற்றாண்டிலேயே ரோமானியர்கள் தினக் குறிப்புகளை எழுதினார்கள். வீட்டுக் குறிப்புகளுடன் நாட்டு நிர்வாகம் பற்றிய குறிப்புக்களும் எழுதப்பட்டன. இந்தக் குறிப்புகளின் அடிப்படையில்தான் முதல் ரோமானிய சரித்திர நூல் எழுதப்பட்டது! ஜூலியஸ் சீசர், 'காவ்' தேசத்தை எதிர்த்துத் தான் நடத்திய போர்களை விவரித்தும், அன்றாட வாழ்க்கையை விமர்சித்தும் நாள் குறிப்பு எழுதி வந்தான்.

இங்கிலாந்தின் முதலாம் சார்ல்ஸ் மன்னர் கொல்லப்பட்டதை நேரில் கண்ட சர் வில்லியம் டக்டேல், ராணுவ வீரர்கள் தங்கள் கத்தியை மன்னரின் ரத்தத்தில் தோய்த்தெடுத்து 'மகிழ்ந்த' காட்சியை டயரியில் விவரிக்கிறார்!

பதினேழாம் நூற்றாண்டில் லண்டனைப் பெரும் சேதத்துக்குள்ளாக்கிய தீ விபத்தையும், 'பிளேக்' நோயையும் பற்றி, சாமுயல் பெபிஸ் தம் டயரியில் எழுதும் போது அதற்கென்று தனிச் சங்கேத எழுத்து முறையைக் கையாண்டார்!

- திருபர்

மாகி விட்டது! (லெதர் உறைகள் போட்ட விலையுயர்ந்த டயரிகளும் இங்கே தயாரா கின்றன.)

பத்து வருடங்களுக்கு முன்பு, சன்லிட் பாண்ட் பேப்பர் முழுவதையும் ஈகிள் பிரஸ் வாங்கியது - டயரி செய்வதற்காக. மார்க்கெட்டில் எங்குமே சன்லிட் பாண்ட் கிடைக்கவில்லை! தயாரிப்பாளரை விநி யோகஸ்தர்கள் அணுகிய போது, 'ஈகிள்' காரரைக் கேளுங்கள் என்று சொல்லி விட்டார்கள்! ப்ரீமியம் வைத்து விற்று விட எல்லாரும் வற்புறுத்தினார்கள். ''அப்படி விற்றிருந்தால், டயரி செய்யும் சிரமமில் லாமலே, இரட்டிப்பு லாபம் கிடைத்திருக் கும். ஆனால் என் டயரியை நம்பி விற் பனை செய்யும் வியாபாரிகளை ஏமாற்றத் துக்குள்ளாக்க நான் விரும்பவில்லை. அத்தனை 'சன்லிட் பாண்ட்' காகிதத்தையும் டயரிக்காகவே உபயோகித்தேன்!'' என்றார் பிரதாப் சிங்.

டயரி அச்சான காகிதம் வெவ்வேறு வடிவங்களில் வெட்டப்பட்டு, மடிக்கப் பட்டு இயந்திரத் தையல் முறையில் அசுர வேகத்தில் தைக்கப்படுகிறது.

தைக்கப்பட்ட டயரிகள், அ த ன த ன் அளவுகளுக்கு ஏற்ப வெட்டப்பட்ட அட்டைகளுடன் இணைய, வஜ்ரப் பசைக் கூழ், இயந்திரத்தில் குழம்பித் தயாராக இருக்கிறது. தைக்கப்பட்ட முதுகுப் பகுதி யைப் பசை முத்தமிட்டுத் தள்ளி விட, அட்டை இணைய, அழுத்தமாக ஒட்டிக் கொண்டு விடுகிறது. இதற்குப் பிறகு



# பதினைந்து நிமிடங்களில் ஹயக்ரீவா ஹல்வா!

இருநூற்றிப் பத்து பேர் ஒரே சமயத்தில் சமைத்தால் எப்படியிருக்கும்...? அதுவும் சிக்கன மான, சத்துள்ள பொருள்களைக் கொண்டு பதி னைந்து நிமிடங்களுக்குள் ஒரு ஐட்டத்தைச் செய்து முடித்து விட வேண்டும் என்ற பிரதான விதிமுறை சமையல் போட்டியில்...!

அறுபது வயது ஜயலக்ஷ்மி பாட்டி முதல் ஆறு வயது பள்ளிச் சிறுவன் வரை போட்டியில் பங்கேற்ற அனைவரும் 'சார்லி சாப்ளின்' சினிமா போல வேக வேகமாகச் செயல்பட்டார்கள். இவர்களுள் ஹோம் சயன்ஸ் பட்டப் படிப்புப் படிக்கும் கல்லூரி மாணவிகளும், எலக்ட்ரிகல் தொழிலைச் செய்யும் கேரளத்துக்காரரும் அடக் கம்! நடிகை வைஷ்ணவி சாயலில் யாரோ இருக் கிறார்களே என்று பார்த்தால், அவர் அம்மா யக்ஞப்ரபா.

ஒரு கல்லூரி மாணவி பதினைந்து நிமிட நேரமும் வாணலியில் ஏதோ கிண்டிக் கொண்டே இருந்ததைப் பார்த்து நமக்கே டென்ஷன் வந்து விட்டது. மணியடிப்பதற்குள் இவர் முடிப் பாரா...? இடையில் இருமுறை கை கழுவ வேறு நேரம் செலவிட்டார். 'சரி, இது 'கோவி'தான் என்று நினைத்துக் கொண்டிருந்த போதே அடுத்த இரண்டு வினாடிகளில் ஏதோ ஜிம்பூம்பா கதை யாகக் குழாய்ப்புட்டு வடிவத்தில் நான்கு கூம்பு களைத் தயாரித்து அவற்றை அழகாக அலங்க ரித்தும் விட்டார்!

போட்டியின் இடையிடையே ஒலிபெருக்கி யில் 'காலை' சிக்கனமாகவும் பாதுகாப்பாகவும் உபயோகிக்கும்படி அறிவித்துக் கொண்டிருந் தார்கள்.

தேவி துளசி மாதர் சங்கம் ஏற்பாடு செய்த போட்டியை ஸ்பான்ஸர் செய்தனர் டி.டி.கே. ஸெல் சேவை தயாரிப்பாளர்களும் பாரத் பெட் ரோலியமும்.

போட்டியில் தயாரான சில ஐட்டங்களின் பெயர்கள் :

பௌண்ட்ரம் (இது பீமசேனனின் சங்கிற் குரிய பெயர்); மெல்டிங் மோமென்ட்ஸ், லாபினி; ஹயக்ரீவா ஹல்வா!

மொத்தம் அறுபது பரிசுகள் தரப்பட்டன.

ஆண்கள் பிரிவுக்குத் தனிப் பரிசு. அதைப் பெற்றவர் மதுகர். வயது - அறுபது! ஆறு வயதுச் சிறுவன் செய்த சான்ட்விச்சுக்கு ஆறுதல் பரிசு. ஏனைய பரிசுகளைப் பெண்களே தட்டிச் சென் றனர்.

- கீதா மோஹன்

அளவுக்கு ஏற்றவாறு புரோகிராம் செய்யப்பட்ட வெட்டும் இயந்திரம், மூன்று புறங்களையும் அழகாக வெட்டிக் கொடுக்கிறது.

டைரிக்கான பிளாஸ்டிக் உறைகள் தனியே தயாரிக்கப்படுகின்றன. ''வெல்டிங்'' முறையில் முனைகள் இணைக்கப் பட்டு விடுகின்றன. ஸ்க்ரீன் பிரின்டிங் முறையில், பிளாஸ்டிக் உறையில் ஈகிள் முத்திரை குத்தப்பட்டு உலர வைக்கப்படுகிறது. பிறகு இவற்றுள் டயரிகள் செருகப் பட்டு விடுகின்றன.

நேபாளத்தில் ஏற்கெனவே விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. மலேசியாவுக்கு ஏற்றுமதி செய்யும் சாத்தியக்கூறுகள் பற்றி ஆலோசித்து வருகிறார் பிரதாப் சிங். ''நிறைய விண்ணப்பங்கள் வந்து விட்டன!'' என்கிறார்.

சமீபத்தில் புட்டபர்த்தியிலுள்ள மருத்துவ ஆராய்ச்சி நிலையத் துவக்க விழாவில் பிரதமரும் அமைச்சர்களும் பங்கு கொள்ளும் போது விநியோகிக்க, 'சாய்-டயரி' தயாரித்துக் கொடுக்குமாறு வேண்டுகோள் வந்தது. ''இத்தனை உயர்வான தரத்தில், இத்தனை விரைவில், தக்க சமயத்தில் டெலிவரி செய்த உங்கள் நிறுவனத்துக்கு எத்தனை நன்றிகள் சொன்னாலும் போதாது!'' என்று பிரசாந்தி நிலையத்திலிருந்து வந்திருந்த கடிதத்தைப் பார்க்க முடிந்தது. ''குறிப்பிட்ட நாளில் கொடுத்தாக வேண்டும் என்பதில் குறியாக இருப்போம்!'' என்கிறார் சிங்.

**ப**ல நிறுவனங்கள், அவர்களுக்காகத் தயாரிக்கச் சொல்லும் டயரிகளில் அவரவர் நிறுவனம் தொடர்பான தகவல்களும், அந்தத் தொழில் தொடர்பான குறிப்புக்களும் கொடுப்பதோடு, வருடாந்தர விடுமுறைகள், பின்கோடு, எஸ்.டி.டி. எண்கள், தபால்-தந்தி விவரங்கள், வருமான வரி செல்வ வரி போன்றவை பற்றிய விவரங்களும் சேர்க்கப்படுகின்றன. இவற்றை எல்லாம் ஒரு சார்ட்டர்ட் அக்கவுன்டென்ட் தொகுத்துச் சரிபார்த்துக் கொடுத்து விடுகிறார்.

முக்கியமான வேலைகள் எல்லாம் இயந்திரமயமாக்கப்பட்டு விட்டாலும் கூட, சுமார் ஆயிரம் குடும்பங்களுக்கு ஈகிள் டயரி தயாரிப்பில் வேலை கொடுக்கப் பட்டிருக்கிறது. விற்பனை ஏஜெண்டுகள் என்ற முறையில் வேலை வாய்ப்பு, வருமானம் தனிக் கணக்கு!

**ஈ**கிள் பிரஸ்ஸைச் சுற்றிப் பார்த்து வந்த போது, ''இது கல்கி பத்திரிகையின் பொன் விழா ஆண்டு'' என்று பேச்சினிடையே ஒரு சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது தான் தாமதம், பிரதாப் சிங் அதை 'கப்' பென்று பிடித்துக் கொண்டார். ''தரமான கல்கி பத்திரிகையை ஆதரிக்கும் தரமான வாசகர்களுக்கு ஐந்நூறு டயரிகள் பரிசளிக்க விரும்புகிறேன்'' என்றார்.

ஒவ்வொன்றும் ரூ. 30 பெறுமானமுள்ள இந்த டயரியைப் பெற நீங்கள் என்ன செய்ய வேண்டும்? ரொம்ப சிம்பிள். இந்தப் பக்கத்தில் இடம் பெற்றுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். அவ்வளவுதான். வருகிற விண்ணப்பங்களில் ஐந்நூறு வாசகர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

கடைசியாக ஒன்று. ஈகிள் என்று ஏன் பெயர் சூட்டினார்? ''தொலைநோக்குப் பார்வை உடையது ஈகிள்; அதான் காரணம்'' என்றார் பிரதாப்சிங். தொலைநோக்குப் பார்வையை வளர்த்துக் கொள்ள டயரியைக் காட்டிலும் உதவக் கூடியது வேறு எது?

**- சாருகேசி**

அட்டை வண்ணப்படம், புகைப் படங்கள் : யோகா

## கல்கி பொன் விழா ஆண்டு - ஈகிள் டைரி பரிசுக் கூப்பன்

முடிவு தேதி : 26.12.91

நான் ...................... காலமாகக் கல்கியை வாங்கிப் படித்து வரக் காரணம் ..............

..............................................................................................................

..............................................................................................................

என் பெயர் : ..............................................................................................

விலாசம் : .................................................................................................

..............................................................................................................

(உறைமேல் டைரி பரிசுத் திட்டம் என்று குறிப்பிடவும்)

ஒரு வகையில் இயக்குனர் ராதா பாரதி பெறுவது பாராட்டு, தம்முடைய ஒவ்வொரு படத்திலும் ஒரு புதிய கதா நாயகனை அறிமுகப்படுத்துவதன் மூலம்.

ஆனால் -

இந்தப் படத்தைப் பொறுத்தவரை யில் பாராட்டு அத்தோடு நின்று விடு கிறது.

புது நடிகர் சரவணன். பொறுப் பைச் சுமப்பதற்கேற்ற வலுவான தோள்கள் இருக்கும், பாத்திரப் படைப்பு அவரைக் கைவிட்டு விடு கிறது. இத்தகைய சப்பாணிப் பாத் திரத்தை ஏற்கெனவே வெளுத்துக் கட்டியிருப்பவர் கமல். கதாசிரியரின்



# வைதேகி வந்தாச்சு

பலவீனம் சரவணனின் முயற்சிகளை ஆக்கியிருப்பது - விழலுக்கிறைத்த நீர்.

கதாநாயகி அர்ச்சனா. குணசித்திர நடிப்புக்காக இருமுறை தேசிய விருது பெற்றவர். பொருத்தமில்லாத ஒரு 'கமர்ஷியல்' பாத்திரத்தை ஏற்கப் போய், அதனால் ஏற்படுவது ஏமாற் றம். அதுவும் உச்சகட்டக் காட்சியில் பாடிக் கொண்டே அவர் மருத்துவ மனைக்குள் நுழைய முயற்சிப்பதும், போலீசார் அவரைப் பிடித்து வெளியே தள்ளுவதும், கொட்டும் மழையில் அவர் தெருவில் போய் விழுவதும், திரும்ப எழுந்து பாடிக் கொண்டே உள்ளே நுழைய முயற்சிப்பதும், இதுவே தொடர்ந்து இடம்பெற்று பாடல் முடிவதற்குள் ஏற்பட்டு விடு வது அலுப்பு.

நம்ப முடியாத நிகழ்ச்சிகள் படம் முழுவதும்.

என்றாலும், ரசிக்கும்படியான ஒரு கட்டம் - கல்யாணம் என்றால் என்ன வென்றே தெரியாத சரவணன் அர்ச் சனாவை மணந்தபின், அந்தத் திருமண உறவை நிறைவு செய்யும் வழிவகை களை ஒவ்வொன்றாக சண்முகசுந்தரி அவருக்கு எடுத்துச் சொல்ல, அதை அவர் வெகுளித்தனத்தோடு கேட்டுக் கொள்ளும் இடத்தில் கையாளப் பட்டிருப்பது நாசுக்கு மட்டுமல்ல. மெலிதான நகைச்சுவையும் கூட.


படத்தின் பிரதான அம்சம் இசை. பத்து பாடல்கள். சற்று அதிகம் என்றா லும் இசையமைப்பின் நேர்த்தி ஈடு கட்டி விடுகிறது.

'சாமஜவர' பாடலுக்கு, கனவுக் காட்சியாக, ஒரு சாஸ்திரிய நாட்டியம். ஒரு கோயிலின் பிராகாரத்தில். அந்த உடையை அணிவித்து விடுவதா லேயே அது பாதநாட்டியம் ஆகி விடுமா?

செந்திலின் பாத்திரப் படைப்பும் சரி, அதற்குத் தந்துள்ள முடிவும் சரி... கேலிக்கூத்து!

- சி. ஆர். கே.

# 8



இலேசான பிரமிப்புடன் நடந்து அவனருகில் இருந்த பிரம்பு நாற்காலியில், அவள் அமர்ந்தாள். பளிங்கு போல் இருந்த அந்த நெற்றிக்குப் பின்னால் எங்கோ இவனுக்கு ஒரு சூட்சுமப் பார்வை இருக்க வேண்டும் என்று தோன்றிற்று. காரணம் புரியாத நெகிழ்ச்சியை அவனுள் ஏற்படுத்தியது.

''அப்படியொரு வாசனை எனக்கிருக்கிறதா இதுவரை யாரும் சொன்னதில்லே,'' என்று சிரித்தாள்.

''எனக்கு வித்தியாசமாத் தெரியுது'' என்றான் அவன் சாதாரணமாக. ''செர்ரி ப்ளாஸம் வாசனை. அமெரிக்க ஷாம்பூவிலேதான் இத்தனை நேரம் அது வாசனை அடிக்கும். உனக்கு சோப்பும் ஷாம்பூவும் இன்னும் அங்கேந்துதான் வருதா?''

அ வ ன் சிரித்தாள். ''வரல்லே. கொண்டு வந்ததே இன்னும் இருக்கு. இந்திய சோப்பும் ஷம்பூவும் உபயோகிச்சா ஒத்துக்குமோ ஒத்துக்காதோன்னு பயந்து ஏகமா கொண்டு வந்திருக்கோம். உனக்கு இந்த வாசனை பிடிச்சா உனக்கும் ஒரு பாட்டில் கொண்டு தரேன்.''

''வேண்டாம் தாங்க்ஸ்'' என்றான் அவன். அவசரமாகக் கூடவே சிரித்து ''அப்புறம் இது உன் வாசனைன்னு சொல்ல முடியாம போகும்'' என்றான்.

அவன் சிரித்துக் கொண்டே பேசினாலும் ஒரு இயலாமை தொனிப்பதாக அவள் நினைத்துக் கொண்டாள். தன்னைச் சுற்றி நடக்கும் விஷயங்களை எப்படி மோப்ப சக்தியினால் மட்டும் கிரகித்துக் கொள்வது சாத்தியம்?

''மேம் இல்லையா?''

''அம்மா எங்கேயோ போயிருக்காங்க. அவங்களைப் பார்க்கத்தான் வந்தியா?''

''இல்லே, உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்.''

அவன் முகத்தில் வெளிப்படையாகச் சந்தோஷம் தெரிந்தது.

# காதலெனும் வானவெளி

வாஸந்தி

''ஓ? தாங்க்ஸ்'' என்ற போது குரல் நெகிழ்ந்தது. ''இதைக் கொண்டாட வேண்டாமா?'' என்று அவன் கறுகறுப்பாக எழுந்தான். ''என்ன சாப்பிடறே, போர்ன்வீடாவா, காப்பியா?''

''வேண்டாம் வேண்டாம். உக்காரு'' என்று அவள் பதற்றத்துடன் அவனுடைய கையைப் பிடித்தாள்.

''என்ன அப்படி பயப்படறே?'' என்று அவன் பலமாகச் சிரித்தான். ''அப்படி ஒண்ணும் மோசமா இருக்காது.''

அவள் தன்னை நிதானப்படுத்திக் கொண்டு சொன்னாள்.

''ஓ. கே. அப்ப நானும் ஹெல்ப் பண்ணுவேன்.''

''சரிதான். போர்ன்விடா கலந்தது நீதான்னு சொல்லிக்கவா, அன்னிக்கு வானவில்னா என்னன்னு உன் சொந்த சரக்கு போல ரேடியோவிலே பேசினியே?''

அவள் சிரித்தாள்.

''இல்லேல்லே. நீயே வெச்சுக்க எல்லா பெருமையும். நீ செய்யறதை நான் பார்க்கலாமா?''

''வேண்டாம்'' என்றான் புன்னகையுடன். தோளைப் பற்றியிருந்த அவள் கையைத் தட்டி, ''என்னாலே முடியும், அதை நீ நம்பணும்'' என்றான் மெல்லிய குரலில்.

''ஓ.கே.'' என்றாள் அவள் தோற்றுப் போன உணர்வுடன். அவன் உள்நோக்கி நகர்ந்த போது, ''எனக்கு ஜில்லுனுதான் போர்ன்விடா பிடிக்கும்'' என்று குரல் கொடுத்தாள்.

அவன் திரும்பி வரும் வரை கவலையாயிருந்தது. அவனால் எப்படி காப்பியெல்லாம் போட முடியும் என்று புரியவில்லை. நெருப்பில் கையைச் சுட்டுக் கொள்ள மாட்டானா? வெந்நீரை மேலே கொட்டிக் கொண்டால்? கண்ணாடி தம்ப்ளர் காலில் விழுந்தால்? 'என்னாலே முடியும்' நிதானமாகக் கர்வத்துடன் சொன்னான். இந்த நிலை வருவதற்கு முன் அவன் பலமுறை விழுந்து, அடிபட்டு, மனசு வெறுத்துப் போயிருக்க வேண்டும் என்று அவள் நினைத்துக் கொண்டாள். தன் நிலையைக் கண்டு இவனுக்குப் பச்சாதாபமில்லை. குறையிருப்பவன் போல் பேசுவது கூட இல்லை. பார்வையிருப்பவர்களிடம் தென்படாத சூட்சுமமும் உற்சாகமுமாய் எப்படி இருக்கிறான்?

காலடி ஓசை கேட்டு அவள் நிமிர்ந்தாள். இரண்டு பெரிய மெலமைன் தம்ளர்களில் மேலே ஐஸ் கட்டி மிதக்க அவன் அவற்றை டிரேயில் ஏந்தியபடி ஜாக்கிரதையாக நடந்து வருவதைப் பார்த்து வியந்து போனாள். எழுந்து ''க்ரேட்'' என்று டிரேயை வாங்கிக் கொள்ளும் போது இனம் புரியாமல் துக்கம் நெஞ்சை அழுத்திக் கண்கள் பனித்தன.

''எப்படியிருக்குன்னு குடிச்சுப் பார்த்துச் சொல்லு'' என்று புன்னகைத்துத் தனது நாற்காலிக்கு இலேசாகத் தடுமாறி அவன் செல்லும் போது அவனைப் பிடித்து உட்கார வைக்க நினைத்தவள், தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

உண்மையிலேயே போன்விடா மிக ருசியாக இருந்தது.

''பிரமாதம்!'' என்றாள் அவள் உற்சாகமாக.

''எனக்கே இப்படிச் செய்யத் தெரியாது.''

''தாங்க்யூ'' என்று அவன் தன்னுடைய தம்ப்ளருக்காக மேஜையைத் தடவினான்.

''ஓ ஸாரி'' என்று அவனருகில் அவள் அதை நகர்த்தினாள். அவன் அதை எடுத்து ''உம் குட்'' என்று சிலாகித்தபடி அருந்துவதைக் கண்டு அவளுக்கு இன்று சிரிப்பு வரவில்லை. கனிவு ஏற்பட்டது. திரும்பத் திரும்ப பிரமிப்பாக இருந்தது. இருட்டிலேயே இருப்பவனுக்கு உலகம் எப்படி இருக்கும்? மனிதர்கள் எப்படிப்பட்ட உருவமாய்த் தோன்றுவார்கள்? நாம் கண்ணால் பார்க்கும் வடிவங்களின் ஆதாரத்தின் மேல் தான் கற்பனைகள் உருவாகின்றன. இவனுடைய கற்பனைகளுக்கு எப்படிப்பட்ட உருவம் இருக்கும்? எத்தனையோ கேள்விகள் இவனைக் கேட்க வேண்டும் போல் இருந்தது. கேட்டால் தனது அங்கஹீனத்தைச் சுட்டிக்காட்டுவதாக அவன் நினைக்கப் போகிறானே என்று தயக்கமாக இருந்தது. 'தனக்கு அங்கஹீனம் இருப்பதாக ஒத்துக்கக் கூட மாட்டான்' என்று அன்று மைதிலி சொன்னது நினைவுக்கு வந்தது.

''என்ன, பேச்சையே காணும்?'' என்றான் அவன் காலித் தம்ப்ளரை மேஜை

மேல் வைத்து, ''டான்ஸ் கிளாசுக்குப் போயிருந்தியா நேத்து?''

''போயிருந்தேனே!'' என்னும் போது பகபகவென்று நேற்றைய ஞாபகங்கள் எல்லாம் பிரவாகமாக வந்தன. நேற்று அனுபவித்த கோபமும் ஏமாற்றமும் மீண்டும் அவளைத் தாக்கின.

''அலாரிப்பு ஆடிக் காண்பிக்கிறியா?'' அவள் திடுக்கிட்டு நிமிர்ந்தாள். அந்த நிமிஷத்தில் அவனுடைய கேள்வி அவளுக்கு மகா அபத்தமாகத் தோன்றிற்று. தன்னை மட்டும் இவன் ஏமாற்றிக் கொள்ளவில்லை என்னையும் ஏமாற்றுகிறான். தாம் தித்தாம் தைத்தத்தை என்று நான் கையையும் காலையும் அசைப்பது இவனுக்கு எப்படிப் புரியும்? நாட்டியம் என்பது கண்களால் அல்லவா அனுபவிக்கப்பட வேண்டும்?

என்ன பதில் சொல்வது என்ற தயக்கத்துடன் அவள் மௌனமாக அமர்ந்திருக்கையில் ''உனக்கு என்னைப் பத்திச் சந்தேகமா இருக்கு இல்லே?'' என்றான் ஹரி. ''இந்தக் குருட்டுப் பய எதிரே ஆடினாத் தான் இவனுக்கு என்ன தெரியப் போற இருக்கே? கண் எனக்கு வெளியிலேதான் திறக்கல்லே உள்ளுக்குள்ளே திறந்திருக்கு.''

தான் சொல்வதையெல்லாம் இவள் புரிந்து கொள்வாளா என்கிற ஆதங்கத்துடன் அவன் பேசுவது போல் இருந்தது. அவள் உணர்ச்சிவசப்பட்டுப் போனாள். தன்னைச் சமாளித்துக் கொண்டு சிரித்தாள்.

''ஞானக்கண்ணா?''

''இருக்கலாம்!'' என்று அவன் சிரித்தான். ''தமிழ் வார்த்தைன்னா அது?''

''எங்க பாட்டி சொல்ற கதையிலே அநேகமா அந்த வார்த்தை அடிபடும். இப்பத்தான் அதோட அர்த்தம் புரியறது. எனக்கு விளங்காத விஷயமெல்லாம் உனக்கு விளங்கலாம்.''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது'' என்றான் அவன் கூச்சத்துடன். ''என்னைக் கண்டு நீ ரொம்ப சங்கடப்பட வேண்டியதில்லேன்னு சொல்றேன் அவ்வளவுதான்.''

''ஓ.கே. ஆடிக் காண்பிக்கிறேன்'' என்று அவள் உற்சாகமாக எழுந்தாள். ''உள்ளே வந்து உட்காரு'' என்று அவன் தோளைப் பற்றினாள். ''இங்கே திறந்த வராந்தாவிலே ஆடினா தெருவெல்லாம்





துன்னு நினைக்கிறே!''

அவள் சங்கடத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள். 'குருட்டுப் பய' என்று அவன் சொன்ன போது அது ரொம்பக் கொடூரமான வார்த்தையாய்த் தொனித்தது. எதையும் மறைத்துப் பேசும் வழக்கமில்லாததால், ''சந்தேகம் வந்தது. ஆமாம்,'' என்றாள். ''பார்த்து அனுபவிக்க வேண்டிய விஷயத்தை உன்னாலே அனுபவிக்க முடியுமா என்கிற சங்கடத்தினாலே.''

''நீ சங்கடப்பட வேண்டியதில்லே'' என்றான் அவன் சாதாரணமாக. ''ரசனை என்கிறது உன் அளவுகோல்படி இருக்கணும்னு நீ நினைக்கிறே. என் ரசனைக்கு அளவு கிடையாது. வரம்பு கிடையாது - ஆகாசத்துக்கு வரம்பு இல்லாத மாதிரி - தைத்தத்தைன்னா உனக்கு நாலைஞ்சு அடவுகளைத்தான் திருப்பித் திருப்பிப் போட முடியும். எனக்குள்ளே ஆயிரமாயிரம் அடவுகள் தோணும். எனக்குக் கண்ணில்லேங்கறதை மட்டும் நீ பார்க்கறே. அதைத் தவிர எனக்கு எல்லாம் வேடிக்கைப் பார்க்கும். பார்த்தா எனக்கு ஒண்ணுமில்லே. என்னுடைய கவனம் சிதறிப் போகும். அது எனக்குப் பிடிக்காது.''

''ஆ, அது உண்மைதான்'' என்று அவன் எழுந்தான். ''எனக்கு அந்தக் கஷ்டம் எதுவும் கிடையாது.''

இருவரும் கைகோத்தபடி நடந்த போது அவளுக்கு எரிக்கின் நினைவு வந்தது. அவனைப் போல் ஹரியும் ஒரு நல்ல சினேகிதன் என்று சந்தோஷம் ஏற்பட்டது. ஆனால் எரிக்கும் அவளும் ஒரே வயது. அவனுடன் சேர்ந்து மரம் ஏறினதும் சைக்கிள் ஓட்டியதும் பனிக்கட்டியில் சறுக்கியதும் உற்சாகமான அனுபவங்கள். இருவருக்கும் வகுப்பில் ஒரே ஐக்யூ. அவனுக்கும் அவளுக்கும் கிட்டத்தட்ட எப்பவும் ஒரே க்ரேட். ஹரியுடன் பேசும் போது ஏற்படும் உற்சாகம் வித்தியாசமானது. தோழன் என்கிற உருவத்துக்குள் இவன் ஒரு ஆசான் என்கிற பிரமிப்பு ஏற்படுகிறது. இவனுடைய அங்கஹீனமே இவனுடைய

ப்ளஸ் பாயின்ட் என்று அவளுக்கு விசித்திர மாகத் தோன்றிற்று.

நடுக்கூடம் அவனுடைய சௌகர் யத்துக்காகவே அதிக அடைசலில்லாமல் வைக்கப்பட்டிருக்க வேண்டும். அங்கிருந்த நாற்காலிகளை ஓரமாக ஒதுக்கி விட்டு அவனை உட்கார வைத்து நிலத்தைத் தொட்டு வணங்கி அவள் ஆரம்பித்தாள்.

மெல்லிய குரலில் 'தாம்தித்தாம் தைத் தத்தை' என்று ஆரம்பித்த போது ஹரி உற்சாகத்துடன் நிமிர்ந்து தாளம் போட் டான். அவள் ஆடிக் கொண்டு போகையில் அவன் முகத்தில் தெரிந்த சந்தோஷம் நம்ப முடியாததாக இருந்தது. 'தை திதித்தை' அடவைப் பிடிக்கும் போது 'சபாஷ்' என்றான். அவனுக்குப் பார்வை இல்லை என்பதே மறந்து போயிற்று. அவள் அலாரிப்பை முடித்தவுடன் அவன் கை யைத் தட்டி 'ரொம்ப நல்லா ஆடறே மீரா' என்று சொன்னது மிக இயல்பான மகிழ்ச் சியை அளித்தது. முகத்தில் வழிந்த வியர் வையைத் துடைத்துக் கொண்டு அவள் அவனருகில் ஒரு நாற்காலியைப் போட்டு அமர்ந்தபடி 'தாங்க்யூ ஹரி' என்றாள். நாட்டியம் ஆடி இத்தனை சந்தோஷம் என் றும் ஏற்பட்டதில்லை என்று தோன்றிற்று.

''ஆடிக் காட்டினதுக்கு ரொம்ப தாங்க்ஸ்'' என்றான் ஹரி. ''நா நிஜமாகவே ரசிச் சேன்.''

''எனக்குத் தெரியும்.''

அவன் சிறிது மௌனத்துக்குப் பிறகு ''நீ ரொம்ப நல்ல பெண் மீரா!'' என்றான். அவள் வியப்புடன் அவனைப் பார்த்துச் சிரித்தாள்.

''ஐ ஆம் நாட் ஸோ ஷ்யூர்! நேத்து ராத்திரி எங்கப்பாவோட பெரிய சண்டை போட்டேன். இன்னிக்குக் காலையிலே அவர் சமாதானமாப் பேச வந்தார். பேச முடியாதுன்னு சொல்லிட்டு இங்க வந்துட் டேன். இங்கே வந்த போது மூடு அவுட்டா யிருந்தது.''

''இப்ப மூடு திரும்ப வந்துட்டதா?''

''ஓ யெஸ்!''

''இப்பச் சொல்லு ஏன் சண்டை போட்டே?''

சொன்னால் இவனுக்குப் புரியுமா என்ற தயக்கமில்லாமல் அவள் விலாவாரி யாக நடந்தவற்றையும் அதன் பின்னணியை யும் சொன்னாள். சொல்லும் போது மீண்டும் துக்கம் ஏற்பட்டது.

''எங்கப்பா அம்மா மேல இருந்த நம்பிக்கையே எனக்குப் போயிட்டது!'' என் றாள் கோபமாக. ''அங்கேயிருந்து இளம் பறதுக்கு முந்தி எங்கிட்டப் பேசியிருக்க லாம். பேசல்லே. இப்ப சொல்றது அதிர்ச்சி தருது. என்னை ஏமாத்தின மாதிரி இருக்கு.''



''ஹலோ... எப்ப ஃபோன் பண்ணி னாலும் ராங் நம்பராவே கிடைக்குது சார்... கொஞ்சம் வந்து பார்க்கறீங்களா...?''

''ஏதோ, ராங் நம்பராவது கிடைக்கு தேன்னு சந்தோஷப்படறதை விட்டுட்டு... நீங்க வேற...''

- சீர்காழி. வி. ரேவதி

அவன் சற்று நேரத்துக்கு எதுவும் பேசவில்லை. ''உன்னுடைய கோபம் எனக்குப் புரிகிறது'' என்றான் மெல்ல. ''ஆனா அவங்க உன்னை ஏமாத்தினதா நான் நினைக்கல்லே.''

''எனக்கு அப்படித்தான் தோணுது. நீ ஃபிலாஸஃபி பேசாதே.''

''தத்துவம் இல்லே இது வெறும் தர்க்கம் என்று அவன் சிரித்தான். ''உன்னை ஏமாத்தி அவங்களுக்கு என்ன ஆகணும்?''

அவள் பேசாமல் யோசனையில் ஆழ்ந் தாள். ''எனக்குப் புரியல்லே'' என்றாள் மெள்ள.

''உங்கப்பாவுக்கு வேறு பல பயங்கள் இருந்திருக்கலாம்.''

''எனக்கு இதுவரை எதுவும் சொன்ன தில்லே.''

''மனசிலே இருக்கிற எல்லாத்தையும் சொல்லிட முடியாது மீரா. நமக்குள்ள சில அந்தரங்கங்கள் இருக்கும்.''

''நான் எல்லாத்தையும் சொல்லிடு வேன்.''

அவன் சிரித்தான்.

''உன்னாலே கூட நினைக்கிறதையெல் லாம் சொல்லிட முடியாது. மத்தவங்க ளுக்குச் சங்கடம் கொடுக்கக்கூடிய விஷயங் களை நீ வெளிப்படையா சொல்லுவியா?''

அவள் பேசவில்லை. அவன் சிநேகித மாக அவளுடைய கையைப் பற்றினான்.

''உங்கப்பா தன் அந்தரங்கங்களை எல் லாம் உங்கிட்ட சொல்ல வேண்டிய அவ சியமில்லே. அவர் சொல்லாததாலே உன் மேல அவங்களுக்கு நம்பிக்கை இல் லேன்னு அர்த்தமில்லே. ஒரு முடிவு எடுக்க ஒரே காரணம் எப்பவும் இருக்க முடியாது. பல காரணங்கள் பின்னணியிலே இருக்கும். அதைப் புரிஞ்சுக்கணும் - தெரிஞ்சுக்க ஆசைப்படக் கூடாது.''

''இனிமே நீதான் எனக்குக் குரு''. என்று அவள் விளையாட்டாகச் சொல்ல நினைக்கையில்,

''நானும் ரொம்பக் கஷ்டப்பட்டிருக் கேன். புரிஞ்சுக்காததனாலே'' என்றான் அவன் புன்னகை மாறாமல்.

(தொடரும்)

## உங்கள் செல்வம் :

# வங்கிகளுக்கும் உண்டு வேதனைகள்!

வங்கியில் நீங்கள் சேமிப்புக் கணக்கு வைத்திருந்தால் கிடைக்கும் வட்டி 5 சதம். வைப்பு நிதி என்று சில ஆண்டுகளுக்குத் தொடாமல் இருந்தால் கிடைக்கும் வட்டி அதிகபட்சமாகப் 13 சதம். ஆனால் அதே வங்கி, தொழில்துறைக்குக் கடன் தரும் போது 25 சதம் வரை வட்டி வசூலிக்கிறது.

''இவ்வளவு அதிகமாக வங்கிகள் வட்டி வாங்கும்போது, நமக்கு இன்னும் கொஞ்சம் கூடுதல் வட்டி கொடுத்தால் என்ன?'' என்று வங்கியில் பணம் போட்டு வைக்கும் சராசரி மனிதன் எண்ணுகிறான்.

வட்டிவிகிதங்களை அரசுதான் நிர்ணயிக்கிறது என்பது ஒரு புறமிருக்க, வங்கிகள் எந்த அளவுக்குக் கடன் தரலாம் என்பதையும் அரசுதான் நிர்ணயிக்கிறது! வங்கிகளில் மக்கள் போட்டு வைக்கும் பணத்தையெல்லாம் அவை. கடனாக வழங்கி விட முடியாது. அந்தப் பணத்தில் 56 சதம் அப்படியே உறைந்து போகுமாறு அரசு செய்து விடுகிறது. எப்படி?

வங்கிகளில் மக்கள் போட்டு வைக்கும் மொத்தப் பணத்தில் 38 சதவீதத்தை அரசாங்கக் கடன் பத்திரங்களில் வங்கிகள் முதலீடு செய்யவேண்டும் என்று ஒரு விதி முறை உள்ளது. இந்த விதியை வங்கிகள் மீற முடியாது. அதே சமயம், ஆண்டு தோறும் தான் அறிவிக்கும் கடன் பத்திரங்களுக்குப் பணம் திரட்டுவது இதன் மூலம் அரசுக்கு எளிதாகிறது. மக்கள் வங்கிகளில் சேமிக்கும் தொகை, ஆண்டுதோறும் 20 சதம் அதிகரித்து வருவதால், ஆண்டு தோறும் அரசு கடன் பெறுவதும் சுலபமாகிறது.

இது தவிர இன்னுமொரு கட்டுப்பாடும் வங்கிகளுக்கு உண்டு. அதாவது வங்கியில் மக்கள் போட்டு வைக்கும் மொத்தப் பணத்தில் பதினைந்து சதவீதத்தை ரிஸர்வ் வங்கியில் காப்பு நிதியாக வங்கிகள் வைத்திருக்க வேண்டும். இதையும் தவிர மேலும் ஒரு விதிமுறையும் அரசு சமீபத்தில் ஏற்படுத்தியுள்ளது. அதாவது 1991 மே மாதம் 3 ம் தேதியன்று வங்கிகளில் போடப்பட்டுள்ள மொத்த டெபாசிட்கள் எவ்வளவு என்று நிர்ணயித்து, அதற்கு மேல் கூடுதலாகும் டெபாசிட்களில் பத்து சதவீதத்தைக் கணக்கிட்டு, அதையும் ரிசர்வ் வங்கியில் காப்பு நிதியாகக் கொடுத்து வைக்க வேண்டும். இதையும் சேர்த்தால் வங்கிகளின் கைவசம் உள்ள பணத்தில் கிட்டத்தட்ட 56 சதம் ரிசர்வ் வங்கியிடமும் அரசிடமும் போய் விடுகிறது. இந்த கட்டாயக் கொள்முதலுக்கு எஸ்.எல்.ஆர். என்று பெயர். (Statutory Liquidity Ratio). ஆகக் கூடி வங்கிகளிடம் கடன் தருவதற்கு மிச்சமிருப்பது 44 சதமே. இந்த 44 சதத்திலிருந்துதான் அவர்கள் தொழில்துறைக்கும் வியாபாரத்துக்கும் கடன் தந்து லாபம் காண வேண்டும். இது காரணமாகத்தான் வங்கிகளில் கடன் பெறுவதும் சமீபகாலமாகத் தொழில் வர்த்தகத் துறைக்குச் சிரமமாகி வருகிறது.

வங்கிகள், ரிசர்வ் வங்கியிலும் அரசிடமும் போட்டு வைக்கும் 56 சதம் பணத்துக்கு வட்டி உண்டு. ஆனால் இது கிட்டத்தட்ட பத்து சதம் தான். வங்கிகள் மக்களுக்கு வைப்பு நிதி மீது தரும் வட்டியோ இதைவிடவும் அதிகம். இதனாலெல்லாம் தான், வங்கிகள் தொழில் வர்த்தகத் துறையினரிடம் மிக அதிகமாக வட்டி வசூலித்து, சேமிப்புச் செய்யும் மக்களுக்கு ஒப்பு நோக்க மிகக் குறைந்த அளவில் வட்டி தருகின்றன.

வங்கிகளில் கடன் வாங்க என்னும் தொழிலதிபர்களும் வியாபாரிகளும் வங்கிகளை ரொம்பவும் நெருக்கும் போது, வங்கிகளும் கடன் வாங்கி இவர்களுக்குக் கடன் தருகின்றன! இதனை Inter-bank market என்பர். இன்ஷுரன்ஸ் நிறுவனங்கள், மற்றும் பல நிதி நிறுவனங்கள் வசம், உபரிப்பணம் இருந்தால், இப்படி வங்கிகளுக்குக் கடன் தருவார்கள். ஆனால் இதற்கு வட்டி விகிதம் மிகவும் அதிகம்!

இந்தியாவில் இன்றைய நிலையில், கடன் தர வங்கிகளிடம் பணம் இல்லை. இதனால் தொழில்-வர்த்தகத் துறை மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறது. சமீபத்தில் தொழில் வர்த்தக சங்கம் அரசிடம் எஸ்.எல்.ஆர் கட்டுப்பாடுகளைத் தளர்த்துமாறு வலிமையான விதத்தில் முறையிட்டுள்ளது. அப்போதுதான் தொழில் துறைக்கு அதிக நிதி வசதி கிடைத்து, பொருளாதாரம், செழிக்க முடியும் என்பதால், சர்வதேச நிதி நிறுவனமும் இதனை நமது அரசுக்குச் சிபாரிசு செய்துள்ளது.

இந்தச் சிபாரிசை ஏற்காது போனால் சர்வ தேச நிதி நிறுவனத்தினிடம் இந்திய அரசு கடன் பெறுவது சாத்தியமின்றிப் போகக்கூடும் என்பதால், இந்திய அரசு இதற்கு ஓரளவு சம்மதிக்கும் என்றும் தோன்றுகிறது.

- வி. கோபாலன்

# பிதர்களுக்கு சிராத்தம் ஏன்? அவசியம் செய்ய வேண்டும்



சிராத்தம் போன்ற சடங்குகள் உண்மையில் பிராண ஜீவனுக்காகவே செய்யப்படுகின்றன. ஜீவனுடைய பிராண அதிர்வுகள் அதைப் பிராண லோகங்களுடன் அல்லது பூலோகத்துடன் தளைப்படுத்துகின்றன. அந்த அதிர்வுகளை நீக்குவதற்கு இந்த சடங்குகள் ஜீவனுக்கு உதவுகின்றன. இதனால் ஜீவன் சைத்திய சாந்தத்தில் ஓய்வெடுக்க விரைவாகச் செல்வது இயலும்.

—ஆதாரம் வைகறை 1991-92



"வாங்க தங்கராசு. கால் பந்து 'இத்தாலியா 90' ஜக்கமா பாத்திருப்பீங்க. நீங்களும் அந்த காலத்துப் பிரபல ரெஃப்ரி ஆச்சே!"

"வாஸ்தவந்தான். பொழுது, உதைச்ச பந்தா ஓடிப் போச்சுது. நீங்க பாத்தீங்களா?"

"எங்கேங்க, காலையிலே கொஞ்சம் டீ.வி. யிலே பார்க்கிறதுதான். அர்த்த ராத்திரியிலே டீ.வி.யிலே பந்தாட்டம் பார்க்க எங்க சிவன் இருக்குது.... ஏதோ சினிமான்னாலும் பார்க்கலாம்?"

"கூட்டத்தைப் பாத்தீங்களா?"

"அடியாத்தே, என்ன கூட்டம்! என்ன உற்சாகம்! பொம்பிளைங்களெல்லாம் எப்படிக் குதிக்கிறாவ. என்னதான் சொல்லுங்க, கால்பந்தாட்ட விறுவிறுப்பு கிரிக்கெட்டுக்கு வராதுங்க. மட்டையடி ஒரே டல்லுங்க. இந்த லட்சணத்துக்குக் கிரிக்கெட்டுக்கு நின்ன இடத்திலே நின்னுக்கிட்டு இரண்டு அம்பயர். பந்து வீச்சுக்காரன் தொப்பி மாட்டறதுக்கு ஸ்டாண்டு மாதிரி. கால் பந்துலே கண்குத்திப் பாம்பா ஒரு ரெஃப்ரி - என்னம்மா கவனிக்கான்! எப்படி ஓடுதான்."

"கூட உதவிக்கு இரண்டு லைன்மேன் உண்டுங்க."



போட்டிக் கதை - 17

திக்விஜயன்

''கால் பந்து ரெஃப்ரிக்கு ஸுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் மாதிரி என்ன பவருங்க! ஃபெளல் பண்ணினா பாக்கட்டிலிருந்து மஞ்சள் கார்டு எடுத்துக் காண்பிக்கிறான். ஆட்டக்காரன் பெட்டிப் பாம்பா ஆயிட றாங்க. அண்ணாச்சி, நம்ம சட்டசபை ஸ்பீக்கர் கையிலே இந்த மாதிரி கார்டுகள் கொடுத்திட்டா கை கலப்பு-கலாட்டா செய்யற அங்கத்தினரையெல்லாம் அடக்கிரலா மில்ல.''

''நீங்க ஒண்ணு... சட்டசபையிலே ஒழுங்கு வரணும்னா மஞ்சள் கார்டு பத்துமா? மஞ்சக் கொடி பிடிக்கணும்..... கலாட்டா என்றவுடனே ஒரு ரஸமான மேச் ஞாபகத்துக்கு வருதுங்க. கேக்கிறீங்களா....?''

தங்கராசு மனத்தில் பழைய சம்பவங்கள் பந்தாடின. இருந்தாலும் பேச்சு வளர்ந்தது....

''இந்தியா, இங்கிலாந்து.... முதலிய சில நாடுகளிலே தான் கிரிக்கட்டுக்கு மவுசுங்க. இதர நாட்டிலே கால்பந்துன்னா உசிரை விடுவான். சௌதி அரேபியாவிலே ஒரு சின்ன சம்பவம், சொல்றேனுங்க. ஒரு ஆட்டக்காரன் அடிபட்டு விழுந்தான். ஆசுபத்திரிக்கு எடுத்துப் போனாங்க. கிரிக்கட்டிலே அடிபட்டதுன்னு உண்மையைச் சொன்னாங்க. ஒரு கம்பவுண்டர் கூட கவனிக்கலை. கூட வந்த நண்பன் பார்த்தான். புட்பால் ஆடும்போது அடிபட்டதுன்னான். உடனே மாயா மந்திரம் உச்சரித்த மாதிரி ஆசுபத்திரி பரபரத்தது. கால் ஒடிஞ்சவனுக்கு வி.ஐ.பி. கவனிப்பு! கால் பந்துக்கு அவ்வளவு பெருமை.....''

# தருக்கும் திறமிலேன்




''இருக்கும் இருக்கும்.....''

''டைம்ஸ் பத்திரிகை ஆசிரியரு எழுதினாரு. புட்பால் ஆட்டம் பாலே நடனம் மாதிரி. ஆட்டக்காரர் அசைவு நாட்டியம் போல. கூட்டத்தின் ஆரவாரம் இசை மாதிரி. 'மின் விளக்கு நிலா' வெளிச்சத்திலே பந்தாட்டப் போட்டி ஒரு சஸ்பென்ஸ் மிக்க சூழ்ச்சி நாடகம் போல....''

''ரெஃப்ரி விஸிலடிச்சா நாடகத்திலே ஸீன் விழுந்தாப்பலன்னு சொல்லுங்க....''

''ஆமாம். அதிருக்கட்டும். நான் சொல்ல வந்தது ஒரு முக்கியமான மாச்சைப் பத்தி.... ரயில்வே அணிக்கும் போலீஸுக்கும் இடையிலே கடைசிச் சுற்று. நான்தான் ரெஃப்ரி. ஸ்டேடியத்திலே பூப்பந்து கூட விழமுடியாதபடி கூட்டம். உள்ளூர் போலீஸ் ஆதரவாளர்கள் பம்பை, மேளம், பட்டாசு, மெகபோன் சகிதம் ஒரே சப்தம். போலீஸ் ஒரு கோலுக்குத் தப்பிச்சா ஒரே ஆரவாரம். ரயில்வே ஃபவுல் பண்ணினா எதிர்ப்பு கோஷம். ரெஃப்ரிக்கும் ஒரே டென்ஷன்தான். ரயில்வே, போலீஸ் அதிகாரிங்க உக்காந்து இருக்காங்க. ரெஃப்ரி சாலமன் மாதிரி தீர்ப்பு கொடுக்கணும். கொஞ்சம் தப்பினா கூச்சல் தான்.

''ரயில்வே அணி கொஞ்சம் ஸுப்பீரியர். போலீஸ் டிபன்ஸ் விளையாட்டுத்தான். ரயில்வே ஒரு பெனல்டி கார்னர்லே பிழைச்சுது. போலீஸ் ரைட்-அவுட் கண்டய்யா, தூரப்பந்து ஷாட் அடிச்சபோது பந்து போஸ்டிலே அடிக்க வெளியே எகிறிடுச்சி.

''ரயில்வே பார்வர்டு ஜேம்ஸ், எமப்



''சரித்திர நாவல் போட்டிக்கு நாவல் அனுப்புனீங்களே! என்ன ஆச்சு?''

''புறமுதுகு காட்டி ஓடி வந்திடுச்சு...!''

- மணியன் தர்மலிங்கம்

பேர்வழி - மாரடோனா மாதிரி! எதிர்க்கட்சி ஆளுங்களை நெய்க் கடசல் பண்ணினான்.

''ஆப்டைம் ஆன பிறகு ரயில்வே ஒரு மூவ் பாருங்க, நூல் பிடிச்ச மாதிரி தங்களுக்குள்ள பத்து பாஸ்! போலீஸ் பிளேயர் ஒருத்தர் காலிலே பந்து பிடிபடணுமே! ஜேம்ஸ் பந்தை வாங்கிப் பதினைந்து மீட்டரிலிருந்து ஒரு உதை. நறுக்குத் தெரிச்ச மாதிரி ஒரு கோல். ஸ்டைலான கோலு! கோலி கீழே விழுந்தான்.

''போலீஸ் ஆக்ரோஷமா பந்தை பாஸ் செய்தது. போலீஸ் நம்பர் 10 ஒரு லாங் ஷாட்டை நிறுத்தி ஒரு உதை. ரயில்வே கோலுக்குள்ள பந்து! ஈக்வலைஸர்னு ஆதரவுக் கூட்டம் ஆரவாரம். ஆனால் நான் நம்பர் பத்து ஆப்ஸைடுன்னு தீர்ப்பு தந்து கோல் இல்லைன்னுட்டேன். போலீஸ் ஆட்டக்காரர்கள், ரசிகர்கள் கோபம் பந்து போல கிளம்பியது. அவ்வளவுதான், போலீஸ் ஆத்திரப்பட்டு முரட்டு ஆட்டம் ஆட ஆரம்பித்து விட்டது. ஜேம்ஸ் கோல் போடும் ஆட்டக்காரன் என்பதாலே எதிர்க்கட்சி அவனை ஆட விடாம கவசம் மாதிரி கவர் பண்ணினாங்க. ஃபவுல் ஆட்டம். தெருக்கு அண்டக்கு கொடுக்கிற மாதிரி காலை நீட்டி எதிர்க்கட்சி ஆளைத் தடுக்கினாங்க. என்னோட விஸில் சும்மா இருக்குமா? கூட்டம் என்னைச் சபிச்சது.

''ஐம்பதாவது நிமிஷத்திலே பந்தைத் தலையால முட்ட ஜேம்ஸ் எம்பியபோது, போலீஸ் ஃபருக் அவன் முழங்காலை இடிக்கக் கீழே தள்ளினான். ஜேம்ஸ் சுருண்டு விழுந்தான். நீண்ட விசில். ஃபௌல் தீர்ப்பு. டாக்டர் வந்தாரு. ஃபருக்கை வெளியேரச் சொன்னேன். ரசிகர்களுக்கு ஆத்திரம். போலீஸ் அணி காப்டன் என்னுடன் வாதாடத் தொடங்கினான். மற்ற ஆட்டக்காரர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டு முஷ்டியைக் காண்பித்தனர். நான் இரண்டு கைகளையும் அவுட்டர் பக்கம் காண்பித்தபடி இருந்தேன்.''

''மஞ்சக் கார்டு காண்பிச்சுடறது தானே?''

''அந்த வசதி அப்ப இல்லை. அதற்குள் கூட்டம் மைதானத்துக்குள் தடதடவென ஓடி வந்தது. பட்டாசுகள் வெடித்தன. போலீஸ் ஆதரவாளர்களுக்கு எதிராக ரயில்வே ரசிகர்களும் சூழ்ந்தனர். கை கலப்பு.

''போலீஸ் காபந்து, நாலு காவல் அதிகாரிகள் என்னைச் சுற்றிக் கைகோத்து வெளியே அழைத்துச் சென்றனர்.

''என்னங்க கால் பந்து ஒரு ஸ்போர்ட்ஸ்தானுங்களே அது நட்புணர்ச்சியை வளக்காமே எப்படி வன்முறைக்கு வழி காட்டுது?''

''ஆட்டக்காரனுக்கு ஜெயிக்கணும்கிற வெறி. சில சமயம் கையாலாகாமப் போச்சுன்னா அது கீழ்த்தரமான செயலா மாறுதுங்க. ரெஃபரிக்கு நிறைய இப்ப அதிகாரம் கொடுத்ததினாலே இப்ப ஃபௌலைக் கட்டுப்படுத்த முடியுதுங்க....!''

''அன்னைக்கு ஆட்டம் என்னாச்சு, தங்கராசு....?''

''ஆட்டம் கலாட்டாவிலே முடிஞ்சுதா? அன்னைக்கு ராத்திரி கதைதான் மனசைக் கலக்கிடுச்சி.....

''எங்களையெல்லாம் ஸ்போர்ட்ஸ் ஹாஸ்டல்ல இறக்கி இருந்தாங்க. இரண்டு பேருக்கு ஒரு அறை. அன்னைக்கு எனக்குத் தூக்கமே வரலை. திரும்பித் திரும்பி அரை குறையாப் போன ஆட்ட நினைவுதான். இரவு சுமார் ஒரு மணி இருக்கும். திடீர்னு ஒரு பெண்ணின் அலறல் தொடர்ந்து தடதடவென்று ஓடற சத்தம்.

''அவசரமா பைஜமா மாட்டிக்கிட்டு கதவைத் திறந்துகிட்டு வெளியிலே ஓடினேன்.

''பொது ஹாலில் ஒரு இளம் பெண் அரை குறை ஆடை... தலைவிரி கோலம்; விசிப்பு. இரண்டு மூன்று ஆட்டக்காரர்கள் அண்டர் வேருடன் பின்னால் துரத்தி வந்தனர். என்னைப் போன்று வந்த சிலரைக் கண்டு விட்டு அறைக்கு ஓடி விட்டனர். அவர்கள் யார் என்று எனக்குப் புரிந்தது.

''விடுதி வார்டன் வந்து பெண்ணை ஆபீஸ் அறைக்கு அழைத்துச் சென்றார். விசித்து விசித்து அழுத அவள் கதை புரிந்தது.

''ஹாஸ்டலைப் பெருக்கும் பணிப்பெண். தனது காரியாலய அறையில் இருந்திருக்கிறாள். ஆட்டக்காரர்கள் சோடா வாங்கி வர ஏவ, அவள் மறுத்திருக்கிறாள். உடனே வேட்டை.

''வார்டன் அவளைச் சமாதானப் படுத்தினார். டாக்டர் வரவழைக்கப்பட வில்லை. போலீஸுக்குத் தகவல் தெரிவிக்க ஒரு முயற்சியும் செய்யவில்லை

என்பது எனது ஆத்திரத்தை அதிகமாக்கியது. ஒன்றும் செய்ய இயலாத நிலை.

''விடிந்ததும் கசமுச என்று ரகஸியப் பேச்சுக்கள். இரவில் நடந்த அநீதியை மூடி மறைத்தார்கள். ஆட்டக்காரர்கள் பெயர் கெட்டு விடும் என்று வெளியே சொல்லவில்லை. பெடரேஷனுக்கு ரிப்போர்ட் செய்தால் ஆட்டக்காரர்கள் 'சஸ்பெண்டு' செய்யப்படலாம். அவள் ஒரு மாதிரியான பெண் என்றும் விபசாரத்திற்கு அழைத்தாள் என்றும் கூறி அவளை வேலையிலிருந்து நீக்கி விட்டனர்!

''ஆட்டம் போட்ட மிருகங்கள் காயம் ஏதுமின்றி வளையவந்தன.''

''அண்ணாச்சி என்ன அநியாயமா இருக்குதுங்க! இதுதான் ஸ்போர்ட்ஸ் கத்துத்தர கட்டுப்பாடா? பெண்களை மதிக்கிற பண்பு வேண்டாமா?''

''சத்துள்ள உணவு. கொழுத்த மிருகம் போல உடம்பு. இடையிலே வெற்றியின் மிதப்பு. அறிவுக் கண் அவிந்து விடுகிறது. ஐயா, எனக்கு என்ன வருத்தம் - ஒரு மைதானத்திலே ரெஃபரியா நான் இருக்கும்போது ஆட்டக்காரன் என்னுடைய விஸிலுக்கு, தீர்ப்புக்குக் கட்டுப்படறான். ஆனால் விடுதியிலே ஒரு அநியாயம் நடக்கும் போது இந்தத் தங்கராசுக்கு மதிப்பு இல்லை. தடுக்கும் திறம் இல்லை.''

''அண்ணாச்சி, இது ஸர்க்கஸ் போல - கூண்டுக்குள்ள இருக்கிற வரை மிருகம் சாட்டைக்குப் பயப்படும். அவிழ்த்து விட்டா அடக்குவாரில்லை. அது மாதிரி தான் இவர்களும்......''

''நீங்க சொல்றது நிசந்தானுங்க. உலகக் கோப்பை இத்தாலியிலே நடந்ததில்லை - சில தேசங்கள் தங்களுக்குள்ள ஒரு கட்டுப்பாடு விதிச்சிக்கிட்டாங்க. உலகக் கோப்பைக்கு ஆட்டக்காரங்க தங்கள் மனைவி, காதலி, இதர பெண்களை அழைச்சிட்டு வரப்படாது. செக்ஸ் இல்லாம கட்டுப்பாடா இருக்கணும். அப்பத்தான் ஆட்டக்காரங்க கூர்ந்த ஒருமித்த மனத்தோடு ஆடி வெற்றி காணலாம்னு சொன்னாங்க. ஜெயிச்ச போதெல்லாம் பூமியிலே மண்டியிட்டு ஆகாயத்தைப் பார்த்துக் கடவுளைத் தொழுதாங்க.''

''பேப்பரிலே படிச்சேனுங்க. நம்ம ஊர் சினிமாக்காரங்க கூட சாமி, அம்மன் வேஷம் போட்டா அசைவம் கூடத் தொடரதில்லைன்னு சொல்லுவாங்க. ஆட்டக் கட்டுப்பாடு மாதிரி வாழ்க்கையிலும் வேணுங்க......''

''எனக்கு விடுதியிலே நடந்த சம்பவத்தை நினைக்கும் போது காற்றை இழந்த பந்து மாதிரி மனசு சும்பிப் போவுதுங்க.....''

நடுவர் தங்கராசு தளர் நடையுடன் புறப்பட்டார்.

---



## அன்புள்ள அலமு அக்கா...

இங்கே மார்கழி குளிர் 'அட்வான்ஸ் புக்கிங்' பண்ணிக் கொண்டு வந்து விட்டது. உங்கள் ஊரில் இப்போது 'சங்கீத சீசன்' கலகலவென்று இருக்கும்...

எல்லா இசை விழாக்களையும் சென்னைப் பட்டணத்தில் ஒரே சமயத்தில் நடத்துவது என்று சபாக்காரர்கள் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் ஊர் போன்ற அரை வேக்காடு டவுன்களை யாரும் சிந்துவதேயில்லை. இங்கேயெல்லாம் கலைவிழா நடத்தினால் போணியாகாது என்று நினைக்கிறார்கள் போலும்.

இதனால் இந்த ஊர் குழந்தைகளுக்கு, ஏன் பல பெரியவர்களுக்கும்தான், நல்ல சங்கீதம்னா என்ன என்றே தெரியாமல் போய் விட்டது. ரேடியோவில்தான் ஓரளவு நல்ல பாட்டைக் கேட்க முடியும். ஆனால் டீ.வி. வந்த பிறகு ரேடியோக்களெல்லாம் கூடா போட்டுக் கொண்டு விட்டன. டீ.வி.யிலோ எப்பேர்ப்பட்ட பாடகருக்கும் அளந்து அரை மணிதான் 'டைம்' தருகிறார்கள். அதற்குள் அவர் கறுகறுப்பாய் ஆரம்பித்து, 'கல்யாணி'யைக் கோடி காண்பித்து, தனி ஆவர்த்தனத்துக்கு 'டைம்' ஒதுக்கி, ஒரு துக்கடாவும் பாடி விட வேண்டும் - சங்கீதத்தை ஷாம்பூ 'சாஷே'க்குள் அடைத்த மாதிரி...!

நிற்க - பாட்டு வாசனையே தெரியாமல் வளர்கிறார்களே என்ற கவலையில் இங்கே பல தாய்மார்கள் குழந்தைகளைப் பக்கத்துத் தெரு பாட்டுக் கிளாஸுக்கு அனுப்புகிறார்கள். அங்கே கும்பலோடு கோவிந்தாவாகக் கற்றுக் கொண்டு ஆறு மாதத்துக்குள் 'கீர்த்தனை' பாட ரெடியாகிறார்கள் குழந்தைகள். எங்கேயாவது யாராவது பாடச் சொன்னால் சூப்பர் தைரியமாகப் பாடியும் விடுகிறார்கள். கேட்பவர்களுக்குத்தான் பயமாக இருக்கிறது - அடிப்படை விஷயமான 'சுருதி' என்பது பற்றிய பிரக்ஞையே இந்தக் குழந்தைகளுக்கு இல்லையே என்று. சராசரியாக இருந்தாலும், பாட்டில் சுருதி சேர வேண்டும் என்பதைக் கற்றுத் தர வேண்டாமா. தான் சரியாகப் பாடவில்லை என்பதை உணராமலே குழந்தைகள் மேலே மேலே கற்றுக் கொள்வதால் யாருக்கு என்ன புண்ணியம்?

பாட்டுக் கிளாஸில் கற்று வருவதை வீட்டில் பாடச் சொல்லிக் கேட்க அம்மாக்களுக்கு நேரம் கிடையாது. டீ.வி. பார்ப்பதற்கு முன்னால் ஹோம் ஒர்க் முடிக்கச் செய்ய வேண்டுமே என்பதுதான் இலக்கு...!

எல்லா குழந்தைகளும் மேடை ஏறிக் கச்சேரி பண்ண முடியாதுதான் - ஆனால் குறைந்தபட்சம் தப்பில்லாமல் பாட வேண்டுமானால் அவர்கள் நல்ல சங்கீதத்தை நிறையக் கேட்க வேண்டும். வீடியோ காஸெட்டுக்குச் செலவழிப்பதில் பாதியைக் கர்நாடக இசை காஸெட் வாங்கச் செலவழித்தால் குழந்தைகள் காதில் நல்ல பாட்டு விழுமே... இல்லையென்றால் 'சங்கீத ஞானமு பக்தி வினா' என்று சுருதி சேராமல் பாடிக் கொண்டு 'இன்னிக்கு ஒலியும் ஒளியும் இல் என்ன காட்டுவார்கள்' என்றுதான் யோசித்துக் கொண்டிருப்பார்கள்!


என் தோள் மேலாக இந்த லெட்டரைப் படித்து விட்டு ஆனந்த், 'வர வர நீ உன் அக்கா மாதிரியே ஆயிட்டிருக்கே...' என்று கமெண்ட் அடிக்கிறார். 'சைஸி'லும் அக்கா மாதிரி ஆகாமல் இருந்தால் சரிதான்...

இண்டல் 'மூடில்',

- அம்பு



# சிவகாமியின் சபதம்



## இருபத்தொன்பதாம் அத்தியாயம்
## காற்றும் நின்றது!

மறுநாள் அதிகாலையில் நமசிவாய வைத்தியரிடமும் அவருடைய குடும்பத்தாரிடமும் விடைபெற்றுக்கொண்டு மாமல்லரும் பரஞ்சோதியும் புறப்பட்டார்கள். பாண்டிய சைனியத்தை முறியடித்துச் சின்னா பின்னமாக்கித் துரத்தி அடித்த வீரபல்லவ சைனியம் கொள்ளிட நதியைக் கடந்து அக்கரையில் ஆயத்தமாயிருந்தது. அதிர்ஷ்டவசமாக நதியில் தண்ணீர் குறைவாயிருந்தபடியால் நதியைக் கடப்பது எளிதாயிருந்தது. மாமல்லரும் பரஞ்சோதியும் கொள்ளிடத்தைக் கடந்ததும் குதிரைப்படையை மட்டும் தங்களைத் தொடர்ந்து வரும்படியும், காலாட்படையைப் பின்னால் சாவகாசமாக வரும்படியும் கட்டளையிட்டு விட்டு மேலே சென்றார்கள். சூரியன் அஸ்தமிக்கும் சமயத்தில் தென் பெண்ணைக் கரையை அடைந்தார்கள்.

அன்றைய தினம் வழிப் பிரயாணத்தின் போது மாமல்லர் அவ்வளவு குதூகலமாயில்லை. அவர் உள்ளம் கவலை கொண்ட சிந்தனையில் ஆழ்ந்திருந்ததை அவரது முகக்குறி காட்டியது.

**க**வலைக்கும் சிந்தனைக்கும் தக்க காரணம் இருந்தது. முதல் நாள் மாலை மாமல்லர் திருநாவுக்கரசரைத் தரிசிக்கச் சென்றிருந்த போது அந்தப் பெருந்தகையார் எல்லையற்ற அன்புடன் மாமல்லருக்கு ஆசி கூறினார். பாண்டியனைப் புறங்கண்டது பற்றி வாழ்த்தினார். வாதாபிச் சக்கரவர்த்தி சண்டையை நிறுத்திச் சமாதானத்தைக் கோரியது பற்றியும் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். மாமல்லரின் வேண்டுகோளின்படி காஞ்சிக்குக் கூடிய சீக்கிரத்தில் திரும்பி வருவதாகவும் வாக்களித்தார்.

அப்போது காஞ்சி மடத்தில் கடைசியாக மாமல்லரைப் பார்த்த சம்பவம் நாவுக்கரசருக்கு நினைவு வந்தது.

''பல்லவ குமாரா! ஆயனர் சுகமாயிருக்கிறாரா? அவருடைய மகள் சிவகாமி சௌக்கியமா? அன்றைக்கு மடத்தில், 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்' என்ற பாடலுக்கு அந்தப் பெண் அபிநயம் பிடித்த காட்சி அப்படியே என் மனக் கண் முன்னால் நிற்கிறது. முடிவில் உணர்ச்சி மிகுதியால் மூர்ச்சித்தல்லவா விழுந்து விட்டாள்? தந்தையும் மகளும் சௌக்கியமாயிருக்கிறார்களா?''

இவ்விதம் சுவாமிகள் கேட்டுக் கொண்டிருந்தபோது மாமல்லருக்கும் ஏதேதோ பழைய ஞாபகங்கள் வந்தன. சிறிது தயக்கத்துடன், ''காஞ்சி முற்றுகைக்கு முன்னால் அவர்களை நான் பார்த்ததுதான். வராக நதிக்கரையில் மண்டபப்பட்டுக் கிராமத்தில் இருக்கிறார்கள். போகும்போது அவர்களைப் பார்க்க எண்ணியிருக்கிறேன்'' என்றார்.

அதைக் கேட்ட நாவுக்கரசர், ''அப்படியா? மண்டபப்பட்டு வெகு அழகான கிராமம். அவர்களைப் பார்த்தால் நான் ரொம்பவும் விசாரித்ததாகச் சொல்ல வேணும். அந்தப் பெண் சிவகாமியை நினைத்தால் என் மனம் ஏனோ உருகுகிறது. பல்லவ குமாரா! ஆயனரிடம் அப்போதே சொன்னேன். சிவகாமியை அன்றைக்குப்

அமரர் கல்கி

பார்த்தபோது, எதனாலோ 'இந்தப் பெண்ணுக்கு ஒன்றும் நேராமலிருக்க வேண்டுமே!' என்ற கவலை எனக்கு உண்டாயிற்று. ஏகாம்பரநாதர் கருணை புரிய வேண்டும்'' என்றார்.

மேற்கூறிய மொழிகள் மாமல்லருடைய உள்ளத்தில் பதிந்து அவருடைய உற்சாகத்தையெல்லாம் போக்கடித்து விட்டன.

''சிவகாமிக்கு ஒன்றும் நேராமலிருக்க வேண்டுமே'' என்பதை ஒரு மந்திரம் போல் அவருடைய மனம் ஜபித்துக் கொண்டிருந்தது. அந்த நிமிஷமே சிவகாமியைப் பார்க்க வேண்டும் என்ற அபரிமிதமான ஆசை அவருடைய இருதயத்தின் அந்தரங்கத்திலிருந்து பொங்கி எழுந்து அவருடைய உடம்பின் ஒவ்வோர் அணுத்துவாரம் வழியாகவும் வெளியே வியாபித்தது. அவருடன் கிளம்பிய குதிரைப்படை வெகுதூரம் பின் தங்கும்படியாகத் தம் குதிரையை அவர் எவ்வளவோ வேகமாகச் செலுத்திக் கொண்டு போனபோதிலும் அந்த வேகங்கூட அவருக்குப் போதவில்லை.

''பிரபு! குதிரையைக் கொன்று விடுவதாக உத்தேசமா?'' என்று பல தடவை பரஞ்சோதி எச்சரிக்கை செய்து அவரை நிறுத்த வேண்டியதாயிருந்தது.

இரண்டுநாள் முன்னதாகவே மண்டபப்பட்டுக்கு அவர் அனுப்பியிருந்த கண்ணபிரான் எதிரே வந்து ஏன் செய்தி சொல்லக் கூடாது என்று அடிக்கடி எண்ணமிட்டார்.

இந்த எண்ணம் அவர் தென் பெண்ணையைத் தாண்டிச் சிறிது தூரம் போனதும் நிறைவேறியது. கண்ணபிரான் ரதத்தை வேகமாக ஓட்டிக் கொண்டு எதிரே வந்தான். ஒரு கணம் ரதத்தில் வேறு யாராவது இருப்பார்களோ என்று ஆவலுடன் மாமல்லர் பார்த்தார். உடனே, அவ்விதம் எதிர்பார்ப்பதற்கு எவ்வித நியாயமும் இல்லையென்று தாமே சமாதானம் செய்து கொண்டார்.

கண்ணபிரான் கொண்டு வந்த செய்தி மாமல்லருக்கு முதலில் ஏமாற்றத்தையளித்தது. பிறகு, அதுவே ஓரளவு ஆறுதலையும் மனச் சாந்தியையும் அளித்தது.

அந்தச் செய்தியானது, மகேந்திர பல்லவர் இரண்டு வாரத்துக்கு முன்பே தூதர்களை அனுப்பி ஆயனரையும் சிவகாமியையும் காஞ்சிக்கு வரவழைத்துக் கொண்டார் என்பதுதான்.

இதனால் தாம் போகிற வழியில் சிவகாமியைப் பார்க்க முடியாமலிருப்பது உண்மையே. அதனால் என்ன? காஞ்சியில் அவர்கள் பத்திரமாயிருப்பார்கள் அல்லவா?

யுத்தம் முடிந்ததும் முதல் காரியமாக மகேந்திர பல்லவர் ஆயனரையும் சிவகாமியையும் நினைவு கூர்ந்து அவர்களைக் காஞ்சிக்குத் தருவித்துக் கொண்டது மாமல்லருக்கு மிக்க திருப்தியையளித்தது. இதிலிருந்து பல ஆகாசக் கோட்டைகளைக் கட்டத் தொடங்கினார். எதற்காக அவர்களை அவ்வளவு அவசரமாக மகேந்திர பல்லவர் காஞ்சிக்கு வருவித்துக் கொண்டார்? எதற்காகத் தம்மையும் பாண்டிய சைனியத்தைத் தொடர்ந்து போகாமல் திரும்பி வரும்படி கட்டளையிட்டிருக்கிறார்?

ஒருவேளை தமது மனோரதத்தை அறிந்து விரைவிலேயே விவாகத்தை நிறைவேற்றி விடலாம் என்ற எண்ணமாயிருக்குமோ?

இத்தகைய பற்பல மனோராஜ்யங்களிலும், அவற்றைக் குறித்துத் தளபதி

## அருள்வாக்கு

பொதுவாகவே பணத்தின் 'டச்' (ஸ்பரிசம்) வந்துவிட்டால் அதோடு ஒரு காரியத்தில் அநேகக் கெடுதல்கள் வந்துவிடும். பொதுத் தொண்டு செய்யப் புறப்படுகிறவர்கள் பண விஷயத்தில் ரொம்பவும் ஜாக்ரதையாயிருக்க வேண்டும். நல்ல ஆதரவு, திரவிய ஸஹாயமாக



பரஞ்சோதியிடம் பேசுவதிலுமாக மாமல்லருக்கு அன்றிரவு நேரம் வராக நதிக்கரையில் சென்றது. இதற்குள் பின் தங்கிய குதிரைப் படையும் வந்து சேர்ந்தது.

மறுநாள் அதிகாலையில் எல்லோருமாகக் காஞ்சியை நோக்கிக் கிளம்பினார்கள். அன்றிரவே காஞ்சியை அடைந்து விடலாம் என்ற எண்ணத்தினால் எல்லோருக்குமே பரபரப்பு அதிகமாயிருந்தது.

**வ**ராக நதியிலிருந்து ஒரு காத தூரம் போனவுடன், எதிரே இரண்டு குதிரை வீரர்கள் வருவதைப் பாரத்ததும் எல்லாருடைய பரபரப்பும் உச்ச நிலையையடைந்தது. வருகிறவர்கள் காஞ்சியின் தூதர்களாகத்தான் இருக்கவேண்டும். என்ன செய்தி கொண்டு வருகிறார்கள்?

அருகில் நெருங்கியதும் வந்தவர்கள் குதிரை மீதிருந்து குதித்திறங்கி மாமல்லருக்கு வணக்கம் செலுத்தினார்கள். ஒருவன் மாட்டுக் கொம்பில் வைத்துப் பத்திரமாய்க் கொண்டு வந்திருந்த ஓலையைப் ''பிரபு! சக்கரவர்த்தியின் ஓலை!'' என்று கூறிய வண்ணம் மாமல்லரிடம் கொடுத்தான். இன்னொருவன் தான் கொண்டு வந்திருந்த மற்றோர் ஓலையைப் பரஞ்சோதியிடம் கொடுத்தான்.

இருவரும் உடனே ஓலைகளைப் படிக்கத் தொடங்கினார்கள்.

அவர்கள் ஏறியிருந்த குதிரைகள் நின்றன.

ஓலைகளைக் கொண்டு வந்திருந்த தூதர்கள் நின்றார்கள்.

மாமல்லரைத் தொடர்ந்து வந்த வீரர்கள் நின்றார்கள்.

அவர்களுக்குக் கொஞ்ச தூரத்துக்குப் பின்னால் பெரும் புயலைப் போலப் புழுதிப் படலத்தைக் கிளப்பிக் கொண்டு வந்த பதினாயிரம் குதிரைப்படை வீரர்களும் நின்றார்கள்.

சற்று நேரம் காற்றுக்கூட வீசாமல் நின்றது.

மரக்கிளைகளும் இலைகளும் அசையாமல் நின்றன.

**ம**கேந்திர பல்லவரின் ஓலையின் முதல் சில வரிகளைப் படித்ததும் மாமல்லருக்குச் சந்தேகம் உண்டாயிற்று. ஓலையை முன்னும் பின்னும் புரட்டி அந்தரங்க அடையாளம் சரியாயிருக்கிறதா என்று பார்த்தார். தூதனையும் உற்றுப் பார்த்தார். சந்தேகமில்லை; உண்மையாகவே தந்தை எழுதிய ஓலைதான்.

உடம்பெல்லாம் படபடக்க, புருவங்கள் நெறித்தேற, முகத்தில் முத்து முத்தாக வியர்வை துளிக்க, கண்கள் கலங்கிக் கண்ணீர் பெருகி அடிக்கடி எழுத்தை மறைக்க, ஒருவாறு ஓலையை மாமல்லர் படித்து முடித்தார். ஓலையில் எழுதியிருந்ததாவது.

''அருமைப் புதல்வன் வீர மாமல்லனுக்கு, கர்வபங்கமடைந்த தந்தை மகேந்திர வர்மன் கண்ணில் கண்ணீருடனும் மனத்தில் துயரத்துடனும் எழுதிக் கொண்டது.

''குழந்தாய்! என்னுடைய சாணக்கிய தந்திரமெல்லாம் கடைசியில் பயனற்றுப் போய் விட்டன. நான் ஏமாந்து விட்டேன். உன்னுடைய நேர்மையான யோசனையைக் கேட்காமல் போனதற்காக அளவற்ற துயரமடைந்திருக்கிறேன். மகனே! அந்தப் பாதகப் புலிகேசி என்னை வஞ்சித்து விட்டான். இரண்டு வாரம் காஞ்சி அரண்மனையில் விருந்துண்டு நட்புரிமை கொண்டாடிச் சல்லாபம் செய்து விட்டுப் போனவன், மகத்தான துரோகம் செய்து விட்டான். தொண்டை மண்டலத்துக் கிராமங்

---

வும், நம் காரியத்துக்குக் கிடைத்தால் கூட அதனால் over-enthusiastic ஆகி (அதீத உத்ஸாஹம் அடைந்து) ambitious planning (அதி ஆசைத் திட்டம்) போட்டு நிறையப் பணம் 'கலெக்ட்' பண்ண ஆரம்பிக்கக் கூடாது. இப்படி ஆரம்பித்தால் அதற்கு ஒரு முடிவே இருக்காது. இதனாலே பரோபகாரம் என்கிற அன்பு எண்ணத்தையும், அதில் அங்கமாகச் செய்கிற தேவாலய கைங்கர்யங்களின் பக்தி எண்ணத்தையும் கூட, 'வசூல் எண்ணம்' முழுங்கிவிடும். எப்போது பார்த்தாலும் ரசீது புஸ்தகமும் கையுமாக அலைவதும், 'பேப்பர்காரர்களைப் பிடித்து அப்பீல் பண்ணலாமா? அட்வர்டைஸ்மென்ட் பிடித்து ஸோவனீர் போடலாமா?' என்பதே சிந்தையாகத் தவித்துக் கொண்டிருக்கும்படியும் ஆகும். நிறையப் பணம் சேர்ந்து, அதைக் கையாள வேண்டியிருக்கும்போது நாமே எப்படி மாறிப் போய்விடுவோமோ என்ற பயம் ஸதாவும் இருக்கணும். அதுவுமில்லாமல், ரொம்பவும் பணம் சேர்த்தால் கொடுத்திருப்பவர்களுக்கும் அது ஸரியாகப் பிரயோஜனமாகிறதா என்ற ஸந்தேஹம் எழும். இதோடு கூட, இஷ்டமில்லாதவனையும் நிர்ப்பந்தப்படுத்தி வாங்குவதும், இப்படி வாங்கி விட்டதால் அப்புறம் அவனிடம் பந்தப்பட்டு நிற்பதும் நம் பணியையே அசுத்தம் செய்து விடும். ஆனதால் எந்த நல்ல காரியமானாலும் 'அதி'யாக அதைக்கொண்டு போய்விடாமல், அவசியத்தோடு நிறுத்திக் கொண்டு, செட்டும் கட்டும் சிக்கனமுமாகவே அதற்கான வரவு செலவுகளை நிர்வஹிக்க வேண்டும்.

**- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.**



களையும், பட்டணங்களையும் கொளுத்தவும், சிற்பங்களையெல்லாம் உடைக்கவும், குடிகளை இம்சிக்கவும் அந்த மூர்க்க ராட்சதன் கட்டளையிட்டிருக்கிறானாம். ஐயோ! குமாரா! எப்படி உன்னிடம் சொல்வேன்? பல்லவ ராஜ்யத்தின் சிறந்த கலைச் செல்வம் பறிபோய் விட்டதோ என்றும் ஐயுறுகிறேன்.

''மாமல்லா! என்னை மன்னித்துவிடு! இதோ என்னுடைய தவறுகளுக்குப் பிராயச்சித்தம் செய்து கொள்ளப் புறப்படுகிறேன். மூர்க்க சளுக்க வீரர்களின் கொடுமைகளிலிருந்து நமது குடிகளைக் காப்பாற்றப் புறப்படுகிறேன். கோட்டையிலுள்ள சைனியங்களை அழைத்துக்கொண்டு கிளம்புகிறேன். சேனாபதி கலிப்பகையும் என்னுடன் வருகிறார்.

''குமாரா! காஞ்சி சுந்தரி பாதுகாப்பாரின்றி அனாதையாக இருக்கிறாள். நீயும் உன் தோழன் பரஞ்சோதியுந்தான் அவளைக் காப்பாற்ற வேண்டும். காஞ்சிக் கோட்டைக்கு நான் திரும்பி வருவேனா என்பது சந்தேகம். உன்னை உயிரோடு பார்ப்பேன் என்பதும் நிச்சயமில்லை. போர்க்களத்தில் எனக்கு வீர மரணம் கிடைத்தால், அதைக் காட்டிலும் நான் பெறக் கூடிய பேறு இனிமேல் வேறு ஒன்றும் இல்லை.''

''மகனே! நான் செய்த துரோகத்தை மன்னித்து, மறந்து விடு! என்னையும் அடியோடு மறந்து விடு! ஆனால் அறுநூறு ஆண்டுகளாக வாழையடி வாழையாய் வந்த பல்லவ வம்சத்துக்கு இனிமேல் உன்னைத் தவிர வேறு கதியில்லையென்பதை மட்டும் மறந்து விடாதே!''

**மா**மல்லர் மேற்படி ஓலையைப் படித்து முடிப்பதற்கு வெகு நேரத்துக்கு முன்னாலேயே தளபதி பரஞ்சோதி தமக்கு வந்த ஓலையைப் படித்து விட்டார். அது மாமல்லருக்கு வந்த ஓலையைப் போலன்றி மிகவும் சுருக்கமாயிருந்தது.

''அருமைப் பரஞ்சோதிக்கு!

''நீ என்னைப் பல தடவை 'நீங்கள் வாழ்க்கையில் தவறே செய்தது கிடையாதா?' என்று கேட்டதுண்டு. நானும் அகம்பாவத்துடன் 'கிடையாது' என்று சொல்லி வந்தேன். இப்போது என் வாழ்க்கையில் மகா பயங்கரமான தவறைச் செய்து விட்டேன். இராஜ தந்திரத்தினால் சத்துருவை நண்பனாகச் செய்து கொள்ளப் பார்த்தேன். நேர்மாறான பலன் கிடைத்தது. அந்தத் தவறுக்குப் பிராயச்சித்தம் செய்வதற்காக இதோ போர்க்களத்துக்குப் புறப்படுகிறேன்.

''இச்சமயம் என் பக்கத்தில் நீ



இல்லையே என்று வருத்தமாயிருக்கிறது. ஆனாலும் மாமல்லன் அருகில் இச்சமயம் நீ இருப்பதுதான் அதிக அவசியமானது.


''நான் பல தடவையும் உன்னிடம் சொல்லியிருப்பதை மறந்து விடாதே. பல்லவ வம்சம் சந்ததியின்றி நசித்துப் போகக் கூடாது. மாமல்லனை உன்னிடம் ஒப்படைக்கிறேன்.''

**மா**மல்லர் ஓலையை இரண்டு மூன்று தடவை படித்த பிறகு பரஞ்சோதியிடம் ஏதோ சொல்ல முயன்றார். ஆனால் வார்த்தைகள் வரவில்லை. எனவே ஓலையைச் சிநேகிதரின் கையில் கொடுத்தார்.

பரஞ்சோதி அதை விரைவிலேயே படித்து முடித்துவிட்டு, ''ஐயா! நான் குதிரைப் படையுடன் முன்னதாகப் போகிறேன். தாங்கள் இங்கேயே தங்கிப் பின்னால் வரும் காலாட் படையையும் அழைத்துக் கொண்டு வந்து சேருங்கள்!'' என்றார்.

''நல்ல காரியம் தளபதி! என் உடம்பு இங்கே இருக்கிறதே தவிர என் உயிர் ஏற்கெனவே என் தந்தைக்கருகில் போய் விட்டது. இனிமேல் வழியில் தங்குவது என்பது கிடையாது. காலாட்படை வருகிற படி வரட்டும். குதிரைப் படையுடன் நாம் முன்னதாகப் போக வேண்டியதுதான்'' என்றார் மாமல்லர்.

சற்று நேரத்துக்கெல்லாம் அந்தப் பிரதேசமானது நாலு கால் பாய்ச்சலில் சென்ற ஆயிரக்கணக்கான குதிரைகளின் காலடியினால் அதிர்ந்தது. கண்ணுக் கெட்டிய தூரம் ஒரே புழுதிப் படலமாயிற்று.



# முப்பதாம் அத்தியாயம்
# ''சிவகாமி எங்கே?''

ஆயனர் தமது பழைய சிற்ப வீட்டை அடைந்ததிலிருந்து நரக வேதனை அநுபவித்துக் கொண்டிருந்தார்.

மலையிலிருந்து விழுந்ததினால் முறிந்து போயிருந்த அவருடைய வலது கால் சொல்ல முடியாத வலியையும் வேதனையையும் அவருக்குத் தந்து கொண்டிருந்தது.

சிவகாமியை இழந்ததினால் அவருடைய உள்ளம் அளவில்லாத துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்தது.

**ம**ண்டபப்பட்டிலிருந்து ஆயனரும் சிவகாமியும் சக்கரவர்த்தி அனுப்பிய பல்லக்கில் அவசரமாகக் கிளம்பியபோது ஆயனரின் சகோதரியைப் பின்னால் சாவகாசமாக வண்டியில் வந்து சேரும்படி சொல்லியிருந்தார்கள். அதன்படியே அந்த அம்மாள் முக்கியமான வீட்டுப் பொருள்களுடன் ரதியையும் சுகரையும் வண்டியில் ஏற்றிக் கொண்டு பழைய அரண்ய வீட்டுக்கு வந்து சேர்ந்திருந்தாள். அந்த அம்மாள் அவ்விதம் முன்னாடியே வந்து சேர்ந்திருந்தபடியாலேயே ஆயனர் இன்னும் உயிரோடிருப்பது சாத்தியமாயிற்று.

அவருக்கு வேண்டிய சிகிச்சைகளையும் சிசுருஷைகளையும் அந்த அம்மாள் மிக்க பக்தி சிரத்தையோடு செய்து அவரை உயிர் பிழைக்கப் பண்ணியிருந்தாள்.

ஆனாலும் அவள் அடிக்கடி கேட்டு வந்த ஒரு கேள்வியானது புண்ணிலே கோலெடுத்துக் குத்துவதுபோல் அவருடைய இருதயத்தை நோகச் செய்து கொண்டிருந்தது.

அந்தக் கேள்வி, ''சிவகாமி எங்கே?'' என்பதுதான்.

சோகக் கடலில் ஆழ்த்தும் மேற்படி கேள்வியை நிறுத்துவதற்காக ஆயனர் ஏதேதோ மறுமொழி சொல்லிப் பார்த்தார். அவையொன்றும் சிவகாமியின் அத்தைக்குப் பிடிபடவே இல்லை. எனவே அவள் கேள்வி கேட்பதை நிறுத்தவில்லை.

இது போதாதென்று ரதியும் சுகரும் அடிக்கடி ஆயனரிடம் வந்து முகத்தைத் தூக்கிக் கொண்டு நின்று சப்தமற்ற குரலில் தங்களுடைய மௌனக் கேள்வியை அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆயனர் கடுமையான குரலில் அதட்டி அவர்களை அப்பால் போகும்படி செய்வார்.

சுகப்பிரம்மரிஷி இப்போதெல்லாம் அதிகமாகத் தம் குரலை வெளியில் காட்டுவதில்லை. சில சமயம் திடீரென்று நினைத்துக் கொண்டு பலமான கூக்குரல் போடுவார். அப்போது அவருடைய தொனி ''சிவகாமி எங்கே?'' என்று கேட்பதுபோலவே இருக்கும்.

**அ**ரண்ய வீட்டுச் சுற்றுப் பக்கமெல்லாம் ஏதோ பெரிய அல்லோலகல்லோலம் நடந்து கொண்டிருந்ததாகத் தோன்றியது.

திடீர் திடீரென்று காட்டிற்குள்ளும் அப்பாலும், சமீபத்திலும் தூரத்திலும் பலர் கூச்சலிட்டுக் கொண்டு ஓடும் சப்தம் கேட்கும்; போர் முழக்கங்கள் கேட்கும்; அழுகையும் புலம்பலும் சில சமயம் கேட்கும். இரவு நேரங்களில் சுற்றுமுற்றும் பார்த்தால் திரள் திரளாகப் புகையும் நெருப்புச் சுவாலையும் எழுவது தெரியும்.

அந்த வனத்தில் வசித்த பட்சிகளிடையே என்றும் காணாத மௌனம் சில சமயம் நிலவியது. திடீரென்று பல்லாயிரம் பட்சிகள் ஏககாலத்தில் கூச்சலிடும் சப்தம் கேட்டது.

ஒரு நாள் அந்த அரண்யத்துக்கு வெகு சமீபத்தில் எங்கேயோ ஒரு பெருஞ் சண்டை நடக்கிறதென்பதற்கு அறிகுறிகள் தெரிந்தன.

போர் முரசங்களின் பேரொலியும், போர் வீரர்களின் ஜய கோஷமும், குதிரைகளும் மனிதர்களும் நடமாடும் சத்தமும், ஆயுதங்கள் மோதும் ஓசையும் இடைவிடாமல் கேட்டுக் கொண்டிருந்தன.

சாயங்காலம் திடீரென்று ஐந்தாறு வீரர்கள் மேலெல்லாம் இரத்தக் காயங்களுடன் ''தண்ணீர்! தண்ணீர்!'' என்று கூவிக் கொண்டு ஆயனர் வீட்டுக்குள் நுழைந்தார்கள். அவர்கள் பல்லவ வீரர்கள்தான் என்று தெரிந்து கொண்டதும், ஆயனர் தாம் படுத்திருந்த இடத்திலிருந்தே அவர்களை வரவேற்றுத் தம் அருகில் உட்காரச் சொல்லிச் சகோதரியைக் கொண்டு அவர்களுக்குத் தண்ணீரும் கொடுக்கச் செய்தார். பிறகு, அவர்கள் எங்கே எப்படிக் காயமடைந்தனர் என்பது பற்றி விசாரித்தார்.

''இதென்ன உங்களுக்கு ஒன்றுமே தெரியாதா?'' என்று அவ்வீரர்கள் வியப்புடன் கேட்டனர்.

ஆயனர் அவர்களுக்குத் தமது முறிந்த காலைச் சுட்டிக்காட்டினார்.

வந்த வீரர்கள் அந்தக் காலையும் சுற்று முற்றும் உடைந்து கிடந்த சிலைகளையும் பார்த்துவிட்டு, ''ஐயோ! சளுக்க ராட்சதர்கள் இந்த வீட்டுக்குள்ளும் புகுந்து இப்படியெல்லாம் அக்கிரமங்கள் செய்து விட்டார்களா?'' என்று வருத்தப்பட்டார்கள்.

பிறகு அந்த வீரர்களில் ஒருவன், புலிகேசி காஞ்சியைவிட்டுப் போனதிலிருந்து அன்று மணிமங்கலத்துக்கருகில் நடந்த பயங்கரமான சண்டை வரையில் எல்லாம் விவரமாகச் சொன்னான். அவன் கூறியதின் சாராம்சமாவது:

புலிகேசி கோட்டையிலிருந்து வெளியேறியதும் தன்னுடைய சைனியத்தைச் சிறு சிறு படைகளாகப் பிரித்துப் பல்லவ நாட்டுக் கிராமங்களைக் கொளுத்தவும், ஜனங்களை இம்சிக்கவும், சிற்பங்களை நாசமாக்கவும், சிற்பிகளை அங்கஹீனம் செய்யவும் கட்டளையிட்டு அனுப்பினார். இதையறிந்த சக்கரவர்த்தி கோட்டைக்குள்ளிருந்த சொற்பப் படைகளுடன் வெளிக் கிளம்பினார். அன்று காலையில் மணிமங்கலம் என்னும் கிராமத்துக்கருகில் புலிகேசியின் படை வீரரும் பல்லவ வீரர்களும் கைகலந்தார்கள். புலிகேசியின் வீரர்கள் எண்ணிக்கையிலும் ஆயுத பலத்திலும் அதிகம் ஆன போதிலும் மகேந்திர சக்கரவர்த்தியே நேரில் தலைமை வகித்தபடியால் காஞ்சி வீரர்கள் பிரமாதமான வீரப் போர் நடத்தினார்கள். எதிர்ப்பக்கத்தில் வாதாபிச் சக்கரவர்த்தி புலிகேசியே தலைமை வகித்து நடத்தினார். இரு சக்கரவர்த்திகளும் போர்க்களத்தின் மத்தியில் நேருக்கு நேர் சந்தித்து வீரவாதம் செய்த பிறகு ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டார்கள்.

பல்லவ சைனியம் ஏறக்குறையத் தோல்வியடைந்திருந்த நிலைமையில், சற்றுத் தூரத்தில் பெரிய குதிரைப் படை ஒன்று வரும்சத்தம் கேட்டது. ரிஷபக் கொடியைப் பார்த்ததும், ''இதோ மாமல்லர் வந்துவிட்டார்!'' என்ற கோஷம் கிளம்பியது. சற்று நேரத்துக்கெல்லாம் மாமல்லரின் குதிரை வீரர்கள் சளுக்கர் படை மேல் இடியைப்போல் விழுந்து தாக்கினார்கள்.

சளுக்க வீரர்கள் ஓட ஆரம்பித்தார்கள். அரக்கன் புலிகேசியும் ஓடிப்போனான். ஆனால் போகும்போது தன் கையிலிருந்த சிறிய கத்தி ஒன்றை மகேந்திரர் மீது குறிபார்த்து எறிந்து விட்டான். மகேந்திரர் பிரக்ஞை இழந்து தரையில் விழுந்தார்.

வாதாபி வீரர்கள் போர்க்களத்தை விட்டு ஓடிய பிறகு மாமல்லரும் பரஞ்சோதியும் மகேந்திர பல்லவர் விழுந்திருந்த இடத்துக்கு வந்தார்கள். அவருக்குத் தக்க சிகிச்சை செய்து காஞ்சிக்குப் பத்திரமாய் எடுத்துப் போகக் கட்டளையிட்டு விட்டு, புறமுதுகிட்டு ஓடிய வாதாபி வீரர்களைப் பின்தொடர்ந்து சென்றார்கள்.

மேற்படி விவரங்களைக் கூறிய பின்னர் காயமடைந்த பல்லவ வீரர்கள் காஞ்சியை நோக்கிச் சென்றார்கள்.

மகேந்திர பல்லவருக்கு மரண காயம் என்பதைக் கேட்டதில் ஆயனர் அளவற்ற துயரமடைந்தார். ஆனாலும் மாமல்லரும் பரஞ்சோதியும் சளுக்க வீரர்களைத் தொடர்ந்து போயிருக்கிறார்கள் என்னும் செய்தி அவருக்குச் சிறிது ஆறுதலையளித்தது. அவர்கள் சிவகாமியைச் சிறை மீட்டுக் கொண்டு வந்துவிடுவார்கள் என்ற நம்பிக்கை அவருடைய உள்ளத்தில் உதயமாகியிருந்தது.

மணிமங்கலம் சண்டை நடந்து ஒரு வாரம் ஆகிவிட்டது. ஆயனர் தினந்தோறும் ஏதேனும் நல்ல செய்தி வராதா என்று ஆவலுடன் காத்திருந்தார். வாசலில் ஏதேனும் சத்தம் கேட்டால் அவர் திடுக்கிடுவார். யாரோ செய்தியுடன் வருகிறார்கள் என்று பரபரப்புடன் எழுந்து உட்காருவார்.

இம்மாதிரி எத்தனையோ தடவை ஏமாற்றம் அடைந்த பிறகு கடைசியில் உண்மையாகவே இரண்டு குதிரைகள் அவர் வீட்டை நெருங்கி வரும் சத்தம் கேட்டது. வந்த குதிரைகள் வீட்டு வாசலில் நின்றன என்பது தெரிந்தது.

வாசற்படி வழியாக நுழைந்துவரப் போகிறவர்கள் யார் என்று கொட்டாத கண்களுடனும் துடிதுடித்த நெஞ்சுடனும் ஆயனர் பார்த்துக் கொண்டிருந்தார். அவருடைய ஆசை வீண் போகவில்லை. ஆம்! மாமல்லரும், பரஞ்சோதியும்தான் உள்ளே வந்தார்கள்.

அவர்களைப் பார்த்ததும் முதலிலே ஆயனருடைய முகத்தில் மகிழ்ச்சிக் களை படர்ந்தது. ஆனால் அவர்கள் நெருங்கி வரவர மகிழ்ச்சி குன்றியது.

மாமல்லரின் முகத்தில் தோன்றிய கேள்விக் குறியானது ஆயனருடைய உள்ளத்தில் சகிக்கமுடியாத வேதனையை உண்டாக்கிற்று.

மாமல்லர் வாய் திறந்து கேட்பதற்கு முன்னால் அவர் கேட்கப் போகும் கேள்வியைத் தாமே கேட்டுவிடத்தீர்மானித்தார் ஆயனர்.

அந்தச் சிற்ப மண்டபமும், வெளியிலிருந்த அரண்யமும் பிரதித்வனி செய்யும் படியான சோகம் நிறைந்த குரலில், ''பிரபு! என் சிவகாமி எங்கே?'' என்று அலறினார்.

(தொடரும்)

# யானை மீது வந்த அரசகுமாரன்



''மிஸ் ராணி! இவர் மிஸ்டர் நார்மன் கிங். அமெரிக்காவிலேருந்து வந்திருக்கார். இவருக்குத் தேவையானதைக் கவனிக்கறது உன் பொறுப்பு.'' - அறிமுகப்படுத்திவிட்டு டிராவல் ஏஜன்ஸியின் அதிபர் தமது அறைக்குச் சென்று விட்டார்.

சுழலும் எக்ஸிக்யூடிவ் நாற்காலியில் அமர்ந்திருந்த ராணி எழுந்து கிங்கை வரவேற்றாள்.

''சொல்லுங்கள், நான் என்ன செய்ய முடியும்?'' உதடு பிரியாமல் கன்னங்குழிய ஒரு முறுவல்.

''இந்தியாவைப் பற்றி ஒரு புத்தகம் எழுத வந்திருக்கிறேன். அது சம்பந்தமாக உங்கள் ஏஜன்ஸி உதவி தேவை...''

அமெரிக்க வெண் சிவப்பு; கண்ணைப் பறிக்கும் கலரில் ஒரு ஜிப்பா. பிரேம் இல்லாத சுமாரான தடிமனில் ஒரு கண்ணாடி. முகத்தில் அறிவுக் களையுடன் அழகும் இணைந்த கலவை இருந்தது. ராணியின் மனம் எடை போட்டது.

''எதில் பிரயாணம் செய்ய விரும்புகிறீர்கள்? புஷ்பக விமானம் வேண்டுமா? அல்லது 'Palace on wheels' என அழைக்கப்படும் ஆடம்பர ரயில் ஏற்பாடு செய்யவா? ஏர்கண்டிஷன் கார் தேவைப் படுமா?'' ராணி ஹோட்டல் சர்வர் போல் அடுக்கினாள்.

''அதெல்லாம் வேண்டாம். புத்தகம் எழுதுவதால் ஜனங்களைச் சந்திக்க ஏதுவாக...''

''தமிழ்நாட்டில் பிலோ இருதயநாத் என்று ஒருவர். சைக்கிளில் சென்று பூர்வ குடிகளை ஆய்வு செய்துள்ளார்...''

''சென்ற முறை இந்தியா வந்து ஸ்கூட்டரில் ஸவுத் இந்தியா முழுவதும் சுற்றினேன். அப்போ எழுதின புத்தகத்துக்குப் பிரமாத விமர்சனம்...''

''வெளிநாட்டவன் எழுதினான்னா வரிஞ்சு கட்டிக்கிட்டு ஆஹா ஓஹோன்னு எழுதுவாங்க விவஸ்தை கெட்டவங்க'' - ராணி முணுமுணுத்துத் தன் வயிற்றெரிச்சலைத் தீர்த்துக் கொண்டாள்.

''ஒன்று செய்யுங்கள். இந்த முறை குதிரை மீது ஆரோகணித்துச் செல்லுங்களேன். எங்கள் தமிழக எழுத்தாளர் பாலகுமாரனுக்கு அசுவம் என்றால் தனி அபிமானம்...''

''ரேஸ் குதிரையைச் சொல்கிறீர்களா?''

''ரேஸ் குதிரையுமில்ல, ரேக்ளா குதிரையுமில்ல; நாளை ஞாயிறு காலையில் டீ.வி. பாருங்கள். சாணக்கியாவில் குதிரை ரதங்கள் வருகின்றன. அது மாதிரியும் தயார் செய்ய முடியும். புதுமையாக இருக்கும். சரித்திர எழுத்தாளர் யாராவது, ஹுவான் சுவாங் பற்றி எழுதின மாதிரி, புரவி வீரன் நார்மன் தேவன் பற்றிப் பிற்காலத்தில் எழுதலாம்.''

''உங்கள் ஹாஸ்யத்தை ரசிக்கிறேன்... நான் தேடுவது ஓர் உயரமான மிருகம்...''

''ஒட்டகம் ஏறி ராஜஸ்தானம் பார்க்க விரும்புகிறீர்களா? அப்புறம் முதுகெலும்பு முறிந்து விடும்...!''

''அம்மணி, எனக்குத் தேவை எலிபெண்ட்...''

''யானையா? நிசந்தானா? குடை நிழலில் இருந்து தாங்கள் குஞ்சரம் ஊர்ந்து, நடை மெலிந்து நண்ணும் இந்தியப் பிரஜைகளைச் சந்திக்க விரும்புகிறீர்களா?''

''அதுவே உண்மை!''

''ஓ லார்டு கணேசா! வள்ளி மணவாளனுக்கு உதவி செய்தது போல் எனக்கும் கருணை புரி. எந்தப் பிரயாண ஏஜென்ஸிக்கும் இது ஒரு சாலன்ஜிங் ஜாப்... காஸ்ட்லி விஷயம். யானை சவாரி தொந்தரவானதுங் கூட...!''

''பரவாயில்லை... ஒன்று விலைக்கு வாங்கி விடுவோம். மாவுத்தன் சம்பளம் தரலாம். இந்தியா பாரம்பரிய மிக்க நாடு. அதில் யானை மீது வலம் வந்து நூல் எழுதுவது பொருத்தமாக இருக்கும்...!

''எனக்கு இரண்டு நாள் அவகாசம் தாருங்கள். நான் ஒரு ஆராய்ச்சியே செய்ய வேண்டும், உங்களைத் திருப்திப்படுத்த...''

''விவரம் தெரிந்தவுடன் எனக்கு ஹோட்டலுக்கு போன் செய்யுங்கள்.'' நார்மன் எழுந்தார்.

''யானை கிடைக்கும் வரை என்ன செய்வீர்கள்?''

''ஆ! எனக்கு உங்கள் நாட்டு சங்கீதம் ரொம்பப் பிடிக்கும். கச்சேரிகளுக்குப் போவேன்.''

''ஆஹா! இந்தியாவில் வேறு என்னென்ன பிடித்திருக்கிறது?''



சுபஸ்ரீ

''இட்லி, தோசை,... இந்தியக் கலாசாரம் ரொம்பப் பிடிக்கும் நீங்கள் அணிந்திருக்கும் தர்மாவரம் புடைவை கூட ரொம்ப அழகு...''

ஜிப்பா மறைந்து விட்டது. ஏதோ ஒன்று தங்கி விட்டது ராணியின் இதயத்தில்.

மூன்றாம் நாள் ஆலோசனைக் கூட்டம். எம்.டி.யும் வந்திருந்தார். அதிகாரிகள் தலைக்குத் தலை 'யானைச் செய்தி' கூறினார்கள்.

''நமது கொச்சின் கிளை மானேஜர் எழுதி இருக்கிறார். அங்கு காடுகளில் மரம் இழுக்கும் யானைகள் விலைக்கு வாங்கலாம். ஆனால் டில்லிக்கு எப்படி அனுப்புவது? முன்பு ஒலிம்பிக் விளையாட்டின் போது கேரளா யானைகளை கூட்ஸ் ரயிலில் அனுப்பி அவை நின்று கொண்டே பிரயாணம் செய்த செய்தி கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாயிற்று.''

''கேரளா வேண்டாம்'' - எம். டி. கூறினார்.

''ஸமஷ்டிபூர் யானைச் சந்தை இப்போதைக்கு நடைபெறாதாம்.''

''தேவர் பிலிம்ஸ்காரர்கள் யானையைக் கதாநாயகனாகக் கொண்டு ஹாத்தி



''இன்னிக்கு டிபன் சப்பாத்தி!''
''ரெடியா இருக்கா?''
''ஓ! மாவு, உப்பு, சப்பாத்திக் கல், குழவி எல்லாம் உள்ளே தயாரா இருக்கே!''
- பம்மல் கிருஷ்ணன்



மேரா மோத்தி என்று ஒரு படம் பிடிப்பதால் தற்பொழுது யானை தர இயலாதாம்...''

''ஏதாவது கோயில் யானை...?''

''இது உத்ஸவ காலம். தவிர அது திருமஞ்சன யானை. நார்மன் பயணத்திற்குத் தோதுப்படாது...''

''வாரணாசியில் சில சாதுக்கள் ஒரு யானையை வைத்திருக்கிறார்கள். விருப்பமானால் அதை விலை பேசி வாங்கி விடலாம் எனக் கிளை மானேஜர் டெலக்ஸ் தந்திருக்கிறார்.''

கங்கைக் கரை மீதுள்ள காசி க்ஷேத்ர யானைக்கு மகத்துவம் அதிகம். அதையே முடிவு செய்தார்கள்.

இந்த ஒரு வாரத்திற்குள் நார்மன் பற்றி ராணி நிறைய அறிந்து கொண்டாள். ஹார்வார்டு பல்கலைக் கழகத்தில் கீழ்த்திசைத் தத்துவம் படித்திருக்கிறான். பிட்ஸ்பர்க் பாலாஜி கோயிலுக்கு அடிக்கடிச் செல்ல அவனுக்குப் பிடிக்கும். அங்கு தலைமை அர்ச்சகர் மணவாள அய்யங்காரிடம் 'வாரண மாயிரம்' உரை கேட்டிருக்கிறான். 'அமெரிக்க - இந்திய கலப்புத் திருமணம் செய்து வைத்தால் அவர் கோதையின் வாரணமாயிரம் சொல்லித்தான் மணச் சடங்கு புரிகிறார்...'

''உங்களுக்கு அதில் என்ன சிரத்தை?''

''நானும் ஒரு காளை. கனாக் காண்பவன்தான்.''

நார்மன் கண்கள் அதிரப் புகுதலைச் சமாளிக்க ராணி இமை தாழ்த்தினாள்.

''சென்ற ஜன்மத்து வாசனை போலும். இந்திய மண், மக்கள், இசை, கலாசாரம் என்றால் கனாக் காண்பேன்'' என்றான் கிங்.

எதிரே கண்ணகத்தே நின்று களிதரும் கரும்பாகக் காட்சி அளித்தான், நார்மன், ராணிக்கு.

வாரணாசி யானை விலைக்கு வாங்கப்பட்டது. ஒரு கால்நடை வைத்தியரிடம் அழைத்துச் சென்று அதனைச் சோதித்து, தடுப்பு ஊசிகள் போட்டனர். அரை வயிறு உண்ட துறவியின் தும்பிக்கையானுக்குச் சத்துள்ள விடமின் உணவு வழங்கப்பட்டது. மாவுத்தனும் அமர்த்தப்பட்டான்.

''யானை ரெடி...'' ராணி நார்மனுக்கு போன் செய்தாள்!

''ஆரம்ப விழாவிற்கு நீங்கள் வாருங்கள். ஹாத்தி மேரா ஸாத்தி. ராணி மேரி தோஸ்தி...''

''என்னால் வர முடியாது நார்மன். ஏதாவது மினிஸ்டர் ஏற்பாடு செய்கிறேன். கொடி காட்டி யானைப் பயணத்தை நொடியில் துவக்கி வைப்பார்.''

''வேண்டாம். அவர் யானை சவாரி கேட்பார்...''

''யானைப் பயணம் நன்கு அமையட்டும்... யானைக்கும் அடி சறுக்கும் ஜாக்கிரதை...''

தூங்கும் களிறு துயர் அடையாது. ஆனால் தூங்காத ராணியின் மனசு எதற்கோ ஏங்கிற்று.

நார்மனிடமிருந்து கடிதம் வந்தது.

'இங்கு காஞ்சி கோயிலிலிருந்து மேளதாளமின்றிப் புறப்பட்டேன். வழியனுப்ப நிறையக் கூட்டம். இந்த ராஜாவிற்கு ராணி அருகில் இல்லையே எனக் குறைதான்.'


ராணி கடைசி வரிகளைப் பத்து தடவை படித்து விட்டாள். இன்னிசை வீணையர், யாழினர் சுற்றி நின்று இசைத்தது போல இன்பப் பிரவாகம்.

அடுத்து வந்த கடிதம் :

''உங்கள் ஏஜன்ஸி தலையில் யானை மிதிக்க. நல்ல யானை பிடித்தீர்கள்! சாதுக்கள் ஊர் ஊராகச் சென்று யாசகம் செய்ய அந்த யானையைப் பயன்படுத்தினார்களாம். பஜாருக்குச் சென்றால் வழக்கப்படி அது கடை கடையாகத் தும்பிக்கையை நீட்டி...! ஜீஸஸ், இப்படி ஒரு



நண்பர் : ''உங்க பெயர் கின்னஸ் புத்தகத்தில் வர்றாப்பல சாதனை பண்ணப் போறதா சொல்றீங்களே... என்னங்க அது?''
வித்வான் : ''இரண்டாயிரம் நாற்காலிக்கு முன்னால் தொடர்ந்து பத்து மணி நேரம் கச்சேரி பண்ணப் போறேன்!''
- ஆலத்தம்பாடி ராஜகோபால்



கஜேந்திரனைச் சில்லறைக்குப் பழக்கி வைத்திருக்கிறார்கள்! மாவுத்தன் இப் பழக்கத்தைக் கட்டுப்படுத்தப் பார்க்கிறான். பிரயாணம் சுகம். ஆனால் நல்ல 'கம்பெனி' இல்லை! ஹாத்தியுடன் மோத்தியும் (முத்து) சேர்ந்தால்...''

கண்ணிலே அமுதமாகி நின்றான், நார்மன்.

**நா**ர்மனின் யானை உலா முடிந்து தில்லி திரும்பியாகி விட்டது. புத்தகத்திற்கு நிறைய விஷயங்கள் கிடைத்தன. கண்டன, கேட்டன என்று பாரதத்தின் பல்வேறு மனிதர்கள், காட்சிகள். சிற்பங்கள், மூட நம்பிக்கைகள், நதிகள், ஏழை எளியவர், மடாதிபதிகள்... அயோத்தியா பக்கம் மட்டும் இப்போது போக வேண்டாம் என்ற ராணியின் எச்சரிக்கையில் உள்ள கவலைத்வனியை உணர்ந்து நார்மன் கற்பனையில் ஆழ்ந்தான். தான் எழுதிய குறிப்புகளை ராணியுடன் டிஸ்கஸ் செய்தான். அவள் சில நிபுணர்களிடம் அழைத்துச் சென்றாள்.

''இந்த நூல் யாருக்குச் சமர்ப்பணம் தெரியுமா?''

''என்ன பிரமாதம்? களிறுக்குத்தான்.''

''எனது உள்ளத்து அம்பாரியில் இருக்கும் கன்னி ராணிக்கு...''

''நூலை வெளியிடுமுன் ஒரு நூலை முடிச்சிட விரும்புகிறேன்'' என்று நார்மன் கூறிய போது ராணி 'கைப்பற்ற கனாக் கண்டேன், தோழி' என்ற ஆண்டாள் நிலை யிலிருந்தாள்.

இருவரும் சென்னையை அடைந்து ராணியின் பெற்றோர் சம்மதம் பெற விரும்பினர்.

**ரா**ணியின் அப்பாவும் அம்மாவும் முதலில் விழித்தார்கள். முகம் சுளித்தார்கள். யானை பலம் பாட்டியால் கிடைத்தது.

''கண்ணே, அப்பவே தாத்தா உன் ஜாதகம் பார்த்து ஆனை மேல் அம்பாரியில் அமர்ந்து ஒரு அரசகுமாரன் வந்து இந்த ராணியைக் கல்யாணம் பண்ணிக் கொள்வான் என்று சொன்னார். உனக்கு ராஜயோக ஜாதகம்... பலிக்கப் போச்சு...'' என்றாள்.

''அப்படியா! இதை முன்னமே சொல்லக் கூடாதோ'' என்று அப்பா, அம்மா வியந்தார்கள்.

''பாட்டி அவர் பெயரும் கிங்... ராஜா தான்.''

''ராஜாவுக்கு ஏத்த ராணி.''

பாட்டியை ராணி கட்டிக் கொண்டாள்.

''ஏண்டி, ஜானவாசத்துக்கு ஊர்வலம் காரிலா? ஆனை மீதா...?'' - பாட்டி கேட்க,

ஆனை வெடி போல ஒரு சிரிப்புச் சப்தம்!

முதலில் அதை நம்ப முடியவில்லை. உஜாகர் சிங்குக்கும் ப்ரமிளாவுக்கும் என்ன சம்பந்தம் என்பது புரியவில்லை. மெல்ல அணுகிய போது ப்ரமிளாதான். குரல் இப்போது தெளிவாகக் கேட்டது. சிங்குடன் சைட்டருகே அவர்கள் நின்று கொண்டு பேசிக் கொண்டிருந்தது தெரிந்தது.

''ப்ரமிளா'' என்று அழைத்தான். அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

''அவன் கூட என்ன பேச்சு? க்யா பாய் உஜாகர் சிங், இதர் க்யா கர் ரஹா ஹை?''

உஜாகர் சிங் ''குச் நஹி ஸாப்'' என்று சொல்லி விட்டு லாரியில் ஏறிக் கொண்டு ப்ரமிளாவைப் பார்த்து ''அப்புறம் சந்திக்கலாம்'' என்பது போல் சைகை செய்தான்.

ப்ரமிளாவின் பதில் நடத்தை விநோதமாக இருந்தது. காற்றில் சைபர் வடிவில் எழுதி விட்டு அவனுக்கு டாட்டா காட்டினாள்.

''லாரி டிரைவர் கூட எல்லாம் என்ன ஸ்னேகிதம் உனக்கு?'' என்றான்.

''உஜாகர்சிங் நல்லவன் மனோ.''



''லாரில அவன் பக்கத்தில உக்காந்துண்டு வரது தப்பு ப்ரமிளா. அதுவும் இப்ப கிராமத்தில உன்னைத் தெய்வம் மாதிரி மதிக்கிறா.''

''லிப்ட் கொடுக்கறேன்னான்.''

''சரிதான். உங்கப்பா நாளைக்கு வரார். அவர் வந்தா கூட போறதானே?''

''ஆமாம்.''

''இனிமே சாமி பூதம் எதும் வராதில்லை? ஆவேசம், குறி, முனீஸ்வரன்?''

''எப்படிச் சொல்ல முடியும்? முனீஸ்வரன் என்ன தீர்மானிக்கிறாரோ?''

''ஏன் இப்படி ஹிஸ்டரிக்கலா நடந்துண்டே என்ன ஆச்சு உனக்கு?''

''ஞாபகமில்லை மனோஜ்.''

''உங்கப்பா கேட்டா நம்ப மாட்டார். பம்பாய்ல பிறந்து வளர்ந்து, தமிழ் ஒரு அட்சரம் படிக்காம வீட்டில மட்டும் பேசின பொண்ணு, எப்படி அத்தனை பள



பளன்னு தமிழ் பாட்டெல்லாம் படிக்க முடிஞ்சுது? அந்த ஆச்சரியம்தான் தீரலை ப்ரமிளா!''

ப்ரமிளா ஆர்வத்துடன் ''அப்படியெல்லாம் படிச்சனா என்ன?''

''ஆமாம். அப்புறம் நேரா மண்டபத்தில சிலை இருக்கிறதைச் சொன்னதும் நீதான். ப்ரமிளா! எப்டி அதெல்லாம் உனக்குத் தெரிஞ்சுது? சொல்லேன் ப்ளீஸ்''

''எப்படின்னு நீ கண்டுபிடிச்சு சொல்லேன்... என்னைப் பொறுத்தவரையில என்ன நடந்ததுனே ஞாபகம் இல்லை. எல்லாம் 'வேகா' இருக்குது.''

''ப்ரமிளா, ப்ரமிளா உன்னை என்னன்னு சொல்வேன்?''

''என்னன்னு?''

''ஏமாத்துக்காரியா, அறியாதவளா, பாசாங்குக்காரியா, தெய்வமா? நீ என்ன?''

''நான் உன் மனைவி'' என்று அவன் கழுத்தைக் கட்டி முத்தம் கொடுத்தாள்.

கற்பூர வாசனை அவள் மூச்சில் தெரிந்தது. விலகிக் கொண்டான். பயமா இருக்கும்மா. எங்கயாவது ரத்தத்தை கித்தத்தை உறிஞ்சுடப் போறே!''

சைட்டுக்குள் சென்று இன்ஸ்ட

லேஷன் வேலைகளில் ஈடுபட்ட போது ப்ரமிளா அமைதியாகக் கள்ளிப்பெட்டி மேல் உட்கார்ந்து புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள். கொஞ்ச நாள் முன் இவள் செய்த அட்டகாசத்துக்குச் சற்றும் பொருத்தமில்லாமல் மிக மிக அறியாப் பேதைப் பெண்ணாகத் தோன்றினாள். அவ்வப்போது சிரித்துக் கொண்டாள். புத்தகத்தில் ஏதோ ஹாஸ்யம் போலும்.

முனீஸ்வரன் மரம் முழுக்க வெட்டப்பட்டு இப்போது தரை சமனமாக இருந்தது. ஸிஸ்டம் வேல்யு, நாய்ஸ் ஃஸ்பிகர் எல்லாம் அளவிட ஆயத்தமானான். உஜாகர் சிங்கும் கர்த்தார்சிங்கும் ஒருமுறை வந்து அவர்கள் வேலை முடிந்து விட்டதால் காலையில்

# திரைமம்



இரேனை எடுத்துக் கொண்டு போக அனுமதி கேட்டார்கள்.

டிஸியும் எஸ்பியும் புதிய கோயிலில் தாங்க முடியாத கூட்டம் வந்து விட்டதைக் கட்டுப்படுத்தப் போயிருந்தார்கள். அப்போது நடேச பண்டிதர் அவனை வந்து பார்த்தார்.

''என்னங்க உங்க வேலையெல்லாம் நடக்குதுங்களா?''

''நடக்குது பண்டிதரே.''

''இனிமே மரத்தின் தொந்தரவு இல்லைதானே?''

''இல்லைங்க.''

''எம்பெருதான் ரிப்பேராயிருச்சுங்க. அந்தப் பெண்ணால! அப்புறம் எங்க வீட்டு கரி மண்டி செட்டில கொண்டு போட்டான் பாருங்க அந்த பாடியை, அதனால!''

''ஆமாங்க!''

''அந்தாளு உங்ககிட்ட வேலை பார்த்தானே வாச்கமேன், அவன்தான்னு தீர்மானமாக் கண்டுபிடிச்சுட்டாங்க.''

''அமாங்க.''

''எல்லாம் இந்த இன்ஸ்பெக்டர் ஷண்முகம் செய்த மோசடிங்க!''

''என்னது?''

## சுஜாதா

ப்ரமிளா இருப்பதைப் பார்த்துத் ''தாயே, அய்யா கூட கொஞ்சம் தனியாப் பேசலாமுங்களா?''

''இருக்கட்டும் பரவால்லை'' என்றான்.

பூசாரி இங்குமங்கும் பார்த்து, ''ஷண்முகம் இருக்காரு பாருங்க. அவர்தான் செல்வியைக் கொன்னதுங்க!''

''எப்படிச் சொல்றீங்க?''

''இந்தாளு பாடி கிடைச்சப்புறம்தான் ரெண்டையும் முடிச்சுப் போட முடிஞ்சதுங்க. நடேச பண்டிதர் வீட்டில தோண்டவும்னு கடிதம் வந்திச்சுப் பாருங்க.''

''ஆமாம்.''

''அது யாரு எழுதினதுன்னு தெரிய லைங்க. ஆனா யாரோ எங்க வீட்ல இந்த பாடியைக் கொண்டு வர்றதைப் பாத்திருக்க ணும். அவன்தான் கடுதாசி எழுதியிருக்க ணும். போலீஸுக்குப் பயந்து அனாமத்தா கடுதாசி எழுதியிருக்கணும்.''

''இருக்கலாம். ஆனா எப்படி சண் முகத்தையும் அதில...''

''சண்முகம் பூசாரி எல்லாரும் ஒரே குட்டை மட்டைங்க.

''பூசாரிக்கு முனீஸ்வரன் மரத்தில நல்ல வருமானம். அதனாலத்தான் மரத்தை வெட் டக் கூடாதுன்னு பொரளி பண்ணியிருக் காங்க. மரத்தைச் சுற்றி ரெண்டு 'பேரும் சேர்ந்து ஒரு வியாபாரம் பண்ணிக்கிட்டு இருந்தாங்க.''

''யாரு?''

''ஷண்முகமும், பூசாரியும். ராத்திரி எட்டு மணியானா கஞ்சா பொட்டலம் விப்பானுங்க. இந்தப் பக்கத்தில காட்டில என்ன என்னவோ நடக்குதுங்க. யார் யாரோ வந்து போறாங்க. சந்தனம் கடத்த றாங்க. போதை சமாசாரம் எல்லாம் நடக் குது. எல்லாத்துக்கும் சண்முகம் உடந் தையா இருந்திருக்கணும். செல்வி இரண்டு முறை எங்கிட்டே சொல்லியிருக்கு. இன்ஸ் பெக்டரும் பூசாரியும் ரொம்ப தொந்தரவு பண்றாங்கன்னு. அன்னிக்கு என்ன ஆச்சு சொல்லட்டுங்களா?''

''என்னிக்கு?''

''அதாங்க சினிமா போன அன்னைக்கு. செல்வியை ஒங்க நண்பர் மராட்டிக்காரரு கூட்டிக்கிட்டுப் போயிருக்காரு. அவருக்கும் அவமேல ஒரு கண்ணாயிருக்கணும். ஆனா பாவம் அவரு அந்தப் பெண்ணைக் கொல்லலைங்க...''

''பின்ன யாருங்க?''

''பூசாரி அந்தப் பக்கம் போயிருக்கான் போலருக்குது. சண்முகமும் போயிருக் காங்க. போனதை நம்ம டீக்கடைக்காரன் பார்த்திருக்கான்... இன்ஸ்பெக்டருக்குப் பயந்துக்கிட்டுச் சொல்லலைங்க. ஆனா இப்பத்தான் கொஞ்சம் கொஞ்சமா அரசல் புரசலா கிராமத்தில வெளிய வருது...''

''இன்ஸ்பெக்டரும் பூசாரியும் செல்வி யைத் தொடர்ந்து போயிருக்காங்க. அந்தப் பெண்ணு சைட்டுக்குப் போயி, உங்க ஆளு கூட இருந்திருக்கு. வெளிய வரப்ப, இவங்க ரெண்டு பேரும் மறிச்சிருக்காங்க. என்ன ஆச்சோ தெரியலை. பலாத்காரம் பண்றப் பவோ எசகு பிசகா ஏதோ ஆயிருக்குது. அந்தப் பொண்ணு போயிட்டா. தற் கொலைன்னு நிரூபிக்கறதுக்குக் - காட்டற துக்கு - அவளை மரத்தில தொங்கவிட்டிருக் காங்க ரெண்டு பேரும்.

''அதை உங்க வாட்ச்மேன் பாத்திருக் கான். அதனால வாட்ச்மேனையும் தீர்த் திருக்காங்க. பண்டிதர் வீட்ல கொண்டு போட்டுட்டாங்க.''

''உங்களுக்கு இதெல்லாம் எப்படித் தெரியும்?''

''சொன்னேனே...

''எல்லாத்தையும் டீக்கடைக்காரன் பாத்திருக்காங்க. பயந்துட்டுப் பேசாம யார்ட்டயும் சொல்லாம இருந்திருக்கான். ஒங்க ப்ரண்டுதான் பாவம், பயந்து போய் தலைமறைவாயிட்டாருங்க. அவரு எதும் செய்யலை. எல்லாம் அந்த பாழும் பொம் பளை செல்வியாலதான். சின்ன வயசி லிருந்தே நடத்தை சரியில்லாம எத்தனை



## அன்றே கவிதை எழுதினார்

❑ பிறர் துன்பப்படும் போது, ''நமக்கு என்ன வந்தது?'' என்று ஒதுங்கிப் போகும் சுபாவத்தைப் பல ரிடம் காண்கிறோம். இது பற்றி 50 ஆண்டுகளுக்கு முன்பே ஜெர்மனி யில் நாஜிகளால் சிறையிலடைக்கப் பட்டுச் சித்திரவதை செய்யப்பட்ட நீமோவலர் என்பவர் எழுதிய கவிதை யின் கருத்து இது :

''அவர்கள் யூதர்களைக் கொன் றார்கள். நான் ஏனென்று கேட்க வில்லை; ஏனெனில் நான் யூதனல்ல;

கம்யூனிஸ்டுகளை வேட்டை யாடினார்கள்,


நான் எதிர்க்கவில்லை; ஏனெ னில் நான் கம்யூனிஸ்டு அல்ல;

தொழிற்சங்கவாதிகளைச் சிறை யிலடைத்தார்கள்,

நான் வாய் திறக்கவில்லை; ஏனெனில் நான் தொழிற்சங்கவாதி யல்ல;

கடைசியாக என்னைக் கைது செய்தார்கள், ஏனென்று கேட்க அங்கு யாருமே இல்லை!''

- அ. ஷண்முகசுந்தரம்



# ஆகா! நானும் இப்போ ஒரு பாலிசிதாரர்.

எனக்கும் ஆயுள் காப்பீடு செய்தாச்சு! எங்கப்பா எனக்கே எனக்காக எல்.ஐ.சி. புதிதாக வழங்கும் ஜீவன் கிஷோர் பாலிசி எடுத்திருக்காரே! இந்தப்பாலிசி என்னை மாதிரி மழலைப் பட்டாளங்களுக்காகவே ஏற்படுத்தப்பட்ட நல்ல திட்டம். நான் பெரியவனானதும், எனக்கே எனக்கு இந்தப் பாலிசி மூலம் நிறைய பணம் கிடைக்கும். அப்பா மாதிரியே, நானும் பெரிய மனிதன் ஆவேனே!

ஜீவன் கிஷோர் பாலிசி எடுத்திடுங்கள்! குழந்தைகளின் கனவு நனவாகும்!

மேலும் விவரங்களுக்கு, உங்கள் அருகில் உள்ள எங்கள் கிளை அலுவலகத்தையோ, முகவரையோ அல்லது வளர்ச்சி அதிகாரியையோ உடனே அணுகுங்கள்.

**ஜீவன் கிஷோர்**

லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

Pratibha/LIC/210-91-F/TM

பெருக்கு பாயலாக் காட்டிச்சு! முனீஸ்வரன் சரியான தண்டனை கொடுத்துட்டாரு.''

''இப்ப என்னங்கறீங்க? போலீஸ் இன்ஸ்பெக்டர்...''

''ஷண்முகமோ அல்லது பூசாரியோ தான் இதுக்கு இந்தக் காரியங்களைச் செய்திருக்காங்க. உங்க நண்பர் எதும் அறியாதவர். அப்பாவி. அவர் எங்கருக்கார்னே தெரியலைங்க...''

''எங்க இருந்தாலும் போலீஸ் இன்னும் தேடிக்கிட்டுத்தான் இருக்குது.''

''ஏதோ உங்க மிசின் வைக்கிற விவகாரம் தீர்ந்துப் போச்சுங்க. எத்தனை நாளைக்கு வேலை இருக்குது பாக்கிக்கு?''

''இன்னும் இரண்டு வாரத்தில முடிச்சுருவேன்.''

''உங்களை எதுக்குப் பார்க்க வந்தன்னா மச்சான் ஒருத்தன் ஏழாவது பாஸ் பண்ணிட்டுச் செடுப்பாக்கத்தில இருக்குறான். அவனுக்கு வாட்ச்மேன் வேலை போட்டுக் கொடுத்தீங்கன்னா...''

''பார்ப்போம். வாசுதேவன்னு ஒருத்தர் வருவாரு. அவர்கிட்ட சொன்னா நடக்கும்.''

''அய்யாதன் சொல்லணும்னாங்க...''

''இப்ப என்ன, கிராமத்துக்குப் பெரிய செல்வாக்கு வந்திருச்சு. முனீஸ்வரன் இடப்பெயர்ச்சி ஆயிட்டாரு. மண்டபத்தில...''

''ஏன் கேக்கறீங்க! மண்டபத்துல கோலாகலமா இருக்குதுங்க. குடை ராட்டினம் என்ன, பட்டாணிக் கடலை என்னன்னு, தினம் திருவிளா மாதிரி சாரி சாரியா ஜனம் அம்முது. எல்லாம் இந்த அம்மாதான் காரணம். இவங்க மேல சாமி வந்து அடையாளம் காட்லைன்னா...''

''அதனால் உங்க மச்சினருக்குக் கோவில் பக்கத்துல ஏதாவது கடை போட்டுக் கொடுத்துருங்களேன்.''

''அதும் செய்யலாம். எதுக்கும் வாட்ச்மேன் வேலைன்னா கவர்மெண்டு பாருங்க, அதனால் கேட்டேன்.''

ப்ரமிளா அனைத்தையும் கவனிக்காமல் புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள். மாலை மங்கும் வரை வேலை முடியக் காத்திருந்தாள். கோவிலின் அருகில் கொட்டு மேளம் கேட்க, இருட்டின் விளிம்பில் மஞ்சளாக லாரி வந்து நின்றது. அதிலிருந்து கர்த்தார் சிங் இறங்கி வந்தான்.

''ஸாப் மே ஜாரஹாஃஹீம்.''

''உஜாகர் சிங் எங்கே?''

''உஜாகர்'' என்று அழைக்க, அப்போதுதான் அவன் சீட்டருகிலேயே இருப்பதைக் கவனித்தான். யார் இது? உஜாகர் இல்லையே! என்று வியந்து முடிப்பதற்குள் ''மனோஜ் மை ஃப்ரெண்ட்'' என்று குதித்து இறங்கினது ஷண்பேகர்!

(தொடரும்)



## நூதனமான ஏமாற்று வித்தை!

● ''மீனாட்சி அம்மன் கோவில் பார்க்கிறதுக்காக கோயம்புத்தூரிலிருந்து குடும்பத்தோடு வந்தேன் சார். வந்த இடத்தில் ஷர்ட் துணி நல்லாயிருக்குதுன்னு மூணு மீட்டர் வாங்கினேன். மீட்டர் நாற்பது ரூபா சார். ஊருக்குப் புறப்படும் போது, எங்கிட்ட இருந்த பணத்தை எவனோ பிக்பாக்கெட் அடிச்சுட்டான் சார். இதை வித்தா தான் நான் ஊருக்குப் போக முடியும் சார்!'' என்று ஒரு சோகக் கதையைச் சொன்னான், பஸ்ஸுக்கு வெளியே நின்றவன்.

என் பக்கத்திலிருந்த ஒருவர் உடனே ''யோவ்! நான் டெய்லர்தான். துணியைத் தா! நல்ல துணியா என்று பார்க்கிறேன்!'' - என்று சொல்லி துணியை வாங்கி ஆராய்ச்சி செய்தார். நல்ல துணி தான் என்று பயணிகளுள் ஒருவரிடம் சொல்லி வாங்கிக் கொள்ளும்படி சிபாரிசு செய்தார். கடைசி வரை அந்தப் பயணி மறுத்து விட்டார்.

அடுத்த நிமிடம், துணி வைத்திருந்தவரும், ''நான் டெய்லர்'' என்றவரும் அடுத்த பஸ் நோக்கிப் போய் விட்டார்கள். இருவரும் ஒரே கோஷ்டி என்று பின்னர்தான் தெரியவந்தது! உண்மையில் அந்தத் துணி மிக மலிவானது. ஏமாந்தால் போச்சு! காவல் துறையினர் இதையெல்லாம் கண்டுகொள்கிறார்களோ இல்லையோ பஸ் பயணிகளாவது எச்சரிக்கையாக இருக்கவும்!

- தி. நடராஜன்




என் தந்தையின் நண்பரது அலுவலகத்தில் ரிஸப்ஷனிஸ்ட் வேலை காலியாக இருப்பதை அறிந்து, அவ்வேலைக்கு விண்ணப்பித்தேன். நேர்முகத் தேர்வுக்கான அழைப்பும் வந்தது.

"இது மிகவும் பொறுப்பான வேலை. மேலும் உனக்கு ஆங்கிலத்தில் சரளமாகப் பேசத் தெரிந்திருக்க வேண்டுமே... வேறு ஏதாவது வேலை இருந்தால் சொல்லியனுப்புகிறேன்" என்று கூறி திருப்பி அனுப்பிவிட்டார்.

ஆங்கிலத்தில் சரளமாகப் பேசத் தெரியவில்லை என்ற ஒரே காரணத்திற்காக ஓர் அரிய வாய்ப்பு கை நழுவப் போகிறதே என்று எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது.

ஒருநாள் வாரப் பத்திரிகை ஒன்றைப் புரட்டும் போது அதில் "யெஸ் ரூபா ஜெகன் ஸ்பீக்கிங்" என்ற தலைப்பில் திருமதி. ரூபா ஜெகன் அவர்கள் விவேகானந்தா கல்வி நிலையத்தில் தபால் மூலம் ஆங்கிலம் சரளமாகப் பேசப் பயிற்சி பெற்ற செய்தி வெளியாகியிருந்தது.

இப்பயிற்சியில் சேர்ந்தால் ஆங்கிலத்தில் சரளமாகப் பேச முடியும் என்ற நம்பிக்கை எனக்கு துளிர் விட்டது.

என் தந்தையின் அனுமதி பெற்று நானும் இப்பயிற்சியில் சேர்ந்தேன்.

ஓர் ஆசிரியர் எதிரில் இருந்து பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதைப் போல, பயிற்சி மிகவும் எளிய முறையில் அமைந்திருந்ததால் மிகுந்த ஆர்வத்துடன் இப்பயிற்சியினை மேற்கொண்டேன்.

இப்பயிற்சியை முடித்த என்னால் இப்பொழுது ஆங்கிலத்தில் பயமின்றி சரளமாகப் பேச முடிகிறது.

ஆங்கிலத்தில் பேசத் தெரியாத காரணத்தினால் எந்த வேலை எனக்குத் தர மறுக்கப்பட்டதோ, அதே ரிஸப்ஷனிஸ்ட் வேலை எனக்கு வேறு ஒரு பிரபல நிறுவனத்தில் கிடைத்துள்ளது.

**"THE INSTITUTE'S COACHING IS SIMPLY SUPERB."**

**நீங்களும் தபால் மூலம் இப்பயிற்சியினை மேற்கொள்ளலாம். நேர்முகப் பயிற்சியும் உண்டு. நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

**விவேகானந்தா கல்வி நிலையம்**
**9, நடேசன் தெரு, தி. நகர்,**
**சென்னை-600 017.**

இருபத்து நான்கு மணிநேரமும் ஸ்டார் டி.வி - செலவிட நேரமும் கண் களில் தெம்பும் இருந்தால் இரவும் பகலும் பார்த்துக் கொண்டே இருக்கலாம். விண்ணை நோக்கிய விஸ்தாரக் கிண்ணம் கிரகித்துத் தரும் ஆசியப் பிராந்தியத் துக்கான ஒளிபரப்பு நிகழ்ச்சிகள்.

முதலில் நம் கவனத்தைக் கவர்வது தொழில் நுட்பத்திறனும் சுதந்திரப் போக் கும் துணிச்சலான அணுகுமுறையும். கூடவே சில குறைகளும் தென்படாமல் இல்லை.

பிபிசியைப் பொறுத்தவரை நேர வித்தியாசம் இடிக்கிறது. 'அதிகாலைச் செய்திகள்' என்று அவர்கள் அறிவிக்கும் போது நமக்கு நடுப்பகல் தாண்டிவிடு கிறது. இன்னுமொன்று - ஐரோப்பியச் செய்திகளைச் சொல்லும்போது, தலைப் பைத் தொடர்ந்து நிகழ்ச்சிகளை நேரடி யாகக் காண்பிக்க முடிகிறது. ஆசியச் செய்தி களுக்கு அந்த வாய்ப்பு இன்னும் ஏற்பட வில்லை. சம்பந்தப்பட்ட நிருபரின் புகைப் படத்துடன் அவர் குரல் மட்டும்தான் ஒலிக் கிறது. இந்த விஷயத்தில் பி.பி.சி விட்டி ருப்பது கோட்டை!



☛ ஜான் மேஜர்

'இரண்டாவது ரஷ்யப் புரட்சி' என் றொரு தொடர் நிகழ்ச்சி. பிபிசி தயாரிப்பு. 'பெரஸ்த்ராய்க்கா' என்கிற சொல்லை முதன் முதலாக கோர்பசேவ் அறிவித்த நாளிலிருந்து இன்றைய தினம் வரை சோவியத் யூனியனில் நடைபெற்றுவரும் நிகழ்ச்சிகள் பற்றிய தொகுப்பு. பழைமை வாதிகளுக்கும் மாற்றங்களைக் கொண்டு வருவோருக்குமிடையே இடம் பெற்று வரும் உள்போராட்டங்கள் பற்றிய அலசல். செர்னோபில் அணு உலையில் ஏற்பட்ட விபத்துதான் 'பெரஸ்த்ராய்க்கா'வுக்கு ஏற் பட்ட முதல் சோதனை என்று கூறி, அப் போது கட்சியிலும் ஆட்சியிலும் பொறுப்பி லிருந்த பலரின் விளக்கங்களை அவர்கள் மூலமே வெளியிட்டு, இந்த உள்போராட் டங்களின் பரிமாணத்தை வெளிக் கொண்டு வர முயற்சி செய்கிறார்கள். தொடர் இன் னும் முற்றுப் பெறவில்லை.

'ஈஸ்டர்ன் சர்வீஸ்' என்கிற தலைப் பில் கீழை நாட்டுப் பிரபலஸ்தர்களின் பேட்டிகள் இடம் பெறுகின்றன. அண்மை யில் இடம் பெற்றவர்கள் நமக்குத் தெரிந்த இருவர். ஒருவர் டி.வி மகாபாரதத் தொட ரில் கிருஷ்ணராக நடித்த நிதிஷ் பாரத்வாஜ். மற்றவர், இந்தி நட்சத்திரம் ஆமீர்கான்.

மகாபாரதத்திலிருந்து கிருஷ்ணரின் விசுவரூப தரிசனக் காட்சியைக் காண்பித்து அதைத் தொடர்ந்து பாரத்வாஜிடம் ஒரு

☛ தாட்சர்



கேள்வி - மகாபாரதத் தொடர் பிரிட்டனில் நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது. உங்க ளைப் பார்த்ததும் இங்கே யாராவது அடை யாளம் தெரிந்து கொண்டார்களா?

பதில் - லண்டன் விமான நிலையத்தில் வந்து இறங்கியதுமே ஆங்கிலேய கஸ் டம்ஸ் அதிகாரி கேட்ட கேள்வி :

''வாருங்கள் கிருஷ்ணரே! உங்கள் பகவத் கீதையைக் கையோடு கொண்டு வந்திருக்கி றீர்களா?''

பொதுவாக, அரசியல் பிரமுகர் களைப் பேட்டி காணும் போதும், அரசியல் கொள்கைகளை அலசும் கலந்துரையாடல் களிலும் தயவுதாட்சண்யத்துக்கு இடமே யில்லை. நிறைய 'ஹோம் ஒர்க்' செய்து கொண்டுவந்து, கேள்வி மேல் கேள்வி போட்டுக் குடைந்து எடுத்து சுவாரசியத் தைக் கூட்டுகிறார்கள். மாறுபட்ட கருத்துக் களுக்கு மதிப்பளித்து விளக்கங்களுக்கு வழிவகுக்கிறார்கள். அண்மையில் காரசார விவாதத்துக்குட்பட்டிருக்கும் விவகாரம் : ஐரோப்பிய பொது அமைப்பில் பிரிட்டன் இடம் பெறுவதற்கு வழி வகுக்கமுனையும் இன்றைய பிரிட்டிஷ் பிரதமர் ஜான் மேஜ ரின் கொள்கைகள், அதைக் கடுமையாகச் சாடி எதிர்ப்புத் தெரிவிக்கும் முன்னாள் பிரதமர் மார்கரெட் தாட்சரின் முழக்கங்கள்.

## ஸ்டார் மூவியில் அப்படி என்ன இருக்கிறது?

ஃபன் அண்ட் கேம்ஸ் என்றொரு தொடர் நிகழ்ச்சி. பார்வையாளர்கள் ஐம் பது அல்லது நூறு பேரை வரவழைத்துப் பங்கு கொள்ள வைக்கும் வேடிக்கை + விளையாட்டுக்கள். மாதிரிக்கு ஒன்று : கிரேனின் துணையுடன் மிகப் பெரிய கன்டெய்னர் ஒன்று அரங்க மத்தியில் வந்து இறங்குகிறது. பார்வையாளர்களுக்கு அளிக்கப்படும் விளக்கமும் கேள்வியும் : ''இந்தக் கன்டெய்னருக்குள் ஒட்டகச் சிவிங்கி, சிங்கம், குரங்கு ஆகிய மிருகங் களின் பொம்மைகள் உள்ளன. அவை ஒவ் வொன்றின் எடையும் வருமாறு. ஒட்டகச் சிவிங்கி 8 கிலோ. சிங்கம் 5 கிலோ. குரங்கு 3 கிலோ. உள்ளே இருக்கும் மிருகங்களின் மொத்த எடை 22 கிலோ என்றால் ஒவ் வொன்றிலும் எத்தனை பொம்மைகள் இருக்கின்றன?'' ஒவ்வொருவரும் தப்புத் தப்பாய்ப் பதில் சொல்லி, அனைவரும் குபீர் எனச் சிரித்து ஏகப்பட்டதமாஷ்.

எங்கே, உங்களால் விடை கண்டு பிடிக்க முடிகிறதா பாருங்களேன்! சரியான விடை இந்தக் கட்டுரையின் கடைசிப் பாராவில்.

ப்ளட் பிரஷர் நோயினால் அவதியுறு கிறவர்களுக்கு ஒரு சுவையான செய்தி. வீட்டில் வளர்க்கப்படும் செல்லப் பிராணி கள் பற்றிய விளக்கப்படம் ஒன்றை ஒரு நாள் ஒளிபரப்பினார்கள். ''செல்லப் பிராணிகளைக் கொஞ்சும்போது மனம் அமைதி அடைகிறது. தசைகளின் இறுக்கம் இடம் தெரியாமல் மறைகிறது. இரத்த அழுத்தம் குறைகிறது. அதுவும் எந்த அளவுக்கு? ஹிப்னாடிஸம் மூலம் தூக்க நிலையை அடையும் ஒருவரின் இரத்த அழுத்தம் குறையும் நிலைக்கு.'' இதைச் சொல்வதோடு நிறுத்திக் கொள்ளவில்லை. ப்ளட் பிரஷரை அளவிடும் கருவியின் துணையுடன் நேரிடையாக ஒரு பெண்மணி யின் இரத்த அழுத்தம் குறைவதை எடுத்துக் காட்டினார்கள். அந்தப் பெண்மணியும் அழ காக இருந்தார். அவர் கொஞ்சிய நாய்க் குட்டியும் அழகாக இருந்தது.

ஃபன் அண்ட் கேம்ஸ் சரியான விடை : ஒட்டகச் சிவிங்கி - 1, சிங்கம் - 1, குரங்குகள் - 3.



பின்குறிப்பு : 'ஒரு மாதிரி'யான திரைப் படங்களை எதிர்பார்த்து டிஷ் ஆன்டெனா கனெக்ஷன் பெறுகிறவர்கள் ஏமாந்து போய்விடுவார்கள்!

– சி. ஆர். கே.

# பறந்து பறந்து திரியுங்கள்

● "விமானத்தில் என்ன கோளாறு?" - பதைப்புடன் கேட்ட பயணிக்கு, ரொம்ப டெக்னிகலாய்க் கோளாறு பற்றி விளக்க ஆரம்பித்தார் பைலட்.

"புரியும்படிச் சொல்லுங்களேன்!"

"ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொள்ளுங்கள்."



● நூறு டாக்டர்கள், பிரிட்டிஷ் ஏர் லைன்ஸ் விமானத்தில் லண்டனில் நடந்த ஒரு மாநாட்டுக்கு வந்து போனார்கள். அவர்களுக்கெல்லாம், விமானக் கம்பெனி, 'எங்கள் சர்வீஸைப் பயன்படுத்திக் கொண்டதற்கு, தங்களுக்கும், தங்கள் மனைவிக்கும் நன்றி' என்று கடிதம் எழுதியது. கடிதம் போய்ச் சேர்ந்ததும், மனைவியர்கள், "லண்டனுக்கு யாரை அழைத்துக் கொண்டு போனீர்கள்?" என்று சண்டை பிடிக்க ஆரம்பித்து விட்டனர்!

● ஓரிடத்திலிருந்து, இன்னொரு இடத்துக்குப் போவதை வெகு சுலபமாக்கி விடுகிறது விமானப் பயணம் - முக்கியமாக இரு இடங்கள். இந்த உலகமும், மேல் உலகமும்!

● "என்ன கடத்தல் காரர்களைச் சுட்டுவிட்டார்களா?"

"இல்லை... விமானத்தில் புது மெனு சாப்பிட்டார்கள்!"

● "விமானத்தில் போவதில் ஒரு சௌகரியம்."

"என்ன?"

"நடுவழியில் விமானம் நின்று போனால், இறங்கித் தள்ளச் சொல்ல மாட்டார்கள்!"

● "எங்கள் விமானத்தில் முதல் வகுப்புப் பயணிகளுக்கு, சினிமா காட்டுவோம்."

"இரண்டாம் வகுப்பில்?"

"ஸ்லைடு போட்டுக் காட்டுவோம்."

"மூன்றாம் வகுப்பில்?"

"ஒரு கலர் போட்டோ வைத் தருவோம். எல்லோரும் பார்த்துவிட்டுத் திருப்பித் தந்துவிட வேண்டும்."

! கணவன் : "நாம், கையோடு பியானோவையும் கொண்டு வந்திருக்கலாம்!"

மனைவி : "சரியாப் போச்சு! எதற்கு?"

கணவன் : "நம் பயண டிக்கெட் நம் வீட்டுப் பியானோ மேல்தான் இருக்கிறது!"

● விமானப் பயண விதி : நீங்கள் செல்லும் விமானம் தாமதம் ஆனால், நீங்கள் அடுத்து பிடிக்க வேண்டிய கனெக்டிங் ஃப்ளைட் நிச்சயம் சரியான நேரத்தில் புறப்பட்டுச் சென்று விடும்!



முழுக்க முழுக்க விமானப் பயணம் பற்றிய ஜோக்குகள் கொண்ட புத்தகம் Plane Panic. அதிலிருந்து...

தொகுத்தவர் : மௌஷ்மி

AUDIO PINE

# உங்கள் இசையைக் காஸெட்டில் பதிவு செய்து வெளியிட ஒரு அரிய வாய்ப்பு!

# ஆடியோபைன் இசைத்திறன் போட்டி!



உங்கள் இசையை காஸெட்டில் பதிவு செய்து வெளியிட வேண்டுமா? இதோ ஒரு அரிய வாய்ப்பு.

ஆடியோபைன் இசைத்திறன் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.

நீங்கள் அதற்கு என்ன செய்ய வேண்டும்?

ஆடியோபைன் காஸெட்டை இன்றே, விலைக்கு வாங்குங்கள்.

உங்கள் இசைத்திறமையை பத்து நிமிஷங்களுக்கு குறையாமல் அதில் பதிவு செய்யுங்கள். அந்த காஸெட்டையும், அதை வாங்கிய கடை 'பில்'லையும் கீழ் கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு பத்திரமாக அனுப்புங்கள்.

மேற்கொண்டு விபரங்களுக்கும், அனுமதி விண்ணப்பத்திற்கும் தாங்கள் அறிந்த அருகிலுள்ள ஆடியோபைன் காஸெட் விற்பனையாளர்களிடம் அணுகுங்கள்.

மேலும் பரிசுப் பொருட்கள் :

- முதல் பரிசு 1 — கலர் டிவி
- இரண்டாம் பரிசு 1 — மியூசிக் சிஸ்டம்
- மூன்றாம் பரிசு 1 — டூ-இன்-ஒன்.

மற்றும் 10 ஆறுதல் பரிசுகள் உண்டு.




ஆடியோபைன் காஸெட்டில்தான் உங்கள் இசையைப் பதிவு செய்து அனுப்ப வேண்டும்.

AUDIO PINE

**ஆடியோ எலக்ட்ரானிக் கம்பெனி (பி) லிமிடெட்.**

இம்பெட் பில்டிங் — 2வது மாடி,
9-A, ஒயிட்ஸ் ரோடு,
சென்னை-600 014.
போன் : 868907/8250603/
8254211.

ADWAVE/AFI4339



# வாஷிங்ட

'நேச்சுரல் ஹிஸ்டரி' மியூசியத்திலிருந்து பயங்கரமான எச்சரிக்கை மணி ஒலித்தது.

மியூசியத்தின் வாசலில் டி.சி. போலீஸ் கார்கள் ஐந்து நிமிடங்களில் வந்து குவிந்தன. எஃப்.பி.ஐ அதிகாரிகள் வந்து கொண்டே இருந்தார்கள்.

டீ.வி காமிராக்கள் சுழன்றன. செய்தி நிருபர்கள் சூழ்ந்தனர்.

அமெரிக்கா முழுதும் ரேடியோவில் செய்தி பறந்தது. டீ.வியில் மற்ற நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டன. 'சி.என்.என்' (CNN) என்னும் டீ.வி. நிறுவனம் நிமிடத்துக்கு நிமிடம் காட்சிகளை விவரித்தது.

மியூசியத்துக்குள் என்ன நடந்தது என்பது தெரியவே சற்று நேரமாயிற்று. ஆம்புலன்ஸில் கொண்டு போகப்பட்ட டேவிட் பாமர், மைக்கேல் விண்டன் மற்றும் ஆறு காவலர்கள் - இவர்களைத் தொடர்ந்து டீ.வி. ஆட்களும், நிருபர்களும் டாக்சியிலும், ஸ்டுடியோ வண்டிகளிலும் பறந்தார்கள்.

கடைசியில் செய்தி வெளியாயிற்று.

'ஹோப்' வைரம் திருடப்பட்டது!

'அதை வேறு இடத்துக்கு மாற்ற இரகசியமாய்ச் செய்த ஏற்பாடுகள் வீணாயின. இந்தத் துணிச்சலான திருட்டுக்கு மியூசியத்தில் வேலை செய்பவர் ஒருவரோ பலரோ துணையாக இருந்திருக்க வேண்டும். மியூசியம் மூடப்பட்டுள்ளது. கிறிஸ்மஸ் நாள் தவிர மற்ற நாட்களில் மூடப்படுவது இதுதான் முதல் முறை' இச்செய்தி கேட்டு ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் அதிர்ச்சியடைந்தார். 'இந்தத் துணிச்சலான திருட்டைச் செய்தவர் யாராயிருந்தாலும் கண்டு பிடிக்க வேண்டும். அதற்கு ஜனாதிபதியின் பரிசு ஒரு லட்சம் டாலர்' என்று அறிவிக்கும்படிச் செய்தார்.

ரிச்சர்ட் மூர் 'பிரீஃப் கேஸை'க் கையில் கொடுத்தவுடனே வைரமூர்த்தி தன் காரில் விரைந்து போனார். ரகுராமன் அபார்ட்மெண்ட்டுக்குப் போய் ரங்கதுரை மூலம் வைத்தியிடம் ஏற்பாடு செய்ய சில நிமிடங்கள்தானே ஆகும்! ஆனால்... ஆனால்....

அவருக்குச் சட்டென்று ஏதோ தோன்றியது. ரகுராமனின் இடத்துக்குப் போக வேண்டாம் என்று வேறு எங்கேயோ காரில் பறந்தார் வைரமூர்த்தி.

வைரமூர்த்தி இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே வாஷிங்டனில் ஒரு வைர வியாபாரியைத் தெரிந்து வைத்திருந்தார். வைரங்களை எப்படி மதிப்பிடுவது என்பது பற்றி நன்றாகத் தெரிந்து கொண்டிருந்தார்.

இப்போது அவர் மனத்தில் இருந்த கேள்வி : தம்மிடமிருப்பது உண்மையான 'ஹோப்' வைரமா? எஃப்.பி.ஐ. போன்றவர்கள் தமக்கெதிராகத் திட்டம் போட்டிருந்தால்....?

இந்தக் கேள்விகளுக்குப் பதில் தேடவே தன் வைர வியாபாரி நண்பரை நாடி ஓடினார் வைரமூர்த்தி. நல்லகாலம். வைரவியாபாரி நண்பர் இருந்தார். வைரமூர்த்தியைப் பரிசோதனைக் கூடத்துக்குள் அழைத்துச் சென்று தனியே விட்டு விட்டு வெளியேறினார்.

'பிரீஃப் கேஸை' உடைக்க வேண்டியதாயிற்று. அதிலிருந்து எடுத்த 'ஹோப்' வைர மாலையை 'அல்ட்ரா 'வைலட்' விளக்கின் கீழ் வைத்து விசையைத் தட்டினார் வைரமூர்த்தி. அப்போது அவர் கறுப்புக் கண்ணாடியைப் போட்டுக் கொள்ள வேண்டியிருந்தது.

இரண்டு வினாடிகள் கழித்து விசையை நிறுத்திவிட்டு, கண்ணாடியைக் கழற்றினார்.

'ஹோப்' வைரம் சிவப்பு ஒளியைச் சிறிதும் சிந்தவில்லை.

'ஹோப்' வைரமா இது!

'ஹோக்ஸ்' வைரமாயிற்றே!! வெறும் ஏமாற்று!

# வைரம் 28

ரகுராமன், நிர்மலா, ரிச்சர்ட் மூர், கறுப்பு அமெரிக்கன், ஜகன்னாதன், வைத்தியநாதன், பூர்ணம், ஏன் ரங்கதுரையைக் கூட மனமார சபித்தார் வைரமூர்த்தி.

வைரம் கிடைக்கவில்லை. உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமே என்று ரங்கதுரையை அழைத்து வரப் புறப்பட்டார்.

சிவப்பு 'வோல்வோ' காரை இனியும் ஓட்டினால் ரொம்பவும் தொல்லைகள் ஏற்படும் என்று அதை ஒரு 'பார்க்கிங் கராஜி'ல் விட்டபின், டாக்சியைப் பிடித்துக் கொண்டு ரங்கதுரை இருந்த இடத்துக்குப் போனார். 'ஹோக்ஸ்' வைரம் இருந்த 'பிரீஃப் கேஸை' வழியிலேயே ஒரு கடையில் வெளிப்புறம் வைக்கப்பட்டிருந்த பெரிய இரும்பு குப்பைத் தொட்டியில் போட்டார். எதற்கும் அந்த வைர மாலை இருக்கட்டும். சில வைரங்களாவது விலை போகுமே என்று பத்திரப்படுத்திக் கொண்டார்.

**வை**ரமூர்த்தி வருவார் என்று காலை எட்டரையிலிருந்து காத்திருந்த ரங்கதுரை டி. வி. யில் வர ஆரம்பித்த செய்திகளைப் பார்த்தான். மியூசியம் பற்றிய செய்திகள்.

'வைரம் 'ஹோப்' வைரத்தை அடிச்சுட்டான்... ஆனா இன்னும் ஆளைக் காணோமே' என்று அவதிப்பட்டான் ரங்கதுரை.

ஒருவழியாக வைரமூர்த்தி வந்து சேர்ந்த போது மணி ஒன்பதைத் தாண்டி இருந்தது.

''டேய் ரங்கதுரை, புறப்படு போகலாம்...'' வைரமூர்த்தி பொறுமையில்லாமல் உத்திரவு இட்டார்.

''அது எங்கே வைரம்?''

''அது இருக்கு, நீ புறப்படு.''

''அதை நாமே எடுத்துக்கிட்டுப் போகிறோமா?'' ஆர்வத்தை ரங்கதுரையால் அடக்க முடியவில்லை.

''அதெல்லாம் இவங்க முன்னாலே பேச வேண்டாம் நீ புறப்படு...'' என்று துரிதப்படுத்தினார் வைரமூர்த்தி.

''அப்படின்னா... வைத்தியினுடைய உதவி வேண்டாமா...''

''வைத்தியே வேண்டாம்'' என்று வைரமூர்த்தி கர்ஜனை செய்தார். ''உனக்குத் தேவையான பாஸ்போர்ட்டை மட்டும் எடுத்துக்க... மற்ற எல்லாத்தையும் உட்டுடு'' என்று அவசரப்படுத்தினார்.

அடுத்த பத்து நிமிடங்களில் வைரமூர்த்தியும் ரங்கதுரையும் ரகுராமனின் அபார்ட்மெண்டை விட்டு வெளியே வந்தார்கள்.

''அடுத்து என்ன திட்டம்? வைரம் எங்கே?'' என்று நச்சரித்தான் ரங்கதுரை.

''அந்த வைரம் ஒரு போலி வைரம். அசல் 'ஹோப்' வைரத்தை அதிகாரிகள் மறைத்து விட்டார்கள்... இனி நாம் மாட்டிக்க ரொம்ப நேரமாகாது... ரிச்சர்ட் மூர் நிச்சயம் நமக்கு எதிராயிடுவான்''

''என்ன... 'ஹோப்' வைரம் கிடைக்கலையா? நாம அமெரிக்கா வந்ததே அதுக்காகத்தானே...''

''ரங்கா, விவாதத்துக்கு நேரம் இது இல்லை... நீ போலீசுலே பிடிபடணுமா இல்லை உருப்படியா ஊர் திரும்பணுமா?''

''இப்போ எங்கே போறோம்?''

''டாக்சி... டாக்சி...'' என்று ஒரு டாக்சியை நிறுத்தினார் வைரமூர்த்தி. இருவரும் ஏறிய பின் ''யூனியன் ஸ்டேஷன்'' என்று வைரமூர்த்தி சொன்னதும் வண்டி புறப்பட்டது.

''நாம நேரா பிலடெல்பியா போயிடுவோம்... அங்கேயிருந்து லண்டனுக்கு பிரிட்டிஷ் ஏர்வேய்ஸ் பிடிச்சுடலாம்... அப்புறம் நேரா மெட்ராஸ்.''

யூனியன் ஸ்டேஷன் வந்ததும் இறங்கினார்கள். இருபது டாலர் நோட்டை டிரைவரிடம் தந்து ''கீப் தி சேஞ்ச்'' என்று சொல்லிவிட்டு வைரமூர்த்தி போனார்.

ஹாசன்



❑ மூதறிஞர் ராஜாஜி ஸ்ரீரங்கம் நகருக்கு ஒருமுறை வருகை புரிந்த போது பொதுக் கூட்டத்தில் இவ்வாறு பேசத் தொடங்கினார் : "எம். எம். மாரியப்பா கடவுள் வாழ்த்துப் பாடினார். கணீர் என்ற வெண்கலக் குரல். அக்கரை அரிய லூருக்கும் கேட்கும்! இது இசை. வர வேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தீர்கள். இது இயல். தலைவரை முன்மொழிதல், வழிமொழிதல், மாலை அணிவித்தல் இதெல்லாம் நாடகம்! ஆக முத்தமிழிலும் வரவேற்பு அளித்தீர்கள்!"

- சந்திரமனை சித்திரகவி

''தேங்க்ஸ்'' என்று சொன்னவன் டாக்சி டிரைவர் ஸாம்.

**வை**ரமூர்த்தியைக் கடந்த சில நாட்க ளாகப் பின்தொடர்ந்து வந்த அந்த இந்தி யன், இப்போது தான் வந்து இறங்கிக் கொண்ட டாக்ஸிக்குப் பணம் கொடுத்து அனுப்பிவிட்டு ஓடி வந்தான்.

ஸாமிடம் பத்து டாலர் நோட்டை நீட்டி ஏதோ கேட்டான்.

'அவர்கள் பிலடெல்பியா போகிறார்கள்' என்று பதில் கூறினான். பத்து டாலர்; சும்மா விடுவானேன்?

## 29

**'ஹோ**ப்' வைரம் திருடு போவ தற்கு முதல் நாள்... ரகுராமனைக் கத்தியால் குத்தி விட்டு பிடிபட்ட கறுப்பு அமெரிக் கனுக்கு எந்த வக்கீலும் வந்து ஜாமீன் கொடுக்கவில்லை. அவன் கொஞ்சம் ஏமாற்றம் அடைந்தான். இனியும் தயங்கி னால் நிச்சயம் சிறையில் அடைத்து விடு வார்கள் என்று தெரிந்தது.

அவன் உண்மையைச் சொல்ல ஆரம் பித்தான். ரிச்சர்ட் மூர் தன்னைச் சந்தித்தது, தான் செய்ய வேண்டியவைகளைச் சொன் னது, வாரம் முன்னூறு டாலர் பணம் தந்தது என்பதை எல்லாம் சொன்னான்.

''நிர்மலா பற்றி ஏதாவது தெரியுமா? வைரமூர்த்தியைப் பற்றி ஏதாவது தெரி யுமா?'' என்று துருவித் துருவி அவனைக் கேட்டான் ராபர்ட் வார்னர்.

கொஞ்சம் தயங்கினான் அந்த ஆள். அவனிடம் விஷயம் இன்னும் இருக்கிறது என்று ராபர்ட் அவனைக் கொஞ்சம் பய முறுத்தினான்.

''நீ சொல்லவில்லை என்றால் அது பெரிய குற்றம். ஏற்கெனவே ரகுராம னைக் குத்தி இருக்கிறாய். இருபது வருஷ மாவது நீட்டுவார்கள்...'' என்றான் ராபர்ட்.

அந்த ஆள் அசந்து விட்டான். இருபது வருஷமா? வெளியே வரும் போது ஐம்பத் திரண்டு வயதாகிடுமே!

உடனே எல்லாவற்றையும் கொட்டி னான்.

நிர்மலாவைக் கடத்தத் தான் உதவி செய்ததையும், வைரமூர்த்தி முதலில் அவ ளைத் தனது குடியிருப்புக்கு அழைத்துப் போனதையும், அந்தக் கடத்தல் வேலைக்கு ஆயிரம் டாலர் தனியாய் வாங்கியதையும் சொன்னான். ரிச்சர்ட் மூர்தான் எல்லாத் திட்டத்தையும் போட்டவன் என்றும் தெரிந் தது.

அந்த ஆளை அரசாங்கத்துக்குச் சாட்சி யாக வருவாயா என்று கேட்டதற்கு அவன் சம்மதித்தான். அவன் அவர்கள் பாதுகாப் பில்தான் இருக்க வேண்டும் என்று எஃப்.பி.ஐக்கான ஒரு தனி இடத்தில் அவனைக் கொண்டு போனார்கள். சிறை வாசம் இல்லை, அவனுடைய பாதுகாப் பிற்காகத்தான் என்று அவனிடம் பலமுறை விளக்க வேண்டியதாயிற்று.

**ரா**பர்ட் அவனை அனுப்பி விட்டு மீண்டும் ரகுராமனை ஆஸ்பத்திரியில் பார்க்கப் போனான்.

ரகுராமன் ஆர்வத்துடன், ''நிர்மலா பற்றி ஏதாவது தெரிந்ததா ராபர்ட்?'' என் றான்.

''நிர்மலா வைரமூர்த்தியின் இடத்தில் தான் இருக்கிறாள் என்று நாங்கள் நினைக் கிறோம். உன்னைக் கத்தியால் குத்தியவன் தான் அவளைக் கடத்த உதவி செய்தவன் என்று தெரிந்தது. ஆனால் இப்போது நாம் வைரமூர்த்தியின் இடத்துக்குப் போனால் காரியம் கெட்டு விடும்.''

''நிர்மலாவுக்கு ஒன்றும் ஆகாதே?''

''என்னை என்ன பதில் சொல்லச் சொல்கிறாய்?'' என்று கேட்டான் ராபர்ட்.

இறைவனை வேண்டுவதைத் தவிர வேறு வழியில்லை என்று ரகுராமன் முடி வுக்கு வந்தான்.

''என் மாமா மாமிக்கு என்னைப் பற்றிச் சொல்லி விட்டீர்களா?'' என்றான் வருத்தத்துடன்.

''இல்லை மிஸ்டர் ரகுராமன்... அதை இப்போது செய்தால் வைரமூர்த்தியும் ரங்க துரையும் உஷாராகி விடுவார்கள் என்ப தால் இப்போதைக்குச் சொல்லாமலிருப் பது நல்லதில்லையா?'' என்றான் ராபர்ட்.

**வை**ரமூர்த்தி போலி வைரத்தைத் திருடிய நாள் காலை.

ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட டேவிட் பாமர், மைக்கேல் விண்டன் இவர்

களுடன் ஆறு காவலர்கள் எல்லோரையுமே ராபர்ட் வார்னர் விசாரணை என்ற பெயரில் சுற்றி வளைத்தான். அவர்களுக்குக் கண் மருந்து போட்டுச் சில மணி நேரங்களில் டாக்டர்கள் அனுப்பி விட்டார்கள்.

டேவிட், மைக்கேல் இருவரிடமும் தனியாகப் பேசினான், ராபர்ட்.

''இனிமேல் என் கையில் விட்டு விடுங்கள்... உங்கள் உதவிக்கு மிக்க நன்றி... கண்ணீர்ப் புகை இரண்டு நாட்களுக்கு உங்களுக்குக் கொஞ்சம் கண் எரிச்சலைக் கொடுக்கும். பிறகு சரியாகி விடும்... நான் வரட்டுமா?'' என்று அவன் புறப்பட்ட போது மணி 11:15 ஆகியிருந்தது. காவலர்களில் இருவரை மட்டும் ராபர்ட் வார்னர் தன்னுடைய ஆபீஸ் காரிலேயே அழைத்துக் கொண்டு போனான். இருவரில் ஒருவன் ரிச்சர்ட் மூர். மற்றவர்களையெல்லாம் எஃப்.பி.ஐ. விடுவித்து விட்டது.

ஆபீஸ் போனதும் ரிச்சர்டு ஒரு அறையிலும், மற்றவன் இன்னொரு அறையிலுமாக விடப்பட்டார்கள்.

ஸாம் தனக்காகக் காத்திருப்பதை அறிந்து அவனை உடனே வரவழைத்தான், ராபர்ட்.

ஸாம் எல்லாவற்றையும் விவரித்தான். அவனுக்கு நிச்சயம் அரசு வெகுமதி அளிக்கும் என்று ராபர்ட் சொன்னதும் ஸாம் ''நீங்க அன்னைக்கி என் மேலே வைச்ச நம்பிக்கைதாங்க காரணம். டாக்ஸி தொழிலில் என் வருமானம் பாதிக்கப்பட்டாலும் பரவாயில்லேன்னு வைரமூர்த்தியை ஃபாலோ பண்ணி சமயத்துக்கு டாக்ஸியைக் கொண்டு போய் நிறுத்தி, ஏற்றிக் கொண்டு அவர்கள் தமிழ் பேசுவதைக் கேட்டு மொழிபெயர்த்து உங்களிடம் வந்து சொல்ல முடிந்ததே'' என்றான். ''உனக்கு நஷ்டமான வருமானத்தை எப்.பி.ஐ. ஈடு கட்டும்'' என்றான் ராபர்ட். ஸாம் புறப்பட்டான்.

மணி 11:45 ஆகியிருந்தது. வைரமூர்த்தி, ரங்கதுரை, இவர்களைத் தொடர்ந்த ஆள் மூவரும் இரயிலில் பிலடெல்பியா போவதென்றால் 11:00 மணி வண்டியில்தான் புறப்பட்டு இருக்க வேண்டும். வண்டி பிலடெல்பியா போய்ச் சேர 12:30 மணி ஆகலாம். அதற்குள் ஏற்பாடுகளை விரைவாக ராபர்ட் செய்ய ஆரம்பித்தான்.

அவர்களது 11:00 மணி எக்ஸ்பிரஸ் இரயில், சில இடங்களில் மட்டுமே நிற்கும். வடக்கே பால்டிமோர் ஸ்டேஷனைத் தாண்டியிருக்கும். பிலடெல்பியா போகுமுன் டெலவேர் மாகாணத்தில் வில்மிங்டன் என்ற இடத்தில் 12:13க்குப் போகும். அங்கேயே சில ஏஜெண்டுகள் வண்டியில் தொத்திக் கொண்டால் பிலடெல்பியா ஏஜண்டுகளுக்கும் வசதியாய் இருக்கும். வில்மிங்டன், பிலடெல்பியா இரண்டு நகரங்களிலும் எஃப்.பி.ஐக்குச் செய்தியை போன் மூலம் ராபர்ட் அனுப்பினான். ஏற்கெனவே இருந்த வைரமூர்த்தி, ரங்கதுரை இவர்களுடைய போட்டோக்களுடன் ஜகன்னாதனுடைய போட்டோவையும் 'ஃபாக்ஸ்' மூலம் அனுப்பி வைத்தான். ஜகன்னாதன் சான்பிரான்ஸிஸ்கோவில் மாயமாய் மறைந்தான் என்றாலும் ஒருவேளை பிலடெல்பியாவில் வைரமூர்த்திக்காகக் காத்திருக்கலாமே!

ரிச்சர்ட் மூர் உட்கார்ந்திருந்த அறைக் கதவு திறக்கப்பட்டது. ராபர்ட் வார்னருடன் இன்னொரு ஏஜண்டும் நுழைந்தார். ரிச்சர்டுக்கு ஒரு சிகரெட் தந்தார்கள்.

ரிச்சர்டைப் பார்க்க வருமுன் ராபர்ட் வார்னர் இன்னொரு அறையிலிருந்த மியூசியம் காவலனை விடுவித்து அனுப்பி விட்டது ரிச்சர்டுக்குத் தெரியாது.

''ரிச்சர்ட், இன்று காலை மியூசியத்தில் நடந்ததுக்கு எங்கள் வசமுள்ள அந்த இன்னொரு காவலன்தான் காரணம் என்று தெரிந்தது'' என்று ஆரம்பித்துச் சில கேள்விகளைக் கேட்டான். பொதுவான கேள்விகள். ரிச்சர்ட் எல்லாவற்றிற்கும் கடகடவென்று பதில் சொன்னான்.

''நீ போகலாம், ரிச்சர்ட்... நன்றி'' என்று சொல்லி ராபர்ட் அவனை அனுப்பி விட்டான்!

(தொடரும்)

## அடுத்த இதழில் :



பி. ஜே. பி. — முன்னேற்றங்களும் பின்னடைவுகளும்
- அலசல் கட்டுரை

+

வாசகர்களுக்குப் பொன்விழா பரிசாக ஓர் இனிய ஆச்சரியம் காத்திருக்கிறது!

## நீங்கள் கேட்டவை – தராசு



அபார சாதனை




சாகாவரம்





கனவு பலிக்குமா?



சிறைக்குத் தயார்

● கே. பாலமுருகன், சித்தாத்தூர்.

**? ஜனதா கட்சி உட்பூசல் விகவரூபம் எடுத்துள்ளதே முடிவு என்னவாக இருக்கும்?**

! ஹிந்து கார்ட்டூனாக இருக்கும்.

● இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.

**? என். டி. ஆரின் பாரத தேசக் கனவு பலிக்குமா?**

! முதல் அத்தியாயம் : அறிவிப்பு; இரண்டாம் அத்தியாயம் : பிசுபிசுப்பு!

● சாஸ்திரி வேங்கடேஷ், புதுதில்லி.

**? ரூபாயின் மதிப்பு ஆறு பைசாவாமே?**

! நீங்கள் கேட்டு நான் பதில் சொல்வதற்குள் அது மேலும் குறையாமலிருந்தால் சரி!

● ஆமருவியப்பன், கும்பகோணம்.

**? பழைய மூர்மார்க்கெட், புது மூர்மார்க்கெட் என்ன வித்தியாசம்?**

! என்னதான் புது மூர்மார்க்கெட் கட்டிடம் என்றாலும் பழைய ஆசாமிகள் புகும்போது சீக்கிரமே பழைய களை வந்து விடும். அந்தப் பழைய களைதான் மூர்மார்க்கெட்டின் தனிச் சிறப்பே! குறிப்பாகப் பழைய புத்தகக் கடைகளின் நெடியைச் சகித்துக் கொள்ள முடியுமானால் ஒரு

# கலைஞரின் மௌனம் கலைந்த விதம் பற்றி?



கலைந்த மௌனம்

மாலைப் பொழுது வியப்புக்களை அள்ளித் தரும். இன்று டிபார்ட்மெண்டல் ஸ்டோர்; சூப்பர் மார்க்கெட் என்கிறோம். அன்றே மூர்மார்க்கெட்.

● வ. தே. பா., சென்னை.

**? 'தடா' சட்டத்தின் மகிமையே, மகிமை தான் இல்லையா?**

! உரக்கச் சொல்லாதீர்கள், 'இதுதாண்டா தடா!' என்று சினிமா எடுத்து விடுவார்கள்!

● கே. பி. சாரதி, வேலூர்.

**? 'சிறைக்குச் செல்லத் தயார்' என்கிறாரே, வீரமணி?**

! பூ. இ வ் வ ள வு த ா னே! 'தூக்கு மேடைக்கே செல்லத் தயார்' என்கிறாரே கருணாநிதி!

● எஸ். செல்வமணி, சென்னை.

**? மதுரை அரசு மருத்துவமனையில் டார்ச் லைட் வெளிச்சத்தில் பிரசவ ஆபரேஷனாமே?**

! நல்லவேளை, மருத்துவமனையில் டார்ச் லைட்டாவது இருந்ததே! அதுவே பெரிய ஆறுதல்!

● அ. ஜமால்மொய்தீன், செங்குன்றம்.

**? 'புலிகளைப் போரில் வென்ற பிறகுதான் சமரசத் தீர்வு குறித்துச் சிந்திக்க முடியும்' என இலங்கைப் பிரதமர் கூறியுள்ளாரே?**

! மட்டன் பிரியாணி சாப்பிட்டு விட்டு ஏப்பம் விட்டபடியே சைவ உணவு மாநாட்டில் கலந்து கொள்வார் போல! சரி, சரி, முதலில் வெல்லட்டும் பிறகு பார்க்கலாம்.

● எம். ஆர். சுப்பிரமணியன், கொங்கணாபுரம்.



ஹிந்து கார்ட்டூன்

? விதி, சதி - வித்தியாசம் என்ன?

! ஏர் இந்தியா விமானத்தைத் தகர்க்க, குண்டு வைக்கப்பட்டது சதி. அது யதேச்சையாகக் கண்டுபிடிக்கப்பட்டு விமானமும் பயணிகளும் தப்பியது விதி. விமான நிலையப் பாதுகாப்புப் பிரிவிடம் இல்லாதது மதி.

● தா. ஷேக் உசேன், செஞ்சி.

? 'மனோஜ் பிரபாகர் பௌலிங் போடவில்லை, துரோ செய்கிறார்' என்கிறார்களே, ஆஸி அணியினர்?

! இன்று டெலிலென்ஸ்கள் பயன்படுத்தி ஒவ்வொரு அசைவையும் திரைப்படம் அல்லது வீடியோ எடுக்க வசதி இருப்பதால் யாரும் ஆட்டத்தில் அழுகுணி அடித்துத் தப்பிக்க முடியாது. ஒருவேளை அம்பயர் கண்ணுக்குத் தப்பினாலும் காமிராக் கண் உலகுக்கு உணர்த்தி விடும். எனவே குற்றம் சாட்டுவதிலும் எச்சரிக்கையும் நிதானமும் தேவை.

● எஸ். கே. எம். மோகன், கழிஞ்சூர்.

? விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவே முடியாதா?

! ஏன் முடியாது? அதான் ஜெ விலைகளை நிர்ணயிக்கக் குழு அமைத்து விட்டாரே! ஒரு சில நாட்களில் அறிக்கையும் சமர்ப்பிக்கச் சொல்லியிருக்கிறாரே. விலைகளை நிர்ணயித்து அவர்கள் அறிக்கை சமர்ப்பித்ததும் விலைகள் கையைக் கட்டிக் கொண்டு தண்டம் சமர்ப்பித்து 'ஜெ'க்குக் கட்டுப்பட்டுச் சரிய வேண்டியதுதானே. அப்படியே நிர்ணயித்த விலைக்கு மேல் பண்டங்கள் விற்றாலும்தான் என்ன? எப்படியும் விலையை நிர்ணயித்துக் கட்டுப்படுத்தியாகி விட்டதல்லவா!

● எஸ். என். ராகவன், பெல்லாரி.

? வழுவூர் ராமையா பிள்ளை பற்றி...?

! அவரிடம் சிஷ்யைகளாக வந்து சேர்ந்த பெரிய மனிதர் வீட்டுப் பெண்கள் பலர். ஆனால், ''செல்லக் குழந்தைகளாச்சே'' என்று பார்க்க மாட்டார். தாளம் தப்பினாலோ, அடவுகள் பிசகினாலோ, விறைப்பு தளர்ந்தாலோ தாங்க மாட்டாமல் தட்டுவாங்கம் பண்ணும் தாளக் கட்டையாலேயே முட்டிக் காலைப் பதம் பார்த்து விடுவார். சொல்லிக் காட்டத்தான் லாயக்கு என்று எண்ணி விட முடியாது. திருத்தமாக ஆடிக் காண்பித்து விடுவார். கல்கி, டி.கே.சி. முதலியவர்களிடம் பழகியதில் அவர் பரதக் கலையில் மேலும் நயம் சேர்த்தது. வழுவூர் பாணியைப் பலர் கஷ்டப்பட்டு அவரிடம் கற்றார்கள். ஆனால் பாதுகாத்தவர் சிலரே. மற்றவர்கள் தங்கள் பாணியை அதில் கலந்து சொதப்பி விட்டார்கள். வழுவூரார் பெரும் புகழுடன் அண்மையில் அமைதி அடைந்தார். ஆனால் பரத நாட்டியம் ஆடுவதே இழுக்கு என்று கருதப்பட்ட காலத்தில் அவர் எதிர் நீச்சல் போட்டுப் புரிந்த சாதனைகள் சாகா வரம் பெற்றவை.

● த. ரவீந்திரன், புதுவண்டிப்பாளையம்.

? இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் வினையாடி டையில் முடிந்த ஆட்டம் எப்படி?

! படு த்ரில்தான்; அடுத்தாற்போல் ஒரு ஆஸி வெற்றி அதை விட ஜோர்தான். ஆனால் அடுத்து ஒரு பூன் வந்து பூமராங் பண்ணி விட்டாரே!

● கே. எம். ரவிச்சந்திரன், மதுரை.

? 91-ம் ஆண்டில் அரசியலில் அபார சாதனை புரிந்த பிரமுகர் யார்?

! ராபின் மெய்ன் கேஸில் காளிமுத்து மறுபடி நழுவினால் அவர்தான்! நழுவ முடியாமல் சிக்கினால் அவருக்கு வலை போட்டவர்தான்!

● கே. ஆர். தேவேந்திரன், கொணவட்டம். ❑

? கலைஞரின் மௌனம் கலைந்த விதம் பற்றி?

அண்ணாநகர் பொதுக் கூட்டத்தில் உடன் பிறப்புக்கள் காட்டிய உற்சாகம் அந்தக் கட்சித் தலைவர்களின் வந்தனைக்குரியது. அன்று கருணாநிதி பேசிய போது முதல் முறையாக, ''ராஜீவ் காந்தி மரணத்துக்குப் பிறகு விடுதலைப் புலிகள் விஷயத்தில் நமது அபிப்பிராயம் மாறிவிட்டது; அனுதாபம் போய் விட்டது'' என்று கூறியது வரவேற்புக்குரியது. இந்தக் கருத்தை அவர் முன்னமேயே வெளியிட்டிருக்க வேண்டும். இனியேனும் இந்தக் கருத்தை மேலும் வலியுறுத்தும் விதமாகவும் மக்களுக்கு நம்பிக்கை பிறக்கும் விதமாகவும் அவர் சிந்தித்துத் திட்டவட்டமாகச் செயல்பட வேண்டும். இல்லையெனில் இழந்த வாக்காளர் ஆதரவைத் திரும்பப் பெற முடியாது.

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
கே. ஆர். தேவேந்திரன்,
பிள்ளையார் கோவில் தெரு,
கொணவட்டம்,
வேலூர் - 632 013.

# கொடுமை ஒரு பக்கம்; கருணை மறுபக்கம்!

## காவலர் உருவில் காலன்!

டில்லியில் காவலில் உள்ள கைதிகள் இம்சிக்கப்பட்டு சாவது சர்வ சாதாரணமாகி விட்டது. இவர்கள் சந்தேகத்தின் பேரில் கைதாகி, வழக்குத் தொடுக்கப்படாமல் காவலில் வைக்கப்பட்டிருப்பவர்கள். இவ்வாண்டு இதுவரை ஏழு பேர் இப்படி போலீஸ் சித் திரவதையில் இறந்திருக்கின்றனர். கைதிகளைக் குற்றத்தை ஒப்புக் கொள்ள வைக்க போலீஸார் படுத்தும் பாட்டில் இத்தகைய மரணங்கள் நிகழ்கின்றன. லேட்டஸ்ட்டாக இருபது வயது இளைஞர் ரகுநாத். அவர் போட்டிருந்த உடைகளோடு அவரை எரிக்கச் சொல்லி, போலீஸார் உறவினர்களை மிரட்டி கட்டாயப்படுத்தியிருக்கின்றனர். காரணம் - போலீஸ் கொடுமைக்குச் சாட்சியம் எதும் இருக்கக் கூடாது என்பதுதான்!

## மருத்துவத் துறையிலும் அசுரத் தனம்

ஆக்ராவில் ந ட ந் த கொடுமை அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. சென்ட்ரல் ஜல்மா இன்ஸ்டிடியூட் என்ற நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் ஆந்திரா, ஒரிஸ்ஸா போன்ற பல மாநிலங்களிலிருந்து படிப்பறிவற்ற, குடும்பத்தினரால் ஒதுக்கப்பட்ட, ஏழை குஷ்ட ரோகிகளை அழைத்து வந்து, வைத்திய உதவி அளித்துப் பராமரிப்பதாகக் கூறினர். பிறகு 'ஆபரேஷன் செய்தால் நோய் குணமாகிவிடும்' என்று நம்ப வைத்து, அவர்களின் சிறுநீரகம், கண்கள் போன்றவற்றை அகற்றி, பணக்காரர்களுக்குப் பொருத்த விற்பனை செய்திருக்கின்றனர். புனிதமான மருத்துவத் துறையில் இப்படி அசுரத்தனமா? நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டதுடன், திரு சுசில் குமார் வெர்மா என்பவர் பொது நலன் கருதி உச்ச நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளார்.

## கேள்வி நேரத்துக்குப் பத்து கோடி!

நாடாளுமன்ற நடவடிக்கைகளை டீவி படம் பிடித்து ஒளிபரப்புவதால் யாருக்கு நன்மையோ இல்லையோ, வரி செலுத்தும் மக்களுக்கு நஷ்டம்தான். கேள்வி நேர ஒளிபரப்பு மட்டும் சுமார் ஆறு முதல் பத்து கோடி ரூபாய் வரை விழுங்கப் போகிறது!


## முதல் பெண்மணியின் பிறந்தநாள்

குடியரசுத் தலைவரின் மனைவி என்ற முறையில் ஜானகி வெங்கட்ராமன் இந்நாட்டின் முதல் பெண்மணியாகிறார். அவர் தமது எழுபதாவது பிறந்த நாளைக் கொண்டாடிய விதம், அது பற்றித் தெரிய வந்தவர்கள் உள்ளத்தை நெகிழ வைத்தது. சுமார் இருநூறு குழந்தைகள் - எல்லோரும் அங்கஹீனர்கள் அல்லது மூளை வளர்ச்சிக் குன்றியவர்கள் - அழைக்கப்பட்டிருந்தனர். இந்த விசேஷ விருந்தினருடன் ஜனாதிபதியும் அவர் மனைவியும் பெண், மற்றும் பேரக் குழந்தைகளும் ஆடி, பாடி மகிழ்ந்தனர். சிற்றுண்டி கொடுத்துச் சிறிய பரிசுகள் அளித்தனர். அந்தக் குழந்தைகளுக்குத்தான் எவ்வளவு மகிழ்ச்சி!



70வது பிறந்தநாள்

- இருள் நீக்கி கணேசன்



# வைஜயந்தி மாலாவுக்கு ஆபத்து!



இரண்டு மாதம் காஷ்மீர் வாசம் என்றால் அவரவருக்கும் வீட்டுக் கவலை வந்து விடும். படப்பிடிப்பில் கவனம் செல்லாது. அடிக்கடி டிரங்கால் போடுவார்கள். நல்லது கெட்டது என்றால் உடனே ஊர் திரும்ப வேண்டும் என்பார்கள். இதையெல்லாம் தவிர்க்கத்தான், ''நடிக நடிகையர் குடும்பத்தோடு வரலாம்'' என்று தாராள மனம் காட்டினேன்! ஏதோ ஹாலிடேக்குக் காஷ்மீர் போவது போல் கிளம்பினால் உற்சாகத்துடன் ஒத்துழைப்புத் தருவார்கள் இல்லையா!

இப்படி ஒரு சுயநல நோக்கு என் அறிவிப்பில் இருக்கவே செய்தது. அப்போது சென்னையில் நல்ல கோடை காலம். எனவே நான் எதிர்பார்த்தது போலவே எல்லாரும் குஷியாகக் கிளம்பினார்கள். ஜெமினி கணேசன் குடும்பம், நம்பியார் குடும்பம், தங்கவேலு குடும்பம்... வைஜயந்தி மாலா கூட தன் பாட்டியோடு தான் புறப்பட்டார்.

யூனிட்டில் தனியாக வந்திருந்த இள வயதுக்காரர்கள், ''திருமணமாகி இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு காஷ்மீரில் தேன் நிலவா?'' என்று தம்பதிகளாக வந்தவர்களைக் கோட்டா பண்ணினார்கள்.

குடும்பத்தோடு நடிக - நடிகையர் காஷ்மீருக்கு வந்து விட்டால் மட்டும் பிரச்னைகள் தீர்ந்து போய் விடாது என்பது அங்கு போன பிறகுதான் புரிந்தது. முதல் பிரச்னை, எடுத்த காட்சிகள் எப்படி வந்திருக்கின்றன என்று எவ்வாறு தெரிந்து கொள்வது? சரியாக அமையவில்லையெனில் ரீ-டேக் செய்ய வேண்டுமே. இதற்காக இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்துடன் ஓர் ஏற்பாட்டைச் செய்து கொண்டேன். ஸ்ரீவத்ஸவா என்ற அதிகாரி அளித்த ஒத்துழைப்பு மகத்தானது. காஷ்மீரில் எடுக்கப்பட்ட காட்சிகளின் பிலிம் சுருள்கள் ஸ்ரீநகரிலிருந்து டில்லி வழியாக விமானம் மாறி, சென்னை வந்தடையும். இங்கே ஜெமினியில் பிராஸஸ் செய்யப்பட்டு, பிரிண்ட் போடப்பட்டு உடனடியாகத் திரும்பவும் ஸ்ரீநகருக்குப் பறந்து வரும்!

நாங்கள் படப்பிடிப்பை நடத்தியதோ பெரும்பாலும் பகல்காம் என்ற இடத்தில். அது ஸ்ரீநகரிலிருந்து 65 மைல் தூரம். அங்கேயே கூடாரம் அடித்துச் சமைத்துச் சாப்பிட வேண்டும். காலை எட்டு மணிக்குப் படப்பிடிப்பு ஆரம்பமாகி விடும். மாலை ஆறு மணி வரை ஷூட்டிங். பிறகு சற்று ஓய்வு. அப்புறம் டெக்னீஷியன்கள் புறப்பட்டு ஸ்ரீநகர் வருவோம். ஸ்ரீநகரில் இரண்டு மூன்று தியேட்டர்கள்தான் இருந்தன. அவையும் பாடாவதி தியேட்டர்கள். அது பற்றிக் கவலைப்படாமல், இரவுக் காட்சி முடிந்த பிறகு, சென்னையிலிருந்து வந்து சேர்ந்த பிரிண்ட்டின் ரஷ் பார்த்து முடித்து விட்டு, மறுபடி காரில் ஏறி 65 மைல் பயணப்பட்டு, பகல்காமை அடைந்தோமென்றால், மறுநாள் ஷூட்டிங் ஆரம்பமாகு முன்னர் 2-3 மணி நேரம்தான் தூங்க முடியும்! இது போல எத்தனை தடவை செய்தோம் என்று நினைவில்லை. குறைந்தபட்சம் 7-8 தடவையாவது இருக்கும். டெக்னீஷியன்கள் அனைவரும் சிரமம் பாராமல் அளித்த ஒத்துழைப்பு வணக்கத்துக்குரியது.

நட்சத்திரங்கள் மட்டும் என்ன? பூரணமாய் ஒத்துழைக்கத்தான் செய்தார்கள். அதி

டைரக்டர் ஸ்ரீதர்



னும் வைஜயந்தி மாலா... ஒரு சம்பவம் சொல்லட்டுமா? மலைச் சரிவில் பனிச்சார லில் சறுக்கி வரும் விளையாட்டுக்கு ஸ்கீயிங் என்று பெயர். கொஞ்சம் பயிற்சி பெற்றதுமே வைஜயந்தி தைரியமாக ஸ்கீயிங் செய்ய ஆரம்பித்து விட்டார். நடனம் ஆடிப் பழகியவர் அல்லவா! வேகத்தை அதிகரிக்கவும், குறைக்கவும் பாலன்ஸ் செய்யவும் இரு கைகளிலும் ஊன்றுகோல் போல இரு கம்பிகளைப் பிடித்துக் கொள்ள வேண்டும். வெண்பனி யில் பதிந்து வரும் அதன் முனை, கூரியதாக இருக்கும். ஒரு காட்சியில் வைஜயந்தி சறுக்கியபடியே வெண்பனியில் இறங்கி வருகிறார். காமிரா ஓடிக் கொண்டிருக் கிறது. திடீரென்று 'வீல்' என்ற அலறல்! வைஜயந்தி விழுந்து விட்டார். ஒரே பர பரப்பு. அவரால் எழுந்திருக்கவே முடிய வில்லை. காரணம், ஸ்கீயிங் ஊன்றுகோ லுடைய கூரிய முனை, அவர் தொடையில் பாய்ந்து விட்டதுதான்! ஷூட்டிங்கை கான் ஸல் செய்து விட்டு, வைஜயந்தியை அலுங் காமல் தூக்கிக் கொண்டு போய் காரில் ஏற்றி, டாக்டரிடம் விரைந்தோம். டாக்டர் சிகிச்சை அளித்த பின், ஓய்வெடுக்குமாறு கூறி விட்டார்.

அப்போது வைஜயந்தி என்ன சொன் னார் தெரியுமா? ''ஷூட்டிங்கை நிறுத்தி டாதீங்க. ரெண்டு நாள் மற்ற காட்சிகளை எடுங்க. அப்புறம் என் சம்பந்தப்பட்ட காட்சிகளை எடுக்கலாம்'' என்றார்!

நான் தைரியம் அடைந்து நன்றி கூற, வைஜயந்தி தொடர்ந்தார் :

''ஸார்! தப்பித் தவறி கூட எனக்குக் காயம் பட்ட விவரம், அம்மாவுக்குத் (பாட்டி யதுகிரியை அப்படிதான் அழைப் பார் வைஜயந்தி) தெரியக் கூடாது. தெரிந் தால் ரகளை பண்ணி விடுவார். மெட்ரா ஸுக்குத் திரும்பலாம் என்று கூட ஆரம் பித்து விடுவார்! உங்களுக்கு ரொம்ப நஷ்ட மாகி விடும்.''

அவர் யோசனைப்படியே நடந்து கொண்டோம். வைஜயந்தி, வலியைப் பொருட்படுத்தாமல் எங்களுடன் ஸ்பாட்டி லேயே இருந்து ஓய்வு எடுத்துக் கொண் டார். ஓட்டலில் தங்கினால் பாட்டிக்குத் தெரிந்து விடுமே! ஒரு சமயம் உயரமான ஒரு மலைப் பகுதிக்குப் போக எல்லோரும் குதிரையில் ஏறிச் சென்றோம். குதிரை ஏற முடியாத வைஜயந்தியை நாற்காலியில் அமர்த்தி, டோலி போல் தூக்கி வரச் செய் தோம்! காயம் ஓரளவு ஆறியதும் வைஜயந்தி ஷூட்டிங்கில் மறுபடி கலந்து கொண்டார்.

பனிச்சறுக்கல் விளையாட்டு மட்டு மல்ல, water skiing எனப்படும் நீர் மேல் விரையும் விளையாட்டிலும் பட ஷூட்டிங் குக்காகவே ஈடுபட உற்சாகத்துடன் முன்வந் தார் வைஜயந்தி. அதாவது, விசைப்படகு விரைய, அதன் பின்புறம் உள்ள கயிற்றைப் பிடித்துக் கொண்டு, ஒரு பலகை மேல் நின்றவாறு படகு வேகத்துக்கு நீர்மேல் சறுக் கியபடி செல்வது. இந்தக் காட்சியைப் படம் பிடிக்கத் தொடங்கிய போதுதான் ஒரு அதிர்ச் சியான செய்தி எனக்குத் தெரிய வந்தது. அது என்ன? அடுத்த வாரம் சொல்கிறேனே!

படம் உதவி :

ஃபிலிம் நியூஸ் ஆனந்தன்

# சொத்துக்களை விற்கிறீர்களா?



**என் எச் பி 9% கேபிடல் பாண்டுகளை வாங்குங்கள். நிலம், வீடுகள், பங்குகள், விமானங்கள், நகைகள் போன்ற நீண்டகால சொத்துக் களை விற்று மூலதன இலாபத்திலே 100% வரி விலக்குப் பெறுங்கள். என்எச்பி 9% கேபிடல் பாண்டுகளினால் உங்களுக்கும் சரி, உங்கள் மூலதனத்திற்கும் பெருமளவு ஆதாயங்கள் உண்டு.**

- உங்கள் முதலீடு ஆண்டொன்றுக்கு 9% வட்டி ஈட்டும். இது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வழங்கப்படும்.
- அல்லது முதலீடு செய்த தேதியிலிருந்து ரூ. 1000-க்கு ரூ. 240 என்னும் விகிதத்தில், முழு கால வரம்பாகிய 3 ஆண்டுகளுக்கும் தள்ளுபடியின் அடிப்படையில் முன் கூட்டியே ஆண்டொன்றுக்கு 9% என்னும் விகிதத்தில் வட்டியை பெற்றுக் கொள்ளவும் செய்யலாம். இதில் இடைக்காலமாகிய 3 மாதங்களுக்கான வட்டியும் முழுமையாக அடங்கும். அதனால் ஒரு நாளைய வட்டியைக்கூட நீங்கள் இழப்பதில்லை.
- வருமான வரி சட்டம் 1961, பிரிவு 54 E -ன் கீழ் மூலதன இலாப வரிக்கு விலக்குண்டு.
- வட்டித் தொகையின் மீது, அது வழங்கப்படும் நிலையில் வரி கழிக்கப்படாது.
- சொத்து வரி சட்டம் 1957, பிரிவு 5 (1)(xvii) மற்றும் 5(1A) இவற்றின் கீழ் ரூ. 5 இலட்சம் வரையிலான தொகைக்கு, இதர தகுதியுள்ள ஆஸ்திகளுடன் வரி விலக்கு உண்டு.
- வருமான வரி சட்டம் 1961, பிரிவு 80L-ன் கீழ் வட்டித் தொகைக்கு வரி விலக்கு உண்டு.
- இது சம்பந்தமான, செலுத்தும்-செலவுகள் என் எச் பியைச் சார்ந்ததாகும்.
- நாட்டிலுள்ள 150க்கும் மேற்பட்ட இடங்களில் ஆண்டு முழுதும் சுலபமாக இது கிடைக்கும்.
- வீடு கட்ட நிதியுதவி வழங்குவதில் நாட்டின் தலையாய நிறுவனமாகிய எமது முக்கிய குறிக்கோளே, அனைவரும் வீடு கட்ட வேண்டும், அதற்கான நிதியுதவியை அதிகரிக்க உதவ வேண்டும் என்பதே. ஆகையால் இதிலே முதலீடு செய்வதால், நாட்டில் பலர் வீடு கட்டிட நிதியுதவி செய்த மன நிறைவும் கிடைக்கும்.

**விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கும்/ஏற்கப்படும் இடங்கள் :** நேஷனல் ஹவுஸிங் பேங்க் அலுவலகங்கள் (பம்பாய் & டில்லி) • **கேன்ஃபினா அலுவலகங்கள்** • இந்த இஷ்யூவிற்கான 9 பாங்கர்களது, 51 இடங்களிலுள்ள 142, **கிளைகள் :** அலகாபாத் பாங்க், ஆந்திரா பாங்க், பாங்க் ஆஃப் பரோடா, கனரா பாங்க், விடியாங்க் (சாகர் பவன், பம்பாய்), ஃபேர்க்ரோத் பைனான்ஷியல் சர்வீஸஸ், இந்தியன் பாங்க், பஞ்சாப் நேஷனல் பாங்க், ஸ்டேட் பாங்க் ஆஃப் மைசூர், மற்றும் தி வைஸ்யா பாங்க் லிட்.

NATIONAL HOUSING BANK
YOU GAIN THE NATION GAINS
9% CAPITAL BONDS

நேஷனல் ஹவுஸிங் பேங்க்

(ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியாவினால் முற்றும் உடமையாக்கப்பட்டது)

வீடு கட்டும் துறைக்கு புதிய பாதை வகுக்கிறது

3 வது மாடி, பாம்பே லைஃப் பில்டிங், அக்டர்வலின் மேலே, 45 வீர் நரிமன் ரோடு, பம்பாய் 400 023. ஃபோன் : 222702, 224347

6 வது மாடி, இந்துஸ்தான் டைம்ஸ் ஹவுஸ், 18-20, கஸ்தூர்பா காந்தி மார்க், புதுதில்லி 110001. ஃபோன் : 3712016, 3712036

FORTUNE 45 Tam

## பொன் விழா ஆண்டு : தங்க நகைப் பரிசு - 9




என் நண்பன் கோவிந்த் மிகவும் ஏழைக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த சூழ் நிலையால் கர்நாடக சங்கீதப் பரிச்சயம் இல்லாமல் சினிமாப் பாடல்களின் தீவிர ரசிகனாக இருந்து வந்தான். ஆனால் இரு வருட்செல்வர் படத்தில் வரும் 'மன்னவன் வந்தானடி' பாடல் மட்டும் அவனை மிகவும் கவர்ந்தது. அப் பாடல் கல்யாணி ராகத்தில் அமைந்தது என்று அவனிடம் சொல்லியிருந்தேன். அவன் ரசனையை மேம்படுத்த மகாராஜபுரம் சந்தானம் கச்சேரிக்கு ஒரு முறை அழைத்துச் சென்றேன். கல்யாணி ராக ஆலாபனையைக் கேட்டு அவன் முகம் பிரகாசமாகி இது 'கல்யாணி'தானே என்று ஆர்வமுடன் கேட்டான். மறுநாள் முதல் அவனுக்குத் தெரிந்த சினிமாப் பாடல்களின் ராகங்களை என்னைக் கேட்டு டயரியில் குறித்துக் கொண்டு இப்படியே தன் அறிவை பெருக்கி, சுமார் 100 ராகங்களைக் கண்டுபிடிக்கும் திறன் பெற்று இன்று தீவிர கர்நாடக சங்கீத ரசிகனாகி விட்டான்! கல்யாணியின் சகல பிடிகளையும் உள்ளடக்கிய மன்னவன் வந்தானடி பாடலை இன்னும் நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறான்.

- ஆர். ராஜாராம், சென்னை - 28.

பாலு ஜுவல்லர்ஸ் வழங்கும் ஒரு சவரன் பெறுமானமுள்ள பொன் நகைப் பரிசு பெறுபவர் :

ஆர். ராஜாராம்,
6, நார்டன் 2வது தெரு,
சென்னை - 600 028.




## பாதை அமைத்த பாடல்

### ஏர்முனைக்கு மேல் எது?

என் திருமணப் பேச்சு வீட்டில் அடிபட்டது. சர்க்கார் உத்தியோகத்தில் நல்ல சம்பளத்தில் ஒரு வரன். விவசாயத்தைத் தொழிலாகக் கொண்ட படிப்பு அதிகம் இல்லாத மற்றொரு வரன். 'எது நல்ல வரன்?' என்று வீட்டில் ஒரே குழப்பம். என் தந்தை முடிவை என்னிடமே விட்டு விட்டார். எனக்குத் தடுமாற்றம். இது சமயம் எனது வீட்டில் அனைவரும் சினிமாவுக்குக் கிளம்பினோம். அந்தச் சினிமாவில், ''ஏர்முனைக்கு மேல் இங்கு எதுவுமே இல்லை. என்றுமே நம் வாழ்வில் பஞ்சமே இல்லை'' என்பதாக விவசாயத்தின் புகழ் பாடலாக வந்தது. மற்ற தொழில்களில் உள்ளவர்கள் பையை எடுத்துக் கொண்டு அரிசியைத் தேடி வாங்க வேண்டி இருக்கும். ஆனால் விவசாயி வீட்டில் அந்த நிலை இல்லை. இதை உணர்ந்து, என் தந்தையிடம் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்ட மாப்பிள்ளையையே முடித்து




விடும்படி சொன்னேன். விவசாயத்தில் என் கணவர் நன்கு பாடுபடுவதால் வீட்டில் பிரச்னையே இல்லை.

- எருக்கட்டான்சேரி, ஏ. கற்பககந்தரி.

### சங்கடத்தில் ஆழ்த்திய சினிமா பாட்டு

**என்** சிநேகிதியின் அம்மாவிற்கு சினிமாப் பாட்டு, டான்ஸ் எல்லாம் பிடிக்காது. பெண்ணை நல்ல துதிப் பாடல்களைப் பாடும்படி கூறுவாள். என் சிநேகிதியோ நேர்மாறாய் சினிமாப் பாட்டையே எப்பொழுதும் பாடிக் கொண்டிருப்பாள். ஒருநாள் மாலை வீட்டில் எவரும் இல்லாத பொழுது என் சிநேகிதி, ''சிட்டுக் குருவி, சிட்டுக் குருவி, சேதி தெரியுமா?'' என்ற பாட்டைப் பாடிக் கொண்டிருந்தாள். ''பட்டு மெத்தை விரிச்சு வைச்சேன். சும்மா கிடக்குது'' என்ற வரியைப் பாடுகையில், வெளியே ஜன்னல் வழியாய் ஒருவன் எட்டிப் பார்த்து, ''இரு, இரு நான் வரேன்'' என்று கூறவே, அவளுக்கு ரொம்பவும் அவமானமாகி விட்டது. அதிலிருந்து அவள் சினிமாப் பாட்டு பாடுவதை அறவே விட்டு விட்டாள்.

- சென்னை, எஸ். ராஜேஸ்வரி.

### முருகனைப் பாடினோம் முன்னுக்கு வந்தோம்

**வி**நாயகர் கோவிலில் நவராத்திரி முடிந்து கந்தசஷ்டி விழா. முருகனுக்குத் திருக்கல்யாணம். காப்பு, ஊஞ்சல், நலுங்கு என்று ஒவ்வொரு நிகழ்ச்சியாக முடிந்து தீபாராதனை நடக்கும் நேரம். அர்ச்சகர், ''யாரேனும் பாடுங்கள்'' என்று கூற, என் தோழிகள் என்னைப் பாடச் சொன்னார்கள். உடனே நானும் என் பெண்ணுடன் சேர்ந்து 'ஜேசுதாஸ்' பாடிய 'காண ஆயிரம் கண் வேண்டும்' என்ற முருகன் பாடலைப் பாடினேன். அதுவே என் வாழ்க்கையில் திருப்பு முனையாக அமைந்தது. அன்றிலிருந்து அந்தக் கோவிலிலும், பக்கத்துக் கோவில்களிலும் நடக்கும் விழாக்களில் எங்கள் இசை நிகழ்ச்சி நடைபெறும். ரேடியோவிலும் பாட ஆரம்பித்தோம். ஐந்து வருடங்களுக்குப் பிறகு இப்பொழுது நாங்கள் வானொலியில் B-High grade Artist ஆக இருக்கிறோம்.


- திருநெல்வேலி,
லக்ஷ்மி முத்துகிருஷ்ணன்.

### மனிதனாய் மாற்றிய எம். ஜி. ஆர். படப் பாடல்

படிப்பும் பண்பும் நிறைந்த ஓர் உயர்ந்த குடும்பத்திலே பிறந்த நான் தீய சகவாசத்தின் காரணமாய் மது அருந்தும் பழக்கத்திற்கு அடிமையாகிச் சீரழிந்து வந்தேன். என் மீது மிக்க அன்புடையோரின் அறிவுரைகளையெல்லாம் புறக்கணித்தே வந்தேன்.

ஒருநாள் எம். ஜி. ஆர். நடித்த 'ஒளி விளக்கு' படம் பார்க்க நேர்ந்தது. 'தைரியமாகச் சொல் நீ மனிதன்தானா?' என்ற பாடல் என் நெஞ்சை உலுக்கி விட்டது. மதுவின் ஆளுகையில் நானும் எத்தனை மோசமானவனாயிருப்பேன் என்று எண்ணிப் பார்த்தேன். மிருக நிலையிலிருந்து மனிதத் தன்மைக்கு என்னை மாற்றிய அப்பாடலுக்கு நான் கடமைப் பட்டவன்.

- சென்னை - 90, பாண்டியன்.



# ஃப்ரிஜ் பரிசுத் திட்டம் - போட்டி முடிவு

காலதாமதத்துக்கு நேயர்கள் மன்னிப்பார்களாக. பல்லாயிரக்கணக்கான வாசகர்களிடமிருந்து வந்து குவிந்து விட்ட கூப்பன்களை அவசரப்படாமல் கவனமாகப் பரிசீலனை செய்ததில் அதிகபட்சமாக 21 தவறுகளையும் திருத்தங்களையும் சரியாக எழுதியவர் ஐந்து பேர்.

இவர்களில் இருவர் இப்படியும் இருக்கலாம்;. அப்படியும் இருக்கலாம் என்பது போல் ஒன்றுக்கு மேற்பட்ட தவறுகளையும் திருத்தங்களையும் தந்திருந்ததால் ஒதுக்கப்பட, பாக்கி மூன்று பேர். இம் மூவரில் திருவுளச் சீட்டில் வெற்றி பெற்றவர் :

ஏ. என். அழகம்மை,
C/o காமாட்சி மெடிகல்ஸ்,
715 -A, மெயின் ரோடு,
மேலூர் - 625 106.

ஆறுதல் பரிசு பத்து பேருக்குத் தலா ரூ 25 என்று குறிப்பிட்டிருந்தோம். இதன்படி 21 தவறுகளையும் திருத்தங்களையும் சரியாக எழுதிய மற்ற இருவரும் தலா ரூ 25 பெறுகிறார்கள் :

1. எம். மங்கையர்க்கரசி,
97, ராமலிங்கனார் மெயின் தெரு,
திருவண்ணாமலை - 606 602.
2. அ. மணிவாசகன்,
37, III க்ராஸ் - மேற்கு,
வித்யா நகர்,
சேலம் - 636 003.

அடுத்து, 20 தவறுகளையும் திருத்தங்களையும் சரியாகச் சுட்டிக்காட்டி எழுதியுள்ள எட்டு பேரும் தலா ரூ 25 பெறுகின்றனர் :

1. ஸ்ரீவை ஸ்ரீவித்யா,
(விலாசம் இல்லை)
2. குமாரி அ. ரேவதி,
33 B/2, புது அக்ரஹாரம்,
திண்டுக்கல் - 624 007.
3. பி. ஜெயலக்ஷ்மி,
5, சோமு தெரு,
சேலம் - 636 001.
4. ஏ. ஜெகதாம்பாள்,
A 16, லவுத் இண்டியா விஸ்கோஸ்
ஊழியர் குடியிருப்பு,
சிறுமுகை - 641 302.
5. மு. க. தி. க. பாலசுப்பிரமணியன்,
1/97, திருவண்ணாதாபுரம்,
மேற்பத்தம் அஞ்சல்,
(வழி) திருநெல்வேலி - 627 353.
6. உஷா சீதாராமன்,
பிளாட் எண் 187,
ஸ்ரீ பிருந்தாவன் நிலையம்,
என். ஜி. ஜி. ஓ. காலனி,
பாகலூர் சாலை,
ஓசூர் - 635 109.
7. திருமதி கிரிஜா கணேஷ்பாபு,
''கரபி''
14, திருமுருகன் சாலை,
சாமிநகர்,
சிட்லபாக்கம்,
சென்னை - 64.
8. திருமதி. ராஜலக்ஷ்மி பத்மநாபன்,
43/98-1 ஸ்ரீவராஹம் தெரு,
அயோத்யா நகர் அருகே,
திருவனந்தபுரம் - 695 009.

இடையாக மேலும் ஒன்று. இப்படியும் இருக்கலாம் அப்படியும் இருக்கலாம் என்று ஒன்றுக்கு மேற்பட்ட விடைகளை எழுதிய போதிலும் அவற்றுள் சரியானபடி 21 தவறுகளையும் திருத்தங்களையும் எழுதி விட்ட இருவருக்கும் கூடுதல் ஆறுதல் பரிசாகத் தலா ரூ 25/- வழங்குகிறோம் :

1. ஆ. ராஜராஜன்,
187, வீலர் ரோடு,
காக்ஸ் டவுன்,
பெங்களூர் - 560 005.
2. எஸ். சாருமதி,
No. 1172 - B -31
BDA Flats,
Austin Town Layout,
நீலஸாண்ட்ரா,
பங்களூர் - 560 047.


போட்டியில் பங்கேற்ற இதர பல்லாயிரக் கணக்கான வாசக அன்பர்களுக்கு நன்றியும் வாழ்த்துக்களும். BETTER LUCK NEXT TIME!

- ஆசிரியர்.

பாதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2344145; சர்க்குலேஷன் மானேஜர் : 2344190; விளம்பரம் - சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா - உள்நாடு: ரூ. 156/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு: ரூ. 78/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 200/- விமானத் தபால்: ரூ. 525/-.



REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka




## ஜண்டு பாம்

## ஜலதோஷம், தலைவலி மற்றும் நோவுகளை நொடியில் நீக்குகிறது.

காலை முதல் மாலை வரை ஓயாத ஒழியாத வேலை. கூடவே ஜலதோஷத்தின் தொல்லையும் சேர்ந்து விட்டால் சங்கடந்தான் எனவேதான் ஜண்டு பாம். ஜலதோஷம் மட்டும் இன்றி தலைவலி, முதுகுவலி, இடுப்பு வலி, உடல்வலி மற்றும் சுளுக்கு வலிகளிலிருந்தும் குணம் அளிக்கிறது.

மற்ற பாம்களோடு ஒப்பிடும்போது ஜண்டுபாம் கூடுதல் வீரியம் கொண்டது நிறமற்றது. எனவே கறை படியுமோ என்ற பயமில்லை. பிசுபிசுப்பற்றது. அதனால் வீட்டிலோ, வெளியிலோ உபயோகிக்கலாம். நறுமணமும் கொண்டது. கொஞ்சமாக உபயோகித்தாலே போதும். அதனால் சிக்கனமானது. மிருதுவான சருமத்திற்கும் இதமானது. ஆகவேதான் தாய்மார்கள் தங்கள் குடும்பத்தினருக்கு ஜண்டுபாமையே தடவ விரும்புகிறார்கள்.

சீசாவின் மேல் இருக்கும் சிகப்பு சீலைப் பார்த்து வாங்குங்கள்.

5, 10 மற்றும் 30 கிராம்களில் கிடைக்கிறது.




**ஜண்டு பாம்** வலிகளை நீக்கும் பாம்

12726 TAM